# புதிய வாழ்க்கை



# புதிய ஜீவன்

எல். ஜெட்டர் வாக்கர்

INTERNATIONAL CORRESPONDENCE INSTITUTE
P. O. BOX 5036, BANGALORE-560 001.

CL 1110-TL

# பொருளடக்கம்


பாடம் | | பக்கம்
--- | --- | ---
| முதலாவதாக நாம் சற்று உரையாடுவோம் | |
1. | புது வாழ்வை ஆரம்பிக்கவும் | ... 8
2. | நடக்க கற்றுக் கொள்ளுதல் | ... 19
3. | நமது பரலோகத்தந்தையின் சத்தத்தை கவனியுங்கள் | 32
4. | நீவளர விரும்புகின்றாயா ? | ... 45
5. | புதிய ஜீவியம்-புதிய நடவடிக்கை | ... 57
6. | உங்களது புதிய நியமம் | ... 75
7. | நமக்கு துணை செய்பவர் ஒருவர் உண்டு | ... 82
8. | உங்கள் ஜீவியம் ஓர் விளக்காய் இருக்கிறது | ... 94
9. | சந்தோஷமுள்ள ஒரு குடும்பத்தை பெற்றிருப்பது எங்ஙனம் ? | ...110
10. | உங்கள் புதிய சுதந்திரம் (விடுதலை) | ...122
| இறுதி வினாத்தாள் | |



Edition 1987 Copies 2,500


---


© 1985 All Right Reserved


International Correspondence Institute
P. O. Box 5036 Bangalore, India
D/1984/2145/21.

Printed at : TECHNO PRINTERS B'lore-560 045.

# முதலாவதாக நாம் சற்று உரையாடுவோம்



இச்சிறுப் புத்தகத்தை படிப்பதற்கு முன் இப்புத்தகத்தைக் குறித்து சற்று உரையாடுவோம். இப்புத்தகம் நீங்கள் எல்லா நேரங்களிலும் படித்து பயன் பெறும்வகையில் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் உங்களுக்குபோதிக்கும் வகையிலும் உங்களுடைய ஒரு சில கேள்விகளுக்கு பதில் அளிக்க கூடியவகையிலும் எழுதப்பட்டுள்ளது. இதுப்படிப்படியாய் நீங்கள் அறிந்துக் கொள்ளக் கூடிய வகையில் எழுதப்பட்ட ஒரு விசேஷ புத்தகமாகும்.

இப்புத்தகம் ஒரு கையடக்கமான சிறுபுத்தகம். இதை நீங்கள் கையில் எடுத்து சென்று உங்களுக்கு கிடைக்கும் நேரங்களில் படிக்கக்கூடியவகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்திலுள்ள முழு பாடத்தையும் ஒரே நேரத்தில் படிக்க நேரம் கிடைக்காத நிலைமையிலும், உங்களுக்கு கிடைக்கின்ற நேரங்களில் உங்கள் வசதியின்படி படிக்கலாம். இப்புத்தகத்தைப் படித்து உங்களால் என்னச்செய்ய இயலுமோ, எப்பொழுது செய்ய இயலுமோ எவற்றைச் செய்ய இயலுமோ அவற்றை அவ்வப்போது செய்து முடியுங்கள்.

இப்புத்தகம் ஒரு பயிற்சி புத்தகம் போல் உருவாக்கப்பட்டுள்ளது. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின்படி "நீங்கள் செய்ய வேண்டியது" என்னும் பகுதி ஒவ்வொரு பாடத்திற்கும் கொடுக்கபட்டுள்ளது. பாடங்களை கவனமாய் படித்து நீங்கள் செய்ய வேண்டியனவற்றை கவனமாய் செய்ய வேண்டும்,

## நீங்கள் செய்ய வேண்டியது

கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளின் சரியான பதிலை மாதிரியின்படி 'X' குறியிட்டு காட்டுக

1. இது எவ்வகையான புத்தகம் ?

X a) சிறப்பான புத்தகம்

....b) சாதாரண புத்தகம்

2. இப்புத்தகம் உங்களுக்கு

...a) வகுப்பு அறையில் போதிக்க பயன்படுவது

X b) எல்லா நேரங்களிலும் படித்து பயன்பெறச் செய்வது.

இப்பகுதியின் கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான பதில்கள் நீங்கள் 'X' குறியிட்டது சரியா தவறு என உங்களுக்கு போதிக்கிறது. மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு குறிக்க வேண்டிய பதில்கள் 1a) சிறப்பான புத்தகம் 2b) எல்லா நேரங்களிலும் படித்து பயன்பெறச் செய்வது.

<u>கேள்விகள் பதில்கள் குறித்து ஒரு சில குறிப்புகள்</u>

* பதில்களை தெரிந்தெடுக்கும் போது உங்கள் கவனத்தை சிதறவிடக் கூடாது.
* இப்பகுதியின் மூலம் உங்கள் புரிந்துக் கொள்ளும் தன்மையை சோதித்தறிக.
* ஒவ்வொருப்பாடத்தையும் படிக்கும்பொழுது அப்பாடத்தின் முக்கிய கருத்தை மனதில் கொள்ளுக.

ஒவ்வொருப் பாடத்திலும் உள்ள 'நீங்கள் செய்ய வேண்டிய பகுதிகள்' அடியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதில்களும் கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் பதில்களை தேர்ந்தெடுப்பதற்கு முன் கீழேக் கொடுக்கப்பட்டுள்ள பதில்களை பார்க்காமல் இருப்பதற்கு ஒரு சிறு காகித துண்டை வைத்து அதை மறைத்துக்கொள்வது நல்லது. நீங்கள் உங்கள் பதில்களை குறிப்பிட்ட பின் கொடுக்கப்பட்டுள்ள சரியான பதில்களை பார்த்து சரிசெய்துக் கொள்க.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் 'X' என்னும் குறியிடவும்.

3. இக்கேள்விகளும் பதில்களும்

....a) உங்கள் புரிந்து கொள்ளும் தன்மையை சோதித்தறியும்

....b) நீங்கள் படித்த பாடத்தைப்பற்றிய பொது அறிவை சோதிக்கிறது.

பதில் : 3a) உங்கள் புரிந்து கொள்ளும் தன்மையை சோதித்தறியும்

இப்புத்தகத்தின் சில இடங்களில் "நீங்கள் செய்ய வேண்டியது'' என்னும் பகுதிக்கு கீழே வேறு சில பயிற்சிகளும் செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இப்பயிற்சிகள் பாடங்களை தெளிவாய் புரிந்துக் கொள்ள உங்களுக்கு உதவி செய்வதாய் உள்ளது. ஆகவே அவைகளையும் செய்ய மறந்து போகக்கூடாது.

இப்புத்தகம் உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் எழுதப்பட்டது. இது மிகவும் உபயோகமும் ஆசீர்வதமாகவும் இருக்கும். ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு இது உபயோகமாக இருந்தது. இது உபயோகித்தால் மாத்திரம் இது உங்களுக்கு நன்மையாக இருக்கும். ஆகவே கற்றதை உங்கள் அனுபவத்தில் கொண்டுவர முயற்சியுங்கள்.

## உங்கள் விடைத்தாள்

இப்புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் விடைத்தாளை பூர்த்தி செய்து எங்கள் அலுவகத்திற்கு அனுப்பவும். அது திருப்திக்கரமாயிருப்பின் அடுத்த பாடங்களை அனுப்பி வைப்போம்.

---

## ஜெபம்

புது ஜீவன் என்ற பாடங்களுக்காக உமக்கு நன்றி. ஆண்டவரே, இதனை நல்முறையில் கற்றுக்கொள்ள உதவிச் செய்யும். இதன் மூலம் நான் நல்ல கிறிஸ்தவனாக உதவி செய்யும். இயேசுவின் நாமத்திலே, ஆமென்

பாடம் 1

# புது வாழ்வை ஆரம்பிக்கவும்



## இந்தப்பாடத்தில் நீங்கள் படிப்பது

என்ன நடக்கிறது?
கிறிஸ்துவில் புது ஜீவன்
எப்படிப்பட்ட ஜீவன்?
இதைக்குறித்து நீங்கள் என்னச் செய்ய வேண்டும்
உங்கள் புதிய குடும்பம் : உங்கள் தகப்பன்
உங்கள் புதிய குடும்பம் : உங்கள் மூத்த சகோதரன்
உங்கள் புதிய குடும்பம் : பரிசுத்த ஆவியானவர், உங்கள் உதவியாளர்
உங்கள் புதிய குடும்பம் : இதர கிறிஸ்தவர்கள்

## என்ன நடக்கிறது?

இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சராக ஏற்றுக் கொண்ட நிமிடம் முதல் நீங்கள் ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பித்துள்ளீர்கள். முடிவில்லாத சந்தோஷம், வாழ்வு, ஆசீர்வாதம், அதிசயமான ஜீவியத்தை அவர் உங்களுக்குக் கொடுக்கிறார். நீங்கள் அவருக்கு உங்கள் பாவம் நிறைந்

ததும் தோல்வியுற்றதுமான ஜீவியத்தை கொடுத்தீர்கள். அவரோ உங்களுக்கு பாவத்தின்மேல் ஜெய ஜீவியத்தைக் கொடுக்கிறார். நீங்கள் தேவனுடைய பிள்ளை என்ற மகிமை யான ஜீவியத்தோடு புதிய ஜீவியத்தை துவங்குகிறீர்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையை கண்டு பிடித்து X அடையாளத்தை போடவும்.

1. புதிய ஜீவன் எங்கிருந்து வருகிறது ?

....a) கிறிஸ்தவனாக முயற்சிப்பதினால்
....b) ஜீவனைக் கொடுக்கும் இயேசு கிறிஸ்து மூலமாய்
....c) சபையில் சேர்வதின் மூலமாய்

நீங்களே விடை எழுதும் வரை "நீங்கள் எதை குறிக்க வேண்டும்" என்ற பகுதியின் விடையை மறைத்து வைக்கவும்.

விடை : 1b) ஜீவனைக் கொடுக்கும் இயேசு கிறிஸ்து மூலமாய்

# கிறிஸ்துவில் புதிய ஜீவன்

இயேசு கிறிஸ்து உங்களுக்குள் ஜீவிக்கிறபடியால் இந்த புதிய ஜீவன் உங்களுக்கு கிடைத்துள்ளது. தேவனு டைய வார்த்தையாகிய வேதாகமம், இதைக்குறித்து உங்க ளுக்கு சொல்லுகிறது.

கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாய் உங்க ளுக்குள் இருக்கிறார். கொலோசெயர் 1:27

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X என்னும் குறிப்போடவும்

2. கிறிஸ்துவிலிருந்து வரும் ஜீவன் உங்களுக்குள் இருக்கிறது என்று எதிலிருந்துக் கற்றுக்கொள்ளலாம்?

....a) தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து

....b) விஞ்ஞானத்திலிருந்து

....c) மற்ற மதங்களிலிருந்து

விடை : 2a) தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து

## எப்படிப்பட்ட ஜீவன்

கிறிஸ்து உங்களுக்குள் ஜீவிப்பதால் நீங்கள் சீஷர்களாய் மாற்றப்பட்டிருக்கிறீர்கள். சிலர் கிறிஸ்தவ ஜீவியம் மந்தமும், சிறைவாசம் பேன்ற ஜீவியம் என்று கருதுகிறுர்கள். ஆனுல் கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்க்கை முழுமையும் சந்தோஷம் நிரம்பியதும் ஆசீர்வாதம் நிரம்பியதாகவும் இருக்கிறது.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X என்னும் குறிப்போடவும்

3. இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டப்பிறகு நீங்கள் துவங்கும் வாழ்க்கை

....a) துக்கம் நிறைந்தது

....b) உங்கள் கடந்தகால ஜீவியத்தை விட சந்தோஷமுடையது

....c) சிறை வாசம் போன்றது

விடை : 3b) உங்கள் கடந்தகால ஜீவியத்தை விட சந்தோஷமுடையது.

யோவான் 10:10 "நானே அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்."

## நீங்கள் செய்ய வேண்டியது

4. யோவான் 10:10ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளை மனப்பாடம் செய்யவும்.

சரியான விடையருகில் X என்னும் குறிப்போடவும்

5. இயேசு கிறிஸ்து உங்களுக்கு


....a) பாவ தண்டனை அளிக்க வந்தார்

... b) நித்திய ஜீவனை அளிக்க வந்தார்

விடை : 5b) நித்திய ஜீவனை அளிக்க வந்தார்

இயேசு தரும் இந்த புதிய ஜீவியத்தில் நீங்கள் புதிய உணர்வையும், புதிய வெளித்தோற்றத்தையும், புதிய நோக்கங்களையும், வாழ்வதற்குரிய புதிய எண்ணங்களையும் கண்டடைவீர்கள்.

குற்றமுள்ள உங்கள் மனசாட்சி நீங்கிப்போனது, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டது. இயேசுவின் அன்பும் உடன் சகோதர அன்பும் உங்கள் இருதயத்திற்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அளிக்கிறது. இயேசுவின் பிரசன்னமும் வல்லமைவும், நீதியும், உங்களை புதிய குணமுள்ளவர்களாக்குகிறது. இயேசுவின் சித்தத்தை செய்யக் கூடியவகையிலும், மற்றவர்களுக்கு உதவி செய்ய கூடிய வகையிலும், நமக்கு புதிய வாஞ்சைகளும், வழிநடத்துதலும், இப்புதிய ஜீவியத்தில் உண்டாகின்றன.




ஓர் கம்பளிபுழு அழகிய வண்ணத்துப் பூச்சியாய் மாறுவதை விட, உங்கள் அனுபவங்களில், பரிசுத்த ஆவியானவர் பெரிய மற்றங்களை உண்டுபண்ணுவார். நீங்கள் கம்பளிப் புழுவைப் போல வாழ் நாள் எல்லாம் நகர்ந்து செல்ல வேண்டிய தேவையில்லை. கிறிஸ்து உங்கள் வாழ்க்கையை

மாற்றி ஆவிக்குரிய சிறகுகளை உங்களுக்கு அளிப்பார். நீங்கள் மறுபடியும் பிறந்து இனி நீங்கள் ஒருபோதும் பாவி அல்லாத நிலமையை அடையலாம். நீங்கள் இயேசுவின் பிள்ளையாய் காணப்படுவீர்கள்,

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X என்றும் குறிப்போடவும்

6. கீழ்காண்பவைகளில் எது உங்கள் புதிய ஜீவியத்தில் இருக்கவேண்டும் ?
   ....a) புதிய வெளித்தோற்றம்
   ....b) மிகுந்த செல்வம்
   ....c) நண்பர்களிடையே கீர்த்தி பெறுதல்
7. நீங்கள் மறுபடியும் பிறந்து ஆரம்பிக்கும் உங்கள் புதிய வாழ்க்கை
   ....a) எல்லாப் பிரச்சனைகளுக்கும் நீங்கலாயிருக்கும்
   ... b) தேவனையும் மற்றவர்களையும் நேசிக்கும் அன்பில் நிறைந்திருக்கும்
   ....c) எந்தவகையிலும் உங்களைத் திருப்தி செய்து கொள்ள விடுவிக்கப்பட்டிருக்கும்.

விடைகள் :6a) புதிய வெளித்தோற்றம் 7b) தேவனையும் மற்றவர்களையும் நேசிக்கும் அன்பால் நிறைந்திருக்கும்

## இதைக்குறித்து நீங்கள் செய்ய வேண்டியதென்ன ?

தேவனுடைய குடும்பத்தில், புதிய குழந்தையைபோன்று நீ இருப்பதால், அவர் அன்பின் பாதுகாப்பில் ஆனந்தப்படுவாய். நீ வளமுடன், உறுதியாயிருக்க அவர் அளிக்கும் நன்மைகளை, மறுக்காமல் எற்றுக்கொள்ள வேண்டும். அவர் உனக்கு புதிய சுபாவங்களை அளித்து இருப்பதினால், அவைகள் விருத்தியடைய உன் பகுதியை நீ செய்யவேண்டும்.


இப்புத்தகம் உனது புதிய சுபாவம் விருத்தியடைய உனக்கு வழிக்காட்டும். நீ இப்பாடங்களை கருத்தூன்றி படிக்கும்போது உனது பாக்கியங்களையும் ஓர் தேவனுடைய பிள்ளைக்கான பொறுப்பையும்கற்றுக்கொள்வாய். மட்டுமல்ல இனி உன் வாழ்நாளெல்லாம் சந்தோஷப்பட்டு களிகூருவாய். அதன்பின் இயேசு ஒரு நாளில், நீ தன்னோடு இருக்கும்படியாய் பரலோகத்திற்கு உன்னை அழைத்துச் கொள்வார். அங்கு உன் இருப்பிடம், இவ்வுகில் காணும் மிகவும் அழகியவற்றை விட ஆயிரமடங்கு அதிக அழகுள்ளதாய் விளங்கும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X குறியிடவும்

8. இப்புத்தகம் எதைப்பற்றியது ?
   - ...a) நீங்கள் ஒரு சபை அங்கத்தினராக இருக்க வேண்டும் என்பதைப்பற்றியது
   - ...b) தேவன் தரும் உனது புதிய சுபாவத்தை பற்றியது
   - ...c) ஒரு கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்கள் அடங்கியது
9. இப்புத்தகத்தை நீங்கள் படிப்பதின் நோக்கம்
   - ....a) நற்சான்றிதழைப் பெற
   - ....b) மதத்தைக் குறித்து தர்க்கம் செய்ய
   - ....c) தேவபிள்ளைக்குரிய சிலாக்கியங்களை அறிந்து அனுபவிக்க

விடைகள் : 8b) தேவன் தரும் உனது புதிய சுபாவத்தை பற்றியது 9c) தேவப்பிள்ளைக்குரிய சிலாக்கியங்களை அறிந்து அனுபவிக்க



முக்கியகாரியம் என்னவென்ருல், நீ இயேசுவோடு கொண்டுள்ள ஐக்கியத்தில் நிலைத்திருந்து, அவர் உனக்களித்துள்ள ஜீவனுல் பெலனடைந்து அவரில் வளர வேண்டும்.

என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் . . . என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. யோவான் 15:4,5

ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிபட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.

கொலோசெயர் 2:6,7

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X குறியிடம்

10. நீ ஓர் உறுதியான தேவப் பிள்ளையாய் இருக்க செய்ய வேண்டிய முக்கிய காரியம் என்ன ?

....a) இயேசுவுடன் உள்ள ஐக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டும்

....b) இயேசுவைப் போலிருக்க முயற்சிக்க வேண்டும்

....c) மற்ற கிறிஸ்தவர்களை போல் நடிக்க வேண்டும்.

பதில் : 10a) இயேசுவுடனுள்ள ஐக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

## உங்கள் புதிய குடும்பம் : உங்கள் தகப்பன்

அண்ட சராசரங்களை உண்டாக்கிய சர்வ வல்லமை பொருந்திய தேவனே, உங்கள் அன்பின் தகப்பன். அவர் மிகவும் கண்டிப்பானவர் என்றும், அதிக தொலைவில் கண்காணுத இடத்தில் இருக்கிருர் என்றும் எண்ணுகிர்கள் உங்கள் அருகில் அவர் இருக்கிருர். உங்களது பிரச்சனைக

ளில் ஆர்வத்துடன் உதவி செய்ய விரும்புகிறவராய் இருக் கிறார்.

ஒரு பிள்ளை தனது தயவு நிறைந்த அன்புள்ள தகப்ப னிடம் சென்று எவ்வாறு உரையாடுமோ, அவ்வண்ணமே நீங்கள் மனம்திறந்து, நம்பிக்கையுடன் உங்கள் தகப்பனாகிய அவருடன் உரையாட வேண்டும் என்று அவர் விரும்புகின் றார். இரவிலோ, பகலிலோ, நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜெபத்தில் அவருடன் உரையாடுங்கள். உங்கள் பிரச்சனை கள் அனைத்தையும் அவரிடம் கூறுங்கள். அவரின் அளவற்ற ஆசீர்வாதங்களுக்காய் அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவர் உங்களை நேசிப்பது மட்டுமல்லாமல், உங்களை பாதிக் கும் எல்லா காரியங்களிலும் அக்கரையுள்ளவராயிருக்கிறார். நீங்கள் மனப்பாடம் செய்யப்பட்ட ஜெபத்தையோ, அல்லது அழகிய அடுக்குத்தொடர்களைக் கொண்டபதங்களை உபயோ கித்தோ ஜெபிக்க வேண்டியதில்லை. உங்கள் இருதயத்தில் உள்ள அனைத்தையும் அவரிடம் சொல்லுங்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X குறியிடவும்

11. இப்புதிய ஜீவியத்தில் தேவன் உங்களுக்கு
    ....a) மிகவும் தூரப்பட்ட ஒருவராயுள்ளார்.
    ....b) நேசிக்கும் அன்புத்தகப்பனாய் உள்ளார்.
12. நீங்கள் ஜெபம் பண்ணும்போது செய்ய வேண்டியது
    ....a) மனப்பாடம் செய்த ஜெபத்தை திரும்ப திரும்ப கூறிக்கொண்டிருக்க வேண்டும்.
    ....b) ஒரு தகப்பனிடம், ஓர் சிறு பிள்ளை மனம் திறந்து பேசி உரையாடுவதைப் போல இயேசுவோடு உரையாட வேண்டும்.

விடைகள்: 11b) நேசிக்கும் அன்புத்தகப்பனாய் உள்ளார் 12b) ஒரு தகப்பனிடம், ஓர் சிறுபிள்ளை மனம் திறந்து பேசி உரையாடுவதைப் போல் இயேசுவோடு உரை யாட வேண்டும்.

## உங்கள் புதிய குடும்பம், உங்கள் மூத்த சகோதரன்

தேவனுடைய குடும்பத்தில் இயேசுவே உங்களது மூத்த சகோதரனுயிருக்கிறார். அவர் உன்னை அதிகமாய் நேசித்த படியால் உன்னை இரட்சிக்கும்படியாக உனக்காக மரித்தார். பாவத்தின் மேல் வெற்றியுள்ள, மகிழ்ச்சிகரமான வாழ்க்கை நடத்த அவர் உன்னை குறித்து விரும்புகிறார். ஏனெனில் அவர் உன்னை இரட்சித்ததுமட்டுமின்றி உனக்கு ஒவ்வொரு நாளும் உதவி செய்கிறபடியால் அவருக்கு நன்றி செலுத்தவும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் X குறியிடவும்

13. இப்புதிய ஜீவியத்தில் இயேசு உங்களுக்கு

...a) இரட்சகராகவும், உங்கள் மூத்த சகோதரராக வும் இருக்கிறார்.

...b) கொடுமையுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார்

விடை : 13a) இரட்சகராகவும், உங்கள் மூத்த சகோதர ராகவும் இருக்கிறார்

## உங்கள் புதிய குடும்பம் : உதவியாளராகிய பரிசுத்தாவியானவர்

பரிசுத்தாவியானவர் உங்களால் புரிந்துகொள்ள இயலாத புதிய ஜிவியத்தையும் மறுபிறப்பையும் உங்களுக்கு அளித்தவர். அவரே உங்களை பாவசுபாவத்திலிருந்து மாற்றி, நீங்கள் தேவபிள்ளையாகும்படி செய்தவர்.

உங்கள் பழைய சுபாவத்துடன் இன்னும் உங்களுக்கு போராட்டம் இருந்து கொண்டிருக்கிறபடியால், பரிசுத்தாவியானவர் உங்கள் இருதயத்தில் வாசமாயிருந்து உங்களுக்கு உதவியளிப்பவராயுள்ளார். நீஙகள் விசுவாசத்திலும். கீழ்

படிதலிலும், அவருடன் ஒத்துழைப்பீர்களெனில், அவர் உங்களுக்கு எவற்றை செய்யவேண்டும் என்பதை போதித்து செய்யவேண்டியதற்கு தேவையான பெலனேயும் அருளுவார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் 'X' குறியிடவும்

14. புதிய ஜீவியத்தின் அற்புதத்தை உங்களில் உருவாக்கியவர்,
    ....a) சுவிசேஷகர்
    ....b) போதகர்
    ....c) பரிசுத்த ஆவியானவர்
15. நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருப்பது
    ....a) நீங்கள் தவறு செய்கையில் உங்களை தண்டிக்க
    ....b) உங்களுக்குள் வாசமாயிருந்து நன்மை செய்ய உதவிபுரிய
16. தேவன் உங்களை குறித்து விரும்புவதை, நீங்கள்
    ....a) தாஞகவே செய்வீர்கள்
    ....b) பரிசுத்த ஆவியானவர் உங்களை வற்புறுத்துவதிஞல் செய்வீர்கள்
    ....c) விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும், பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைப்பதால் செய்வீர்கள்,
17. நீங்கள் எதைச்செய்ய வேண்டுமென அறிந்து, அதனே செய்வது
    ....a) உங்கள் சுய அறிவால்
    ....b) உங்கள் மன உறுதியால்
    ....c) பரிசுத்த ஆவியானவரின் உதவியிஞல்

விடைகள்: 14c) பரிசுத்த ஆவியானவர் 15b) உங்களுக்குள் வாசமாயிருந்து நன்மை செய்ய உதவிபுரிய 16c) விசுவாசத்திலும், கீழ்படிதலிலும் பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைப்பதால் செய்வீர்கள் 17c) பரிசுத்த ஆவியானவரின் உதவியிஞல்

## உங்கள் புதிய குடும்பம், இதர கிறிஸ்தவர்கள்

மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும், தேவ பிள்ளையாய் இருக்கிறன். தேவன் நமது தகப்பனயிருப்பதால் நாம் அனைவரும்சகோதரரும்,சகோதரிகளுமாயிருக்கின்றோம்

முதிர்ந்த தேவபிள்ளைகள் உன்னை வரவேற்று, தேவனுடைய குடும்பத்தில் உன்னை ஒரு புதிய சகோதரனுகவோ சகோதரியாகவோ வரவேற்கிறர்கள். உனது ஆவிக்குரிய ஜீவியத்தில் நீ பெலப்படவும், நல்ல தேவபிள்ளையாய் இயேசுவில் வளரவும் அவர்கள் எல்லாவகையிலும் உனக்கு உறுதுணையாய் இருப்பார்கள்.

உனக்கு ஏதாகிலும், குழப்பங்கள் ஏற்படும்பொழுது, உன் போதகரையோ அல்லது முதிர்ந்த சபை அங்கத்தினராகிய உன் சகோதர, சகோதரிகளையோ அணுகி உன் பிரச்சனையை சரிசெய்து கொள்ளலாம். அவர்கள் உனக்காய் ஜெபித்து அவர்களால் இயன்றவரை உனக்கு உதவிசெய்வார்கள்.



### நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடைருகில் 'X' குறியிடவும்

18. மறுபடியும் பிறந்தமெய் தேவபிள்ளைகள் அனைவரும்
    ....a) இயேசுவுக்குள், உடன் சகோதரரும் சகோதரிகளும்
    ....b) ஒரே ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள்
    ....c) நல்ல நண்பர்கள்

விடை:18a)இயேசுவுக்குள்உடன்சகோதரரும் சகோதரிகளும்

பாடம் 2

# நடக்க கற்றுக் கொள்ளுதல்



### இந்தப்பாடத்தில் நீங்கள் படிப்பது

தேவனுடைய கரத்தில் உங்கள் கரங்களை இட்டுக்கொள்ளுங்கள்.

பிசாசானவன் உங்களை தள்ள முயற்சித்ததுண்டா ?

நீ கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவிக்கின்றாயா ?

நீ உன் சந்தேகத்தினிமித்தம் அதைரியமடைந்துள்ளாயா ? அல்லது கலங்குகிறாயா ?

உனது தகப்பன் உன்னை நேசிக்கின்றார்

உனது சந்தேகங்களைச் சரிசெய்துகொள்ளவும்

சுவிசேஷத்தை விசுவாசி. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வய்ப்பாயாக.

## தேவனுடைய கரத்தில் உங்கள் கரங்களை இட்டுக்கொள்ளுங்கள்

* தங்கள் குழந்தை நடக்க அரம்பிக்கும்போது, பெற்றோர் எவ்வளவாய் சந்தோஷமடைகின்றனர். அவ்விதமே உங்கள் பரமதகப்பன் நீ அவருடன் நடக்க ஆரம்பிக்கும் போது மிகவும் மகிழ்ச்சியடைகின்றார். விழுந்து விடுவோம் என்று அஞ்சாதீர்கள், உங்கள் கரங்களை அவருடைய கரங்களில் இட்டு கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் நீ எழுந்திருக்கும்போது அந்நாளில் நீ செய்ய வேண்டிய அனைத்திலும் அவர் உதவி செய்யும்படியாய் அவரிடம் கேள்.

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையருகில் 'X' குறியிடவும்

1. இப்பாடத்தில் நீ தேவப்பிள்ளை என்கிற நிலையில் எதை சம்பந்தப்படுத்தி படிக்கின்றாய் ?
   ....a) தானே நடக்கும் ஒரு மனிதனை
   ....b) நடக்க முடியாத ஒரு குழந்தை
   ....c) தேவனுடைய கரங்களில் உங்கள் கரங்களை இட்டுக்கொண்டு நடத்தலை

## பிசாசானவன் உங்களை தள்ள முயற்சித்த துண்டா ?

தேவனுடைய விரோதியாகிய சாத்தானாகிய பிசாசு ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் பகைவனாய் இருக்கின்றான். அவன் உன்னை சற்றுமேல் நோக்கி நடக்க விட்டபின், அங்கிருந்து கீழே விழச்செய்ய முயற்சிக்கிறான். அவன் உபத்திரவம், பரிகாரம், அதைரியம், சோதனை இவைகளை உபயோகித்து விழச்செய்ய முயலுவான். நீ இரட்சிக்கப்பட்டு இருக்கிறாயா? என்கிற சந்தேகத்தை உன்னில் உண்டாக்க முயற்சிப்பான். சாத்தான் எப்பொழுதும் தேவப்பிள்ளைகளுடன் போராடி அவர்களை, தேவனை விட்டுப்பிரிக்க வகை தேடுகிறவன். அவன் மிக முக்கியமாய் புதிய தேவப்பிள்ளைகளை சந்தேகங்களினாலும், கஷ்டங்களினாலும், குழப்பத்துக்குள்ளாக்க முயற்சிப்பான். நீ இயேசுவுடன் நடக்கப் பழகுவது அவனுக்கு சற்றேனும் விருப்பமில்லாத ஒன்று.

ஆதலால் நீ நடக்கப்பழகும்போது எற்படும் தடைகளைக் குறித்து ஆச்சரியப்படாதே. ஓர் குழந்தை நடக்க ஆரம்பிக்கும்போது நற்காலிக்குள் ஒடிச் சென்று தன்னைக் காயப்படுத்திக்கொள்ளலாம். அல்லது தவறி விழுந்தும் விடலாம். இதனால் அக்குழந்தை நான் இனி நடக்கவே மாட்டேன் என்று கூறுவதற்கு எந்த காரணங்களும் இல்லை.

## நீங்கள் செய்ய வேண்டியது

2. நீ ஓர் தேவப்பிள்ளையாய் மாறின பின்னர்

....a) உன் பிரச்சனைகள் யாவும் முடிவுற்றன

....b) சாத்தான் உன்னை வீழ்த்த முயற்சி செய்வான்

....c) நீ ஒருபோதும் அதைரியமடைவதோ, உபத்திரவப்படுத்தபடுவதோ இல்லை.

3. புதிய தேவப்பிள்ளைகளை சாத்தான் அடிக்கடி

....a) இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவிக்கச் செய்வான்.

... b) தேவனைக் குறித்த சந்தேகங்களை உண்டுபண்ணுவான்

... c) அவர்கள் இரட்சிப்படைந்துள்ளனரா என சந்தேகிக்க செய்வான்.

விடைகள் : 2b) சாத்தான் உன்னை வீழ்த்த முயற்சி செய்வான் 3c) அவர்கள் இரட்சிப்படைந்துள்ளனரா என சந்தேகிக்க செய்வான்.

உன் பரலோகத் தகப்பன் பிசாசை விட பலமுள்ளவர் என்றும அவர் உன் கரங்களைப் பற்றி பிடித்துக் கொண்டுள்ளார் என்னும் உண்மையை ஞாபகத்தில வைத்துக கொள. "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுககிறேன்; அவைகள் ஒருகாலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை" யோவான் 10:28

## நீங்கள் செய்ய வேண்டியது

4. யோவான் 10:28ஐ மனப்பாடம் செய்யவும்

## நீ கிறிஸ்துவினிமித்தம் பாடனுபவிக்கிறயா ?

நீ இயேசுவை ஏற்றுக் கொண்டதினிமித்தம், உனது குடும்பத்தினரோ, நண்பர்களோ உன்னை பரிகாசம் செய்தால், அவர்களைக் குறித்து ஆச்சரியப்படவோ, அல்லது கோபப்படவோ வேண்டியதில்லை. அவர்கள் உன்னை உபத்திரவப்படுத்தவும் கூடும். அவைகள், நமக்காக சிலுவையில் மரித்த இயேசுவுக்காய் பாடு அனுபவிக்க, நமக்கு கிடைத்த அரிய சிலாக்கியங்களாகும். நாம் "நமது சிலுவையை" சுமந்து அவரைப் பின்பற்றுவோம், அப்பொழுது நாம் அவரது பாடுகளை குறித்து பெருமை பாராட்டுவோம்.

> "ஒருவன் என் பின்னே வர விரும்பினல் அவன் தன்னை தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்."
>
> லூக்கா 9:23

> "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நித்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானல் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." மத்தேயு 5:10-12

## நீங்கள் செய்ய வேண்டியது

5. இயேசுவினிமித்தம் நீ துன்பப்படும்போது
   ....a) வருத்தப்பட்டு அதைரியமடைய வேண்டும்
   ....b) கோபமடைந்து வழக்காட வேண்டும்
   ... c) பரலோகில் உனக்கு பிரதிபலன் உண்டென்கிறபடியால் சந்தேஷப்பட வேண்டும்.

விடை : 5c) பரலோகில் உனக்கு பிரதிபலன் உண்டென்கிறபடியால் சந்தோஷப்பட வேண்டும்

## நீ உன் சந்தேகந்நிமித்தம் அதைரியமடைந்துள்ளாயா? அல்லது கலங்குகிறாயா?

நீ சரியானவற்றை செய்து கொண்டிருக்கும்பொழுது உன்னை அதைரியப்படுத்தும் நேரங்களைக்குறித்து கலங்காதே. ஒருவன் மறுபடியும் பிறக்கும்போது மெய்யாகவே அவன் தேவபிள்ளையாய் மாறுகிறான். இருந்தபோதிலும் அவன் நடக்கப்பழகிக்கொள்ள வேண்டும். ஒரு புதிய தேவப்பிள்ளை தவறு செய்யும்போது பிசாசானவன் அவனை இவ்வாறுநினைக்கத்தூண்டுகிறான். ஐயோ, நான் தவறு செய்து விட்டேன். இனி நான் தேவபிள்ளையாய் இருக்க முடியாது. நான் இனி வேறு விதத்தில் நடப்பேன்.

சிலப்புதிய தேவப்பிள்ளைகள் குழப்பத்துடன், சந்தேகப்பட்டு, இவ்வாறு நினைப்பார்கள்: "நான் ஓர் தேவபிள்ளைக்குரிய ஜீவியம் செய்ய முடியாது; அது எனக்கு மிகவும் கடினமான ஒன்று. இனி இயேசுவை சேவிக்க மாட்டேன். எனது பழைய ஜிவியமே, என்னை திருப்தி செய்யக்கூடியது. மட்டுமின்றி தேவபிள்ளைகள் கூறும் பெரிய மாற்றத்தை என்னில் நான் ஒருபோதும் காண முடியவில்லை. நான் இரட்சிப்பின் சந்தோஷத்தை உணர முடியவில்லையே! இனி நான் ஒருபோதும் தேவபிள்ளையாயிருக்க முடியாது எனத்தீர்மானித்து விட்டேன்."

இப்படிப்பட்ட சந்தேகங்களினால் தவித்ததுண்டா? இப்படிப்பட்ட சந்தேகங்கள், உன்பகைவனாகிய பிசாசு, உன்னை அதைரியப்படுத்தி விழச்செய்ய உண்டாக்கும் காரியங்கள் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். சில தேவப்பிள்ளைகள் இரட்சிக்கப்பட்ட பின்னர் மற்றவர்களை விட, அதிக இரட்சிப்பின் சந்தோஷமுடையவர்களாய் காணப்படுவார்கள். உன் உணர்வுகளை குறித்து கவலைகொள்ள வேண்டாம். இயேசு உன்னைதன் சொந்த பிள்ளையாய் மாற்றியிருக்கிறார் என்பதை எவ்வளவு அதிகமாய் அறிந்து உணர்ந்திருப்பாயோ, அவ்வளவு சந்தோஷம் உன்னிலிருந்து உருவாகும்.

உன்னில் உள்ள சந்தோஷப்பெருக்கத்திற்காகவும், அவரின் அளவற்ற ஆசீர்வாதங்களுக்காவும் நீ நன்றிசெலுத்தவும். உனது இரட்சிப்பு, உன்னால் உணர அல்லது உணர முடியாத உணர்ச்சிகளைப் பொறுத்தது அல்ல. அது உனக்கு ஜீவனையும் ஆத்துமாவையும் அளித்துள்ளஉண்மை நிறைந்த தேவனால் அருளப்பட்டது என்பதை உணர்ந்து கொள்வாய்.

நீ இடறி விழும்போது இனி நீ நடக்கக்கற்றுக் கொள்ள இயலாது என்பது அதன் அர்த்தமல்ல. உன் தோல்வியைக் குறித்து அவரிடம் மன்னிப்பை பெற்றுக்கொண்டு, எழுந்து மறுபடியும் நடக்க முயற்சி செய்.



உன்னில் மாற்றம் ஏற்படும்போது, இயேசுவைப்பிரியப் படுத்துவது உன் வாஞ்சையாயிருக்கட்டும். உனது தோல்விகளில் உனக்கு உண்டாகும் கவலைகள் உனக்குள் புதிய சுபாவம் உருவாகிறது என்பதை மெய்ப்பிக்கிறது. ஆகையால் அதைரியமடைய வேண்டாம். சிலகுழந்தைகள் நடக்க ஆரம்பிக்கும்போது, மற்ற குழந்தைகள் மிகவும் துன்பமடைகின்றது என்பதை நினைவில் கொள்ளவும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

6. நீங்கள் அதைரியமடையும்போது நினைவில் கொள்ள வேண்டியவை

....a) மெய் தேவப்பிள்ளைகள் எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியுடனிருப்பார்கள்

....b) எல்லா தேவப்பிள்ளைகளும், இரட்சிப்படையும் போது ஒரே மாதிரி சந்தோஷமுள்ளவர்களாயிருப்பார்கள்.

....c) அதிகமாய் அவருடைய ஆசீர்வாதங்களுக்காய் நன்றி செலுத்தும்போது அதிக சந்தோஷத்தை அடையலாம்.

7. உங்களது இரட்சிப்பு

....a) தேவனின் உண்மையைப் பொறுத்தது

....b) உங்கள் உணர்ச்சியைப் பொறுத்தது

....c) நீங்கள் நல்லவராயிருப்பதைப் பொறுத்தது

விடைகள்: 6c) அதிகமாய் அவருடைய ஆசீர்வாதங்ளுக்காய் நன்றி செலுத்தும்போது அதிக சந்தோஷத்தை அடையலாம். 7a) தேவனின் உண்மையை பொறுத்தது.

## உனது தகப்பன் உன்னை நேசிக்கிறார்

பிள்ளைகளை நேசிக்கும் பெற்றோர் தங்கள் குழந்தை தவறி விழும்போது குழந்தையைத் திட்டுகின்றனரா? அல்லது அது காயப்படும்போது எப்படியாவது போகட்டும் என இருந்து விடுகின்றனரா? ஒருபோதும் இல்லை. அவர்கள் குழந்தையை தூக்கியெடுத்து அதைத் தேற்றி அரவணைத்துக்கொண்டு, நன்கு நடக்கப்பழகும் வரை உற்சாகப்படுத்துகின்றனர். நடக்க பழகும் குழந்தைபோன்ற உன்னை அவர் இழிவாய் எண்ணுவாரா? ஒருபோதும் இல்லை. அவரை நோக்கி ஜெபத்தில் இவைகளைக் கூறு: "என் கரத்தைப்பற்றிக்கொண்டு, எனக்கு நடக்க போதிக்கும் என் தகப்பனாகிய உமக்கு நன்றி செலுத்துகின்றேன். நான் பெலவீனன். நான் என்ன செய்யவேண்டும் என எனக்குபோதித்து உதவி செய்யும்."

பரிசுத்தாவியானவர் மூலமாயும் வேதவசனங்கள் மூலமாயும் இயேசு உன்னை வழி நடத்துகிறார் என்பதை நீ அறிய வேண்டும். ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்து ஜெபம் செய்யவும். அது நீ இடறுதபடிக்கு தொடர்ந்து நடக்க உனக்கு உதவி செய்யும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

8. நீ செய்ய கூடாதவற்றை செய்யும்போது உன் பரலோக தகப்பனிடத்தில் நீ எதிர்பார்க்ககூடியது என்ன வென்றால்

....a) அவர் உன்மீது கோபப்பட்டு தமது வீட்டிலிருந்து உன்னை புறம்பாக்கிப்போடுவார்

....b) உன்னை மன்னித்து உன் தவற்றை சரிசெய்து கொள்ள உதவி செய்வார்

....c) உன்னை தனியே விட்டு விடுவார்

9. தேவனின் பரிசுத்தாவியானவர் உன்னை வழிநடத்துவது மட்டுமல்லாமல் நீ செய்ய வேண்டியது என்னவென்று உனக்கு காண்பித்து

....a) வேதத்தை தினமும் வாசித்து புரிந்துகொள்ள உதவி செய்வார்

....b) ஜாதகம் பார்த்து உன் நிலைமை என்ன என்று உணர்த்துவார்

....c) உன் நண்பர்கள் என்னச் சொல்கிறார்கள் என்பதை கவனிக்க செய்வார்

விடைகள் : 8b) உன்னை மன்னித்து உன் தவற்றை சரி செய்து கொள்ள உதவி செய்வார் 9a) வேதத்தை தினமும் வாசித்து புரிந்து கொள்ள உதவி செய்வார்.

## உன் சந்தேகங்களைச் சரிச் செய்துகொள்

நீ இரட்சிப்பு அடைவதற்கு தேவன் உன்னிடம் எதிர் பார்ப்பதைக் குறித்து நீ ஆச்சரியம் அடைய கூடும். எவைகள் செய்தால் இரட்சிப்பு அடையலாம் என்று நாம் செய்ய வேண்டியதை இயேசு நமக்கு தெளிவாய் சொல்லியுள்ளார். ஆகையால், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பார்ப்போம். நீ இரட்சிப்பு அடைய வேறு எவற்றையாவது செய்ய சொன்னால் அதை இப்பொழுதே செய்து முடிப்பாய்.

நீ இரட்சிப்பு அடைய தேவன் உன்னிடம் இரண்டு

காரியங்கள் செய்யும்படியாய் கேட்கிருர். உன் பாவங்களி லிருந்து மனம் திரும்பி சுவிசேஷத்தை விசுவாசி.

## நீங்கள் செய்ய வேண்டியது

10. நீ இரட்சிப்பு அடைவதற்கு தேவன் உன்னிடம் கேட்பது என்னவென்ருல்

....a) பாவத்திலிருந்து மனம் திரும்பி சுவிசேஷத்தை விசுவாசி

....b) சபையில் சேருவதற்கு பிராயச்சித்தம் செய்

....c) உன் பாவங்களை சரிசெய்வதற்கு போதுமான நன்மை செய்

விடை : 16a) பாவத்திலிருந்து மனம் திரும்பி சுவி சேஷத்தை விசுவாசி

## மனம் திரும்புதல்

மனம் திரும்புதல் என்ருல் நீங்கள் செய்த பாவத்திற் காக மனஸ்தாபப்பட்டு அவைகளை விட்டு திரும்புவதாகும். மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். மாற்கு 1:15

உன் கீழ்படியாமையைக் குறித்து வருத்தம் அடைகிருயா ? பாவத்தை விட்டுவிட தீர்மானித்து இருக்கிருயா ? அல்லது ஒரு சில பாவங்களை விட்டுவிடாமல் இருக்க மன துள்ளவனுய் இருக்கிருயா ? உன் வழிகளை தேவனுக்கு ஒப்பு வித்து அவருக்கேற்றபடி நடப்பாயா ?

## நீங்கள் செய்ய வேண்டியது

11. மாற்கு 1:15ல் காணப்படும் இயேசு சொன்ன வார்த்தைகளை மனப்பாடம் செய்யவும்

12. மனந்திரும்புதல் என்ருல்

...a) பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு அவைகளை விட்டு திரும்புவதாகும்

...b) போதகரிடம் சென்று உன்பாவங்களை அறிக்கை செய்வதாகும்

... c) மன்னிப்பு கேட்டு, செய்ததையே திரும்பதிரும்ப செய்வதாகும்

விடை : 12a) பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு அவைகளை விட்டு திரும்புவதாகும்.

உங்களை மிகவும் மோசமாய் நடத்தின ஒருவரை மன்னிக்க மனமற்று இருக்கிறீர்களா ? வெறுப்புணர்ச்சியும் ஆத்திரப்படுதலும் பயங்கர பாவங்களாயிருந்து அநேக மக்களை பரலோகத்திற்கு வெளியாக்குகிறது. தேவன் அன்புள்ளவராய் இருக்கிறார். வெறுப்புணர்ச்சியும் தப்பெண்ணங்களும் உள்ள இருதயத்தில் அவர் வசிக்கமுடியாது. யாரைக்குறித்தாவது பகைமை உணர்வு இருக்குமென்றால் அவர்களை இப்பொழுதே மன்னித்துவிடு. உன் பகைவரை நேசிக்ககூடிய அன்பு உன்னில் உருவாக அவரை நோக்கி வேண்டிக் கொள்.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" மத்தேயு 6:15

நீ முற்றிலுமாய் மனந்திரும்பவில்லை என்று சந்தேகம் கொள்வாயானால், எல்லா பாவங்களையும் விட்டு மறுபடியும் உன்னை சரிசெய்து கொள். மட்டுமல்ல உன் வழியை தேவனிடம் ஒப்படைத்துவிடு ஏன் என்றால் இப்பொழுது முதல் அவர் தனது வழியை உன் ஜீவியத்தில் காட்டக்கூடும்

## நீங்கள் செய்ய வேண்டியது

12. உனக்கு ஒருவர் தவறு செய்யும்போது நீ செய்ய வேண்டியது.

...a) மௌனமாய் இருந்து அவனை வெறுக்க வேண்டும்.

....b) அப்பொழுதே அவனை மன்னிக்க வேண்டும்

....c) அவன் கெட்டவன் என்று எல்லோரிடமும் சொல்ல வேண்டும்

விடை : 13b) அப்பொழுதே அவனை மன்னிக்க வேண்டும்

## சுவிசேஷத்தை விசுவாசி : இயேசுவை விசுவாசி

சுவிசேஷம் என்றால் நற்செய்தி. அதாவது, இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்த நற்செய்தி. கீழே கொடுக்கப்பட்டுள்ள நற்செய்தி போதனைகளை வேதத்தில் காணமுடியும். நீ நம்புவதை கோடிட்ட இடத்தில் ஆம் என்று எழுது.

• தேவன் உன்னை அதிகமாய் நேசித்தபடியால் அவர் தமது குமாரனை உன் பாவங்களுக்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ளும்படி அனுப்பினார் ............................

• இயேசு உன் பாவத்திற்காக மரித்தார். நீ அவரை இரட்சகராகவும் தேவனாகவும் ஏற்றுக்கொள்வாயானால் உன் பாவங்களிலிருந்து விடுதலை அளிப்பார் ...................

• இயேசு மரித்து உயிர்த்தெழுந்து மறுபடியும் பரலோகத்திற்கு சென்றுள்ளார். அவர் உனக்காய் ஜெபித்து அங்கு உனக்காக ஒரு இடத்தை உண்டாக்கி கொண்டு இருக்கிறார் ............................

• இயேசு கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது நீ தேவபிள்ளையாய் மாறுகிறாய். மட்டுமல்ல, அவரில் புதிய ஜீவனையும் பெறுகிறாய் ......................

• இயேசு மறுபடியும் திரும்பி வந்து தமக்குரியவர்களை பரலோகத்தில் உள்ள நித்திய வீட்டிற்கு அழைத்துச் செல்வார் ............................

இயேசுவைக் குறித்து மேற்கூறிய அனைத்தையும் விசுவாசிக்கின்றாயா ?........................அவரை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளாயா ? ...............அப்படியானால் அவரில் நம்பிக்கை வை. அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசி.

"இயேசு கிறிஸ்துவை விசுவாசி... அப்பொழுது........ இரட்சிக்கப்படுவாய்." அப்போஸ்தலர் 16:31

"தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது."

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." 1 யோவான் 5:11,12

## நீங்கள் செய்ய வேண்டியது

14. சுவிசேஷம் என்றால்

....a) இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்பை குறித்த நற்செய்தி

....b) பிரசங்கிப்பது

....c) சபை உபதேசத்தைப் பற்றியது

15. அப்போஸ்தலர் 16:31 1 யோவான் 5:11 12யும் மனப்பாடம் செய்க.

விடை: 14a) இயேசு கிறிஸ்துவில் இரட்சிப்பை குறித்த நற்செய்தி

இயேசுவில் விசுவாசம் வைப்பது என்றால் உன் நம்பிக்கையை முற்றிலும் அவர் பேரில் வைப்பதே. அவர் உன்னை புரிந்து கொண்டு உன்னை நேசிக்கிறார். அவர் பிதாவை நோக்கி உனக்காய் வேண்டுதல் செய்கிறார். இதைச் செய்ய தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர் இயேசு மாத்திரமே.

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே." 1 தீமோத்தேயு 2:5

"அவராலே அன்றி வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறு ஒரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை" அப்போஸ்தலர் 4:12

"இயேசு சொன்னார் : நானே வழியாய் இருக்கிறேன் உன் விசுவாசம் அனைத்தும் அவர் மீது வைக்க வேண்டும்."

நீ மெய்யாகவே மனம் திரும்பி தேவனின் வாக்குத்தத் தங்களை விசுவாசித்து இயேசு கிறிஸ்து உனது இரட்சகர் என்று அவரில் நம்பிக்கை வைத்திருப்பாயெனில் நீ இரட்சிக் கப்பட்டு இருக்கிறாய்.

## நீங்கள் செய்ய வேண்டியது

*16.* வேதம் நமக்கு போதிப்பது :

....a) தேவனிடம் செல்ல இயேசு ஒருவரே வழி

....b) தேவனிடம் செல்ல அநேக வழிகள் இருக்கின்றன

விடை : *16*a) தேவனிடம் செல்ல இயேசு ஒருவரே வழி

இயேசு உனது சொந்த இரட்சகர் என்பதை நிச்சயப் படுத்திக் கொள்ள விரும்புகிறாயா ? வாழ்க்கை மறுபடியும் அவருக்கு அர்ப்பணித்து அவருடன் நடக்கிறேன் என்பதை நிச்சயப்படுத்தி கொள்ள விரும்புகிறாயா ? கீழ்க்காணும் ஜெபத்தின் மூலமாக அவரிடம் உரையாடவும்.

## ஜெபம்

என் தேவனே, என்மேல் கொண்ட உமது அன்பிற்காக வும் உம்முடைய குமாரனாகிய இயேசுவை அனுப்பி என் ஸ்தானத்திலே மரிக்க செய்ததற்காகவும் என் எஜமானாகவும் ஏற்றுக்கொள்கிறேன். என் பாவங்களை எல்லாம் மன்னித்து என்னை உமது பிள்ளையாய் எற்றுக் கொண்டதற்காக உமக்கு நன்றி. எல்லா காரியங்களிலும் நான் உமக்கு நல்லவனாகவும் கீழ்ப்படிதல் உள்ளவனாகவும் உம்மை பிரியப்படுத்துகிறவனாக வும், இருக்க எனக்கு உதவிச் செய்யும். நான் என்னை உமக்கு அர்பணிக்கிறேன். என் வாழ்நாள் எல்லாம் நான் உம்முடன் நடக்க எனக்கு உதவி செய்தருளும். ஆமென்.

பாடம் 3

# நமது பரலோக தந்தையின் சத்தத்தை கவனியுங்கள்



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

தேவன் உன்னோடு பேச விரும்புகிறார்

தேவன் அநேக வழிகளில் பேசுகிறார்

தேவனின் புத்தகம் எவ்வாறு எழுதப்பட்டது

வேதக்குறிப்புகள்

தேவனின் சத்தத்தை எப்படி கேட்பது

## தேவன் உன்னோடு பேச விரும்புகிறார்

எந்த தகப்பன் தன் பிள்ளைகள் சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுது அவர்களோடு பேசி சிரித்து மகிழ மாட்டான்? உங்கள் பரலோக தகப்பனும்கூட அவருடைய சிறு பிள்ளைகளோடு பேசி அவருடைய அன்பை அவர்களுக்கு காட்டி அவர்களுக்கு போதித்து குழப்பம் உள்ள நேரங்களில் உதவி செய்கிறார். அவருடைய குரலை கேட்க விரும்புகிறாயா?

## நீங்கள் செய்ய வேண்டியது

1. தேவன்

....a) தமது பிள்ளைகளோடு பேச விரும்புகிறார்

....b) நம்முடன் பேசுவதற்கு மிகவும் பரிசுத்தம் உடையவராக இருக்கிறார்

....b) ஜனங்களுடன் இப்பொழுது பேசுவதில்லை

விடை: 1a) தேவன் தமது பிள்ளைகளோடு பேச விரும்புகிறார்

## தேவன் அநேக வழிகளில் பேசுகிறார்

பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாக வும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார். எபிரேயர் 1;1,2 தேவன் உங்களோடு பேசும் சில விதங்களாவன :

நேரடியாக உங்கள் ஆத்துமாவோடு பேசுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் மெய்யான இயேசுவின் பிரசன் னத்தை உங்களுக்கு உண்மையாக்குவார். அவர் உங்களு டைய மனசாட்சி மூலமாய் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்த்தலாம், சிலவற்றை செய்ய கூடாது என்றும் எச்சரிக்கிறார். ஆவிக்குரிய சத்தியங்களை அவர் உனக்கு தெளிவாக்கலாம், அல்லது சில காரியங்களை நீ செய்யும்படியாய் உள்ளத்திலே திட்டவட்டமான உணர் வைக் கொடுப்பார். நீ ஜெபிக்கும்பொழுது உன் இருதயத் தில் அவருடைய சத்தத்தை கேட்க எதிர்ப்பார்த்திரு.

## நீங்கள் செய்ய வேண்டியது

2. தேவன் எப்படி உங்கள் ஆத்துமாவோடு பேசுவார். (இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்)

....a) மற்றவர்கள் பேசுவதைப்போல அவர் பேசும் தொனியை கேட்கலாம்

....b) சிலவற்றை செய்யும் படியாக உறுதிப்படுத்தப் படலாம்

....c) கனவு அல்லது தரிசன மூலமாக உங்களுடன் பேசலாம்

....d) ஒரு ஆவிக்குரிய சத்தியம் சடுதியில் உண்மை யுள்ளதாகவும் தெளிவுள்ளதாகவும் தோன்ற லாம்

விடைகள் : 2b) சிலவற்றை செய்யும் படியாக உறுதிப் படுத்தபடலாம் d) ஒரு ஆவிக்குரிய சத்தியம் சடுதியில் உண்மையுள்ளதாகவும் தெளிவுள்ளதாகவும் தோன்ற லாம்.

அவருடைய ஆசீர்வாதங்கள் மூலம்

அநேக தேவப்பிள்ளைகள் தாங்கள் மறுபடியும் பிறந்ததி லிருந்து முழு உலகமும் தங்களுக்கு வேறுபட்டதாக தோன்று கின்றது என்று கூறுவர். நீயும் கூட உன்னை சுற்றியுள்ள தேவனின் ஆசீர்வாதங்களை காணும்போது அவ்வனுபவத்தை பெறலாம். அவருடைய பிரசன்னத்தை இயற்கை மூலமாய் உணரலாம். இசை மூலமாகவோ, ஓவியங்கள் முலமாகவோ அவர் உன்னுேடு பேசலாம். மற்ற தேவப்பிள்ளைகளோடு நீ தொடர்புக் கொள்ளும்போது அவர் உனக்கு அருகில் இருக் கிறுர் என்பதை நீ உணருவாய். ஆயிரக்கணக்கான ஆசீர் வாதம் உன்னை சூழ இருக்கிறது என்று தேவனின் நன்மை களைக் குறித்து சொல்லிகொள்வாய். அவர் உன் ஜெபத்திற்கு பதில் அளிப்பதில் மூலமாய் பேசுகிறுர். உன் ஆவிக்குரிய கண்கள் தேவனுடைய புன் சிரிப்பைக் கண்டு உன் ஆவிக்குரிய காதுகள், அவர் உரைக்கும் சத்தம், என் பிள்ளையே நான் உன்னை நேசிக்கிறேன் என்பதை கேட்க கூடும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

3. தேவன் உன்னுடன் பேசினதுண்டா ?...............

4. தேவன் உன்னை நேசிக்கின்றுர் என்று நீ கண்டபடி அவர் உனக்கு அளித்த ஆசீர்வாதங்கள் சிலவற்றை குறிப்பிடவும்

..............................................................................

..............................................................................

மற்ற கிறிஸ்தவர்கள் மூலம்

சில நேரங்களில் குடும்பத்தில் உள்ள முதிர்ந்த பிள்ளைகள் இளையவர்களைப் பார்த்து : ''இல்லை இல்லை அப்பா அதை விரும்பவில்லை'' அல்லது : ''பார், இதுதான் அப்பா விரும்புவது'' என்று கூறுவார்கள்.

அதுபோலவே தேவனும் அவருக்குள் ஜீவிக்கும் முதிர்ந்தப்பிள்ளைகளின் மூலமாய் பேசுகிறார். நாம் மற்ற தேவபிள்ளைகளுடன் அடிக்கடி தொடர்புகொண்டு அவர்களிடமிருந்து தைரியம், வழி நடத்துதல் உதவிகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார்.

தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் எபேசியர் 5:21

## நீங்கள் செய்ய வேண்டியது

5. எப்பொழுதாவது மற்ற தேவபிள்ளைகள் நீ எதை செய்ய தேவன் விரும்புகிறார் என்று உணர்ந்துகொள்ளும்படி உனக்கு உதவி செய்ததுண்டா ? ............

6. நீ ஒரு நல்ல தேவபிள்ளையாய் இருப்பதற்கு யாராவது ஊக்குவித்ததுண்டா........................ யார் ?

7. தமது பிள்ளைகள் மூலமாய் அவர் பேசும் விதங்களுக்காய் அவருக்கு நன்றி செலுத்தவும். மற்றவர்களை இரட்சிப்பிற்கு நேராய் வழி நடத்த அல்லது மற்றவர்களை ஊக்குவிக்க, அவர் உனக்கு உதவிச் செய்ய ஜெபிக்கவும்.

ஆவிக்குரிய வரங்கள் மற்றும் ஊழியங்கள் மூலம்

பரிசுத்தாவியானவர் சபையில் அநேக வரங்களை வைத்திருக்கிறார், அவர் அதன் மூலம் நம்மோடு பேசுகிறார். அவர்

தேவனுடைய செய்தியை சபையின் போதகர், சுவிசேஷகர், எழுத்தாளர் இவர்கள் மூலம் அறிவிக்கிறார். ஒவ்வொரு தேவப்பிள்ளையும் தேவனை குறித்து மற்றவர்களுக்குச் சொல்ல அவர் விரும்புகிறார். உன்னால் இயன்றவரை சபை ஆராதனைகளுக்கு அடிக்கடி செல்வது அவசியம். ஒவ்வொரு நேரமும் நீ செல்லும்போது உன் பரலோக தகப்பன் என்னச் சொல்கிறார் என்பதை நன்கு கவனி. ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது, என் நாமத்தினாலே எங்கே கூடி இருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன். மத்தேயு *18:20*

## நீங்கள் செய்ய வேண்டியது

8. இவைகள் மூலம் சில நேரங்களில் தம் மக்களுடன் பேசுகிறார்

(இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்)

....a) சபை போதகர், சுவிசேஷகர்களின் பிரசங்கம் மூலம்

....b) குறிச்சொல்லுகிறவர்கள் மூலம்

....c) மந்திரக்காரர் மூலம்

....d) கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கைப்பிரதி புஸ்தகங்கள் மூலம்

9. நீ சபையில் இருக்கும்போது தேவன் உன்னோடு பேசுவதை நீ எதிர்பார்க்கிறாயா ?

10. இப்புத்தகம் மூலம் தேவன் உன்னிடம் பேசினது உண்டா ?

11. ஒவ்வொரு பாடத்தின் மூலமாகவும் தேவன் உன்னோடு பேசும்படி அவரிடம் வேண்டிக்கொள்.

விடை : 8a) சபை போதகர், சுவிசேஷகர்களின் பிரசங்கம் மூலம் d) கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கைப்பிரதிகள் மூலம்

பாடல்கள் மூலம்

தேவன் அடிக்கடி சுவிசேஷ பாடல்கள் பல்லவிகள் மூலம் உன்னுடன் பேசுவார். ஒரு சில பாடல்களின் செய்தியை அடிக்கடி உன் மனதில் தேவை உள்ள நேரங்களில் கொண்டு வருவதைக் குறித்து நீ அதிசயிக்க கூடும்.

"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணுங்கள்." எபேசியர் 5:19

## நீங்கள் செய்ய வேண்டியது

12. சபையில் பாடப்படும் பாடல்களையும் பல்லவிகளையும் விரைவில் கற்றுக்கொள்ள தேவனை நோக்கி வேண்டிக் கொள்ளவும். உன்னால் இயன்றவரை அவைகளை பாடவும்.

13. நீ என்னப் பாடுகிறாய் என்று உணரும்படியான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள். என்னப் பாடுகிறாய் என்பதின் கருத்தை உணர்ந்துப்பாடு. நீ பாடுகிற பாடலின்படி உன் வாழ்க்கை அமையும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்.

வேதாகமத்தின் மூலம்

தேவன் தமது புத்தகமாகிய வேதாகமத்தின் மூலம் உன்னுடன் பேசுகிறார். இது அவர் செய்தியை நாம் அறிந்துக்கொள்ள திட்டமான வழியாகும். சபை போதகர் உன் வாழ்வின் தேவ சித்தம் என்ன என்பதை அநேக நேரங்களில் அறியாமல் இருக்க கூடும். சொப்பனங்களும் தரிசனங்களும் கூட எல்லா நேரங்களிலும் தேவனிடமிருந்து கிடைப்பது

இல்லை. அவைகள் உன்னுடைய மிகுந்த சிந்தனையினாலும் ஏற்படக்கூடும். சில வேளைகளில் தேவனுடைய சித்தம் என்ற நினைவில் உன் சொந்த வாஞ்சைகளினால் சிலவற்றை நீ செய்யலாம். ஆகையால் தேவனின் குரலை எப்படி அறிந்து கொள்ள முடியும் ? தேவனின் நேரடியான செய்தி வேதாகமத்தில் உனக்காக எழுதப்பட்டிருக்கிறப்படியால் நீ அவருக்கு நன்றி செலுத்தவும். அவற்றின் மூலம் உனக்கு சொல்லப்படுகிற எல்லாவற்றையும் சோதித்தறிய வேண்டும்.

> "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களை திறந்தருளும். கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது. உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும். உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம். உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்." *சங்கீதம் 119:18,89,105,130,160.*

## நீங்கள் செய்ய வேண்டியது

*14.* உனக்கு தேவனின் செய்தியை அறிந்து கொள்ள திட்டமான வழி

a) தேவன் வேதாகமத்தில் என்ன சொல்லுகிறார் என்பது

b) உன் நண்பர்களின் புத்திமதிகளை கவனித்தல்

c) உன் உணர்ச்சிகள் என்ன சொல்கிறது அதைச் செய்தல்

விடை *14*a) தேவன் வேதாகமத்தில் என்ன சொல்லுகிறார் என்பது

## தேவனின் புத்தகம் எவ்வாறு எழுதப்பட்டது

நூற்றாண்டுகளாக தேவன் சில நல்ல மனிதர்களை தெரிந்தெடுத்து அவர்கள் மூலம் தமது செய்தியை எழுதினார். அவர் எழுத வேண்டியதை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு ஏவினார். *1600* வருட காலங்களில் சுமார் **40** மனிதர்கள் வேவ்வேறு காலங்களில் அவருடைய செய்தியை **66** புத்தகங்களில் எழுதினர். இதுவே பரிசுத்த வேதமாகும். இப்புத்தகங்கள் முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே கருத்தமைந்ததாகும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

**15.** வேதாகமத்தை எழுதிய மனிதர்கள் (இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்)

a) தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருந்தனர்

b) அரசனால் சம்பளம் கொடுக்கப்பட்டு எழுத அமர்த்தப்பட்டிருந்தனர்

c) பரிசுத்தாவியானவரால் ஏவப்பட்டு எழுதினர்

d) அநேக தவறுதல்கள் இழைத்தனர்

விடைகள் : **15a)** தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருந்தனர்
c) பரிசுத்தாவியானவரால் ஏவப்பட்டு எழுதினர்

அனேக ஆண்டுகளுக்கு முன்னே தேவன் தமது பிள்ளைகள் மூலம் **66** புத்தகங்களையும் ஒருங்கே இணைத்து பரிசுத்த வேதாகமம் ஆக்கினார். பரிசுத்த வேதாகமம் என்றால் தேவனின் புத்தகங்கள் என்று பொருள்படும். முதல் *39* புத்தகங்கள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு

முன்டாக எழுதப்பட்டன. அவைகள் பழைய ஏற்பாடு என்று அழைக்கப்படுகிறது. வேதாகமத்தின் இரண்டாவது பகுதி புதிய ஏற்பாடு என்று அழைக்கப்படுகிறது. இதில் 27 புத்தகங்கள் அடங்கி இருப்பதுடன் இயேசு இந்த பூமியில் வந்த பின் அவர் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உண்டாக்கிய புதிய உடன்படிக்கையுமாய் இருக்கிறது. அவைகள் உடன்படிக்கையின் எல்லைகளை நமக்கு கொடுக்கிறது.

## நீங்கள் செய்ய வேண்டியது

16. வேதாகமம் இரண்டு பிரதான பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள் :

...a) பழைய ஏற்பாடும் தள்ளுப்படியாகமமும்

....b) பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு

....c) நியாய பிரமாணமும் தீர்க்கதரிசனமும்

17. வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளன.

...a) பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் உள்ளன

...b) பழைய ஏற்பாட்டில் 29 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 37 புத்தகங்களும் உள்ளன

விடை : 16b) பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் 17a) பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் உள்ளன.

பழைய ஏற்பாடு முதலாவதாக எபிரேய பாஷையிலும் புதிய ஏற்பாடு கிரேக்கப் பாஷையிலும் எழுதப்பட்டது. தேவன் மனுகுலம் யாவருக்கும் இப்புத்தகத்தை அளித்து அவர் ஒவ்வொருவரும் வாசிக்க விரும்புகின்றபடியால் அவர்

தமது பிள்ளைகளுக்கு உதவி செய்து பல மொழிகளில் மொழி பெயர்க்க செய்தார். இப்பொழுது சுமார் 1300 பாஷைக ளுக்கு மேலாக வேதகாமம் பல பகுதிகளாக மொழி பெயர்க்க பட்டுள்ளது.

## நீங்கள் செய்ய வேண்டியது

18. வேதாகமத்தின் மூல பாஷை

...a) எபிரேய, லத்தீன், பாஷை

...b) ஷ்பானிஷ், கிரேக்க பாஷை

...c) பிரான்ச்சு, ஆங்கில பாஷை

...d) எபிரேய கிரேக்க பாஷை

19. வேதாகமம்

...a) எல்லோருக்கும் உரிய புத்தகம்

...b) கல்விமான்களுக்கு மட்டும் உரியது.

...c) சபை போதகருக்கு மட்டுமேயன்றி வேறு ஒரு வருக்கும் உரியதன்று

விடைகள் : 18d) எபிரேய, கிரேக்க பாஷை
19a) எல்லோருக்கும் உரிய புத்தகம்

## வேத குறிப்புகள்

வேதாகமத்தில் ஒவ்வொரு புத்தகமும் அதிகாரங்களாய் பிரிக்கப்பட்டு எண்கள் இடப்பட்டுள்ளன. அவ்வதிகாரங்கள் சிறிய சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு வசனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வசனங்களுக்கு எண்கள் இடப் பட்டுள்ளபடியால் வேதாகமத்தில் எங்கே இருக்கிறது என்று சொல்லவும் கண்டுபிடிக்கவும் முடியும். வேதத்தில் குறிப்பிட்ட பகுதியை கண்டுக்கொள்ள வேண்டும் என்றால் முதாலவது அப்புத்தகத்தின் பெயரை எழுதி பின்னர் அந்த

அதிகாரத்தின் எண் எழுதி அதன் பின்னர் இரண்டு புள்ளிகளை இட்டு (:) வசனத்தின் எண்ணை எழுதவும். யோவான் 3:16 இது யோவான் எழுதின சுவிசேஷம் 3ம் அதிகாரம், பதினாறும் வசனத்தை குறிக்கிறது.

இரண்டு வசனங்களுக்கு மேற்பட்ட வசனங்களை எழுதும் போது அவைகள் அவ்வதிகார த்தில் வெவ்வேறு இடங்களில் இருக்குமென்றால் காற்புள்ளியிட்டு வேறுபடுத்திகாட்டும் யோவான் 3:16,17,20 இதன் அர்த்தம் என்னவென்றால் யோவான் எழுதிய சுவிசேஷம் மூன்றும் அதிகாரம் பதினாறும் வசனம், பதினேழாம் வசனம், இருபதாம் வசனம் என்று அர்த்தம்.

இரண்டு வசனங்களுக்கிடையே சிறு கோடிடப்பட்டிருந்தால் எல்லா வசனங்களும் உள்பட அர்த்தமாகும். உதாரணம் யோவான் 3:16-22 என்றால் யோவான் எழுதிய சுவிசேஷம் மூன்றும் அதிகாரம் பதினாறும் வசனம் முதல் இருப்பத்திரண்டு வசனம்வரை என்று அர்த்தமாகும். வசனங்கள் வெவ்வேறு அதிகாரங்களில் இருக்கும்போது அவைகளை அரைபுள்ளி (;) இட்டு வேறுப்படுத்தி காட்டும். எப்படி என்றால் யோவான் 3:16;6:24 இதன் பொருள் யாதெனில் யோவான் எழுதின சுவிசேஷம் மூன்றும் அதிகாரம் பதினாறும் வசனமும் ஆறும் அதிகாரம் இருபத்தி நான்காம் வசனமும் என்று அர்த்தமாகும்.

## தேவனின் சத்தத்தை எப்படி கேட்பது

நீ வானொலி பெட்டியில் குறிப்பிட்ட வானொலி நிகழ்ச்சியை கேட்கவேண்டுமானால் வானொலிப்பெட்டியில் உள்ள சரியான வானொலி நிலையத்தை கேட்க சரி செய்யவேண்டும். தேவனின் குரலை கேட்க உன் ஆவியை எப்படி சரிசெய்ய வேண்டும் ? அப்படி செய்ய இதோ சில வழிகள் :

* தினமும் வேதத்தை வாசிக்கவும்

* நீ வேதத்தில் எதை வாசித்தாய் என்றுச் சொல்லி தொடர்ந்து சிந்தித்து அதை குறித்து தியானம் செய்.

* மிக முக்கியமாய் நீ விரும்பும் வசனங்களை மனப்பாடம் செய்து வேத வாசிப்பை பழக்கப்படுத்திக் கொள்.

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டுள்ளது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்திற்கும் கடிந்துக்கொள்ளுதலுக்கும் உபயோகமாய் இருக்கிறது.

II தீமோத்தேயு 3:16,17.

நீங்கள் இப்பொழுதுத்தான் வேதத்தை படிக்க துவங்கி இருப்பீர்களெனில், புதிய ஏற்பாட்டிலிருந்து வாசிக்க துவங்குங்கள். அதிலிருந்து தேவன், இயேசுவின் வாழ்க்கை அவருடைய உபதேசங்கள் மூலம் உன்னுடன் பேசுவார். நீ பழைய ஏற்பாட்டை படிப்பதற்கு முன்பதாக தேவன் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையை குறித்து நீ அறிந்துக் கொள்ளுவாய்.

''பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்.'' எபிரேயர் 1:1,2.

* தேவன் என்னோடு பேச வேண்டும் என்னும் எதிர்பார்ப்போடு ஆலயத்திற்குச் செல்வாயாக.

* தினந்தோறும் ஜெபி. தேவன் உன்னோடு பேசும்படி வேண்டிக்கொள். நீ ஜெபிக்கும்பொழுது உன் மனதில் சரியான நிலையை அமைத்துக்கொள்ள கண்களை மூடி ஜெபிக்கவும். எல்லா நேரங்களிலும் நீ அவருடன் பேசிக்கொண்டி

ருப்பதில் மாத்திரம் நேரத்தை செலவிடாதே, அவர் உன்னுடைய இருதயத்தோடு பேசும்படியாக அமர்ந்திரு.

• ஆவிக்குரிய பாடல்களை பாடிக்கொண்டு அவைகளைக்குறித்து சிந்திக்கவும்.

• உன்னை சுற்றியுள்ள தேவனின் நன்மைகள், வல்லமை, அவரது அன்பு இவைகளை நோக்கிப்பார்.

• கிறிஸ்தவ புத்தங்களை வாசித்து கிறிஸ்தவ வானொலி நிகழ்ச்சிகளை கேட்கவும்.

• மற்றவர்களோடு தேவனை குறித்து உரையாடி அவருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லவும்.

• தேவன் உன்னை என்ன செய்ய சொல்கிறாரோ அதை செய். அவர் உன்னை நடத்தவேண்டுமென்றால் உன் முழுமனதுடன் நீ அவரை பின்பற்றவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

• இப்புத்தகத்தில் உள்ளதான பாடங்களையும் மற்ற வேத பாடங்களையும் உண்மையுடன் செய்து இவைகள் மூலம் தேவன் உன்னுடன் பேசும்படியாய் வேண்டிக்கொள்ளவும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

**20.** இப்பாடத்தில் தேவனுடைய குரலை எப்படிக்கேட்பது என்பதை மறுபடியும் நினைவுக்கு கொண்டுவா. நீ முன்பு செய்து முடித்தவைகளின் அருகில் ஓர் குறியிடு. இதுவரை நீ செய்யாதவைகளை குறித்தோ அல்லது தொடர்ந்து செய்ய வேண்டியவைகளை குறித்தோ இன்னும் செய்யாமல் இருப்பாயென்றால் அவைகள் ஒவ்வொன்றிற்காக ஜெபிக்கவும். நீ செய்ய ஆரம்பித்திருக்கிறவைகள் ஒவ்வொன்றின் கீழும் கோடிடவும்.

பாடம் 4

# நீ வளர விரும்புகின்ருயா ?



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

உன் ஆத்துமாவை தினமும் போஷி

தேவனில் அமர்ந்திரு

வியாதிக்கு விலகியிரு: சுத்தமாயிரு

வியாதிக்கு விலகியிரு: விஷத்தை உட்கொள்ளாதே

ஆவிக்குரிய பயிற்சி

நீ இப்பொழுது செய்ய வேண்டிய காரியம் என்னவென்ருல் ஆவிக்குரிய வளர்ச்சியை அடையவேண்டும். இதை எப்படி செய்வது? சரீர பிரகாரமாக ஒரு குழந்தை எங்கனம் வளர்கின்றதோ அதைப் போன்றதே:

* சரியான உணவை உட்கொள்
* ஓய்வு எடு
* வியாதியை தவிர்
* பயிற்சி செய்

தேவன் உனக்கு ஒரு புதிய வாழ்க்கையை கொடுத்துள்ளார். இப்பொழுது அதனே பண்படுத்த நீ செய்ய வேண்டியவைகளைச் செய்ய வேண்டும். உன் ஆத்துமாவை போதித்து

அவருடைய வாக்குத்தத்தங்களில் அமர்ந்திரு. உனக்கு கேடு விளைவிக்ககூடியவைகளை தவிர்த்து, வேத வசனத்தில் நீ காணும் பயிற்சிகளை செய். நீ இந்த நான்கு காரியங்களைச் செய்யும்போது, ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்து பொங்கி வழிகிற அனுபவத்தில் ஒவ்வொரு நாளும் சந்தோஷப்படு வாய்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நீ செய்ய வேண்டியவை (நான்கினை தெரிந்தெடுக்கவும்)

....a) உன் ஆத்துமாவை சுத்தமாய் வைத்துக்கொள்
... b) ஆவிக்குரியப் பயிற்சி செய்
....c) வானொலி நாடகங்களை கவனி
....d) தேவனில் அமர்ந்திரு
....e) உன் ஆத்துமாவை போஷி
... f) கடின உழைப்பை தவிர்
...g) பாவ நிவர்த்திச் செய்

விடைகள்: 1a) உன் ஆத்துமாவை சுத்தமாய் வைத்துக் கொள் b) ஆவிக்குரிய பயிற்சி செய் d) தேவனில் அமர்ந்திரு e) உன் ஆத்துமாவை போஷி

## உன் ஆத்துமாவை தினமும் போஷிப்பாயாக

தேவனுடன் உரையாடுதல் உன் ஆத்துமாவை போஷிக்கும். தேவன் உன்னுடன் தமது வசனங்கள் மூலம் பேசுகிறார், நீ அவருடன் ஜெபத்தில் பேசுகிறாய்.

"இயேசு பிரதியுத்தரமாக : மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." மத்தேயு 4:4

"நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளை போல் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்."                1 பேதுரு 2:3

தேவனுடைய வசனமாகிய வேதபுத்தகமே நீங்கள் அருந்த வேண்டிய ஆவிக்குரிய பாலாக இருக்கிறது.

வேதாகமம் புரிந்துக் கொள்ள கடினமாக தோன்றுகிறதா? ஒவ்வொரு நாளும் வாசிப்பதற்கு முன்பாக விளங்கிக்கொள்ள கூடிய ஞானம் தரும்படி தேவனை நோக்கி வேண்டிக்கொள். மட்டுமல்ல, ஏதாகிலும் கேள்விகள் எழும்புமென்றால் முதிர்ந்த தேவ பிள்ளைகளிடமோ அல்லது உனது போதகரிடமோ கேட்டு சரிசெய்துக்கொள்.

வேத பாடசாலை மூலமும், சபை ஆராதனை மூலமும், இப்படிப்பட்ட விசேஷித்த பயிற்சி மூலமும் ஏற்படும் நல்ல சந்தர்ப்பங்களை பயன் படுத்திக் கொள். மட்டுமல்ல நல்ல ஆவிக்குரிய புத்தகங்கள் வாசிப்பது மூலமாகவும் உன் ஆத்துமாவை போஷிக்க கூடும்.

தேவனுக்குள் விரைவாக வளர விரும்புகிறாயா? நன்கு புசி. குறைந்தப்பட்சம் ஒரு நாளைக்கு ஒரு அதிகாரமாவது புதிய ஏற்பாட்டிலிருந்து வாசிக்கவும். இந்த பகுதி வேதாகமத்தில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்தும் நாம் எப்படி நடக்க வேண்டும் என்பதைக்குறித்தும் போதிக்கிறது. விசேஷமாய் நீ விரும்பும் வசனங்களை கற்றுக்கொள்வது நல்லது. இவ்விதமாக தேவனுடைய வசனங்களோடுள்ள உங்கள் ஆர்வத்தை பண்படுத்தி கொள்ளவும்.

"உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவை தேனிலும் மதுரமாயிருக்கும். உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாய் இருக்கிறேன்!"                சங்கீதம் 119:103, 97.

## நீங்கள் செய்ய வேண்டியது

2. ஆவிக்குரிய முறையில் வளர உன் ஆத்துமாவை போஷிக்க கூடியவைகள். (இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்)

....a) மதத்தைக் குறித்த வாக்கு வாதங்கள்

....b) வேதவாசிப்பும் ஜெபமும்

... c) கோழி இறைச்சியும் சாதமும்

....d) சுவிசேஷ நூல்களை வாசித்தல்

3. நீங்கள் இந்த தீருமானத்தை எடுப்பீர்களா?

தேவனே என் ஜீவியத்தில் உமது உதவியைக் கொண்டு உமது வார்த்தைகளை வாசிக்க முயற்சிக்கிறேன். என்னால் வாசிக்க இயலாத நேரங்களில் என் நினைவிலிருக்கும் வேதபகுதியை மனதில் கொண்டு வருவேன். அல்லது மற்றவர்கள் வாசிக்க கேட்பேன். நான் உமது வார்த்தைகளினால் எனது ஆத்துமாவை போஷிப்பேன்.

உன் பெயர்....................................

தேதி.........................................

விடைகள்: 2b) வேத வாசிப்பும் ஜெபமும் d) சுவிசேஷ நூல்களை வாசித்தல்

## தேவனில் அமர்ந்திரு

தேவன் விரும்புவதைச் செய்ய நீ மிகவும் பெலவினமுள்ளவனாக காணப்படுகிறாயா? நம்முடைய சொந்த முயற்சியினால் நல்லவர்களாக இருக்க பிரயாசப் படுவதினாலோ அல்லது நமது நல் நடத்தையினாலோ பரலோகம் செல்ல முடியாது.

நாம் தேவப்பிள்ளைகளாக இருப்பதினாலும் பரலோகதகப்பன் நம்மை நடத்துவதாலும் அவர் நமக்கு அளித்த வழியில் செல்லுகிறோம். அவர் நம்மை முற்றிலுமாய் நடத்துவார், உனது விசுவாசம் அவரது வாக்குதத்தங்களில் அமர்திருக் கட்டும்.

முதலாவது தேவனுடன் கவும்.த்து வைக்கும் அடி திட னில்லாமல் இருக்கிறதா? நீ இடறி விழுந்து இனி அடி எடுத்து வைக்க முயலுவதில் பயனில்லை என்று உணருகின் றாயா? திடன் கொள். இப்புதிய வாழ்வை உனக்களித்த உன் தகப்பன், மறுபடியும் உன் கரங்களைப்பற்றிப்பிடித்து உன்னை உயர்த்துவார். அவர் சமூகத்தில் அமர்ந்திரு. ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் உன்னை தேவனிடம் அற்ப ணித்து, உனது சொந்த பெலவீனங்களை அவரிடம் அறிக்கை செய்து, பெலவீனங்களையும் சோதனைகளையும் மேற்கொள்ள பலன் தருமாறு வேண்டிக்கொள்.

''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார் கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.''

ஏசாயா 40:31

சில வாழ்க்கைப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள் ளாயா? நீ பயப்படுகிறாயா? உனது மிகுந்த பிரயாசத்தினால் நீ அதைரியம் அடைந்ததாக உணருகிறாயா? நீ கர்த்தருக்கு காத்திரு. கவலைகள், அதைரியங்கள், பயம் இவைகளினால் உண்டாகும் போராட்டங்கள், உன் ஆவிக்குரிய வளர்ச்சியை தடை செய்து விடக்கூடாது.

இந்த ஒய்வை (அமர்ந்திருத்தலை) எப்படிப் பெற்றுக் கொள்வது என்று தெரியுமா ? உனது பிரச்சனைகளை பார்ப் பதற்கு பதிலாக அவருடைய வாக்குத்தத்தங்களை விசு வாசித்து அவரை நோக்கிப் பார்க்நீ எடு

"இயேசு சொன்னார் : வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிற வர்களே! நீங்கள் எல்லாம் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

மத்தேயு *11:28*

"ஆகையால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப் படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக் கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்."

மத்தேயு *6:31-33*

தினமும் வேதம் வாசித்தலும், ஜெபித்தலும், 'தேவ னில் அமர்ந்திருக்க'' உதவி செய்யும். நீ ஜெபிக்கும் பொழுது உனது பிரச்சனைகள் அனைத்தையும் அவர் கரத்தில் வைத்து விட்டு, அவர் நலமானதைச் செய்வார் என்று விசுவாசி.

## நீங்கள் செய்ய வேண்டியது

4. ஏசாயா *40:31*ஐ மனப்பாடம் செய்யவும்

5. மத்தேயு *11:28*; மத்தேயு *6:31-33*யும் மூன்று முறை வாசிக்கவும்.

6. ஒன்றுக்கும் கவலைப்படாமல், அவரில் அமர்ந்திருக்க தேவனிடம் உதவி கேட்கவும்.

## வியாதியை தவிர் : சுத்தமாயிரு

ஒரு தாய் தனது குழந்தையை வியாதிக்கு உட்படப் பண்ணுமல், எப்படி அசுத்தங்களுக்கும், மற்ற வியாதியை உண்டாக்கும் கேடுகளுக்கும், விலக்கிக் காக்கிருளோ, அவ் வண்ணமே தேவனும் தமது பிள்ளையின் ஆத்துமா வியாதிப் படாமல் பாதுகாக்கின்ருர். அவர் நம்மை இரட்சித்தப்போது நமது பாவங்களற நம்மை கழுவி நமக்குச் சுத்தமான இருதயத்தை அளித்தார். நாம் ஆவிக்குரிய ரீதியில் நலமுடனிருக்க இது மிகவும் முக்கியமான ஒன்று.

தேவன் உன்னுடன் நடந்து அவர் உன் வழிகாட்டியாய் இருக்கட்டும். அநாகரிகமான கேளிக்கைகளுக்கும், ஒழுக்கக்கேடான நடத்தைகளுக்கும் விலகியிரு. தேவன் சொல்லாத இடங்களுக்கு நீ செல்லாதே! உன் சிந்தனைகளில், செய்கையில், வார்த்தைகளில் சுத்தமாயிரு.

## நீங்கள் செய்ய வேண்டியது

7. (இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்) தேவப் பிள்ளைகள் அநாகரீக கேளிக்கைகளையும் ஒழுக்கக் கேடான பழக்கவழக்கங்களையும் விட்டு விட காரணம் :

…a) தேவன் அவர்கள் நற்பொழுது போக்கை விரும்புகிறதில்லை.

…b) ஆவிக்குரிய ரீதியில் ஆரோக்கியமுடனிருக்க தங்கள் ஆத்துமாவை சுத்தமாய் வைத்துக் கொள்ள வாஞ்சையுடன் உள்ளார்கள்.

...c) அசுத்த உரையாடல்களினின்றும், அசுத்த சிந்தனைகளினின்றும், அசுத்த செய்கைகளினின்றும் விலகிச் சுத்தமாயிருக்க தேவன் விரும்புகின்றார்.

விடைகள் : 7b) ஆவிக்குரிய ரீதியில் ஆரோக்கியமுடனிருக்க, தங்கள் ஆத்துமாவை சுத்தமாய் வைத்துக் கொள்ள வாஞ்சையுடன் உள்ளார்கள். c) அசுத்த உரையாடல்களினின்றும், அசுத்த சிந்தனைகளினின்றும், அசுத்த செய்கைகளினின்றும் விலகிச் சுத்தமாயிருக்க தேவன் விரும்புகின்றார்.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." மத்தேயு 5:8

உனது சிந்தனை அசுத்தமான சிந்தனைகளில் தாபரிக்குமென்றால் அது உனது ஆத்துமாவை நோயுறச் செய்யும். உனது சித்தத்தைப் பெலவீனப்படுத்தும், மட்டுமல்ல நீ பாவத்தில் விழ ஏதுவாக்கும்.

உன் சிந்தனைகளை எப்படி கட்டுப்படுத்துவது ? நற்சிந்தனைகளினால் உங்கள் மனதை நிரப்புங்கள். வேதத்தை வாசித்து அது சொல்வதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருங்கள். துர்ச்சிந்தனைகளை அகற்றும்படியாய் தேவனிடம் உதவி கேட்டு விண்ணப்பம் செய்யுங்கள். இப்படி நீங்கள் ஜெபிக்கலாம் : "எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று காத்து இரட்சியும்." ஆயினும், உங்கள் பொறுப்பு இதோடு முடிந்து விடுவதில்லை. நீ பாவத்தை விரும்பவில்லையானால், சோதனைகளுடன் விளையாடாதே !

நீ தூய சிந்தனைகளை விரும்புவாயானால், அசுத்தப் புத்தகங்களை வாசிக்காதே, அசுத்தக்காட்சிகளைக் காணாதே, அல்லது அசுத்தக் கதைகளை கவனியாதே.

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

சங்கீதம் 19:14

## நீங்கள் செய்ய வேண்டியது

8. ஒருவன் தனது சிந்தனைகளைக் கட்டுப்படுத்த முடியுமா?

...a) ஆம், தேவனுடைய துணையுடன் முடியும்

...b) இல்லை, தன் மனதில் வரும் அனைத்தையும் சிந்தித்துக் கொண்டிருப்பான்

...c) எவராயினும் தனது சிந்தனைகளை கட்டுப்படுத்த இயலும்

9. உங்கள் துர்ச்சிந்தனையுடன் எப்பொழுதாவது போராடியிருக்கிறீர்களா? ....................

10. சங்கீதம் 19:14ஐ மனப்பாடம் செய்து அதனை உன் ஜெபமாக்கிக் கொள். தினமும் இதை உன் தனி ஜெபத்தில் சொல்வது நல்லது

விடை : 8a) ஆம், தேவனின் துணையுடன் முடியும்

அரை மனதுடன் அவரை சேவிப்பதைவிட, முழு மனதுடன் அவருக்கு நம்மை அற்பணிப்பது மிகவும் எளிது. பாவத்துடன் விளையாடாதே! ஆவிக்குரிய ரீதியில் உன்னை வியாதிக்குட்படுத்தும் எந்தக் காரியமானாலும் அவைகளை விட்டொழி.

"அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம்

சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். நம் முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங் களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.'' 1 யோவான் 1:7,9



இயேசு கிறிஸ்துவின் இரத்தம், நம்மைப் பாவசிந்தனை களினின்று, பாவ செய்கைகளிலிருந்தும் கழுவி சுத்திகரிக்கும்.

## வியாதியை தவிர் : விஷத்தை உட்கொள்ளாதே

சில குறிப்பிட்ட சுபாவங்களும், உணர்ச்சிகளும் ஆத்து மாவிற்கும் சரீரத்திற்கும் கொடிய விஷமாய் இருக்கின்றன. கோபம், கவலை பொறாமை, பகைமை, சந்தேகம், பயம், ஆத்திரம் பொறுமையின்மை இவைகள் அஜீரண குழப்பம், இருதய சம்பந்த நோய்கள் மற்றும் பல வியாதிகளை உரு வாக்க எதுவாய் இருக்கிறது. இவைகள் ஆவிக்குரிய ஜீவியத் திற்கு தடையாகவும் எல்லாவித துன்பங்களுக்கு காரண மாயும் இருக்கின்றன. பெருமை, சுயசித்தம், அவநம்பிக்கை பிடிவாதகுணம், இவைகள் ஆவிக்குரிய விஷமாக காணப் படுகிறது. இவைகள் ஒரு தேவ பிள்ளைக்குரிய சந்தோஷத் தை நீக்கி அவர்கள் ஆத்துமவை பெலவீனப்படுத்தவும், வியாதிப்படுத்தவும், சந்தோஷமற்று இருக்கவும் செய்கிறது. ஒவ்வொரு காலையிலும் இப்படிப்பட்டதான விஷத்திற்குரிய தான காரியங்களை செய்யாதப்படிக்கு உன்னை காத்துக் கொள்ள தேவனிடம் வேண்டிக்கொள்.

நீ எப்பொழுதாவது பெலவீனமாக ஆவிக்குரிய வியாதியை உணருவாய் என்றால் இயேசு மிகப்பெரிய வைத்தியர் என்பதை நினைவில் கொள். அவரிடம் முழு மனதுடன் சென்று ஜெபி. அவர் உனக்கு ஆவிக்குரிய சிந்தனைக்குரிய சரீரபிரகாரமான சுகத்தை அருளுவார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

11. (இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்) வெறுப்பு, ஆத்திரம், கவலை.

...a) இவைகள் வியாதிக்கு காரணமாய் உள்ளன

...b) இவைகளை ஒரு மனிதனுடைய உள்ளத்தை விட்டு அகற்ற முடியாது

...c) இவைகள் ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் விஷமாய் இருக்கின்றன

...d) இவைகள் உன் வாழ்க்கைக்கு பிரயோஜனமானவை

விடைகள் : 11a) இவைகள் வியாதிக்கு காரணமாக உள்ளன c) இவைகள் ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் விஷமாய் இருக்கின்றன.

## ஆவிக்குரிய பயிற்சி

சரீரம் தேக பயிற்சியினால் பெலன் அடைகிறது. அப்படியே ஆத்துமாவும் தேவனுக்காக செய்யும் ஊழியத்தினால் பெலப்படுகிறது. நீ புதிய வாழ்வை பெற்றுக்கொண்ட நாள் முதல் அவர் உனக்கு தந்த மகத்தான இரட்சிப்பிற்கு பதிலாக நீ பல காரியங்களை செய்யலாம். நீ ஆவிக்குரிய நிலையில் வளரும்போது அவருடைய வார்த்தைகளை அதிகமாய் கற்கும்

போதும் தேவன் உனக்கு அதிகமான சந்தர்ப்பங்களையும் அவருடைய வேலைகளில் உனக்கு ஒரு சில பொறுப்புகளையும் தருகிறார்

ஆவிக்குரியப் பயிற்சிகளில் சில: மற்றவர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தல், அவர்களுக்காக ஜெபித்தல், ஆலயத்திற்கு வரும்படி அவர்களை அழைத்தல். சபையில் உன் பொறுப்பை நீ எடுத்துக்கொண்டு பாவத்திற்கு விரோதமாய் எதிர்த்து நிற்பது உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர உதவிப்புரியும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

12. (இரண்டு விடைகளை தெரிந்தெடுக்கவும்) ஆவிக்குரிய பயிற்சி என்பது

...a) இயேசு கிறிஸ்துவை குறித்து மற்றவர்களுக்கு அறிவிப்பது

....d) சுவிசேஷத்தை குறித்து இகழ்ச்சியாய் பேசுபவரிடம் வாக்கு வாதம் செய்வது

...c) மற்றவர்களை ஆராதனைகளுக்கு வரும்படியாக அழைப்பது

...d) தினம் 100 மீட்டர் தூரமும் ஓடுவது

விடைகள் : a) இயேசு கிறிஸ்துவை குறித்து மற்றவர்களுக்கு அறிவிப்பது c) மற்றவர்கள் ஆராதனைகளுக்கு வரும்படியாக அழைப்பது

பாடம் 5

# புதிய ஜீவியம்
# புதிய நடவடிக்கை



## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

உங்கள் நேரத்தை எங்ஙனம் செலவிடுகிறீர்கள் ?
உங்கள் ஆர்வம் எப்பொழுது மாற்றம் அடைகிறது
உங்கள் புதிய வாஞ்சைகள்
சபை ஆராதனையில் பங்கெடுத்தல்
வேதம் வாசித்தல்
ஜெபம் : எப்பொழுது ஜெபிப்பது
ஜெபம் : எப்படி ஜெபிப்பது
சாட்சி பகருதல்
தேவனுக்கென்று பாடுதல்
சுவிசேஷம் பிரசங்கித்தல்
கொடுத்தல்
உன்னால் இயன்ற வழிகளில் உதவிச் செய்தல்
சபை குழுக்களில் பங்கெடுத்தல்
அதிகமான நடவடிக்கைகள்



## உங்கள் நேரத்தை எங்ஙனம் செலவிடுகின்றீர்கள்?

நீ ஒவ்வொரு நாளும் வேலே செய்வதற்கும் சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் குறிபிட்ட நேரங்களே செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆனுல் இதர நேரங்களே எப்படி செலவழிக்கிருய் ? ஒரு நபர் தன்னுடைய ஓய்வு நேரங்களே செலவழிப்பது அவரும் அவருடைய குடும்பத்தாரும் எதில் அதிக ஆர்வம் காட்டுகிருர் என்பதை பொறுத்தது. சிலர் எல்லா நேரங்களிலும் வேலே செய்கின்றனர். மற்றவர்கள் விளேயாடுகின்றனர். சிலர் ஆலயங்களுக்கு சென்று அங்குள்ள வேலேகளில் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுகின்றனர். மற்றவர்களுக்கு அப்படி செய்வதற்கு நேரமில்லே.

நீ விரும்புகின்ற எல்லாவற்றையும் செய்ய உனக்கு போதுமான நேரமில்லே என்று, நீ அதிகமாய் விரும்புகின்றவைகளே செய்யும் வரை நேரத்தை ஒதுக்குகிருய்.

### நீங்கள் செய்ய வேண்டியது

1. உனது ஓய்வு நேர நடவடிக்கைகள் வழக்கமாக தீர்மானிக்கப்படுவது எதின் மூலம் என்ருல்

...a) உனது முக்கிய ஆர்வத்தைப் பொறுத்தது

...b) மற்றவர்கள் சொல்வதை பொறுத்தது

...c) பாரம்பரியத்தைப் பொறுத்தது

விடை : 1a) உனது முக்கிய ஆர்வத்தைப் பொறுத்தது

## எப்பொழுது உங்கள் ஆர்வம் மாற்றம் அடையும்

நீ சிறுவனுய் இருக்கும்பொழுது விளேயாடிய விளேயாட்டுகளே இப்பொழுது விளேயாடுவதில்லே, ஏனெனில் உனக்கு

அதிக விருப்பம் கொண்ட சிலவற்றை இப்பொழுது செய்து கொண்டிருக்கிறுய். உனது விருப்பங்கள் மாறும்போது நடவடிக்கைகளும் மாறும்.

உனது ஆரோக்கியத்திற்கு தீங்கும் உனது ஆத்துமத்திற்கு கேடும் விளேவிக்க கூடிய நண்பர்களின் நட்பை விட்டு விட்டதால் உனது பழைய நண்பர்கள் உன்னேக் குறித்து ஆச்சரியம் அடையலாம். நீ ஆழ்ந்த சந்தோஷமுள்ள பிரயோஜனமுள்ள, திருப்திகரமான வாழ்க்கையில் பிரவேசித்திருக்கிறுய் என்பதை விளங்கிகொள்ளவில்லே.

உன்னே திருப்திபடுத்தாது என அறிந்த செயல்களுக்கு நீ மறுபடியும் போகவேண்டுமா? குப்பை தொட்டிகளில் கிடைக்கும் உணவினுல் தன் பசியை ஆற்றி வந்த ஒருவனே உயரிய நண்பருடன் உணவருந்தும்படி தினமும் அழைப்புக் கொடு. இப்படிப்பட்ட மனிதன் மறுபடியும் குப்பை மேட்டுக்கு செல்வானே?

## நீங்கள் செய்ய வேண்டியது

2. இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராய் ஏற்றுக் கொண்டதினுல் உங்கள் வாஞ்சைகளில் மாறுதல் காண்கிறீர்களா?

3. உங்கள் செய்கைகளில் மாற்றமுண்டா?

## உங்கள் புதிய வாஞ்சைகள்

தேவ பிள்ளேயாய் இருக்கிற நீ புதிய வாஞ்சைகளே உடையவனுய் இருப்பாய். இவைகள் உன்னே குழுக்களுடன் சேர்ந்து செயல்படுவதற்கும் தனிப்பட்ட முறையில் செயல்படவும் செய்யும். சாப்பிடுதல், தூங்குதல், வீட்டு வேலேகளே

கவனித்தல் இவைகளை இன்னும் நீ செய்து கொண்டிருந்தாலும் உனது மெய் ஜீவியம் உங்கள் புதிய வாஞ்சைக ளைமைய மாய் கொண்டுள்ளத ாய்காணப்படும்.

எல்லாவற்றிலும் மேலாக நீ ஒருவரை நேசிக்கும்போது அவருடன் இருந்து அவரை திருப்தி செய்யும்படியாக விரும்புவாய். இப்பொழுது நீ தேவனை நேசிக்கிறப்படியால் அவருடன் உன் நேரத்தை செலவிட்டு உன் எல்லா செய்கைகளிலும் அவரை திருப்திப்படுத்த விரும்புவாய்.

## நீங்கள் செய்ய வேண்டியது

4. ஒரு தேவப்பிள்ளைக்கு இருக்கவேண்டிய முக்கிய வாஞ்சை என்னவென்றால்

...a) பணம் சாம்பாதிக்க முயல வேண்டும்

...b) தன்னில் தானே மகிழ்ச்சிக் கொள்ளவேண்டும்

...c) பரலோக தகப்பனுடன் நேரத்தை செலவு செய்து அவர் விரும்பும் காரியங்களை செய்ய வேண்டும்

விடை : 4c) பரலோக தகப்பனுடன் நேரத்தை செலவு செய்து அவர் விரும்பும் காரியங்களை செய்ய வேண்டும்.

நமது பரம பிதா இப்பூமியில் அமைக்க ஆயத்தம் செய்துக்கொண்டிருக்கும் ராஜ்ஜியத்தை குறித்து மிக வாஞ்சையுடன் இருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வேலைகளை அவர் வைத்திருக்கிறார். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்து நீதியோடும் சமாதானத்தோடு ஆளும்படியாய் நாமும் ஆயத்த பட்டுக்கொண்டிருக்கிறோம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

5. இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்னதாக காரியங்களை சரி செய்ய அவர் உன்னிலிருந்தும் எதிர்பார்க்கிறார் என்னும் உண்மையை நீ எவ்வாறு உணருகிறாய் ?

....a) இப்படிப்பட்ட மேன்மையும் சிலாக்கியமும் கிடைத்திருக்கிறபடியால் சந்தோஷப் படுவேன்

....b) தேவனுக்கென்று சில காரியங்களை செய்ய வேண்டியிருப்பதால் வருத்தமடைகிறேன்

6. ஐந்தாவது கேள்விக்கு உங்கள் பதில் ''a'' யாக இருப்பதால் அப்படிப்பட்ட சிலாக்கியமும் அவருடைய இராஜ்ஜியத்திற்கு பங்கு வகிக்கும்படியான நற்பாக்கியத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்தவும். உங்கள் பதில் ''b''யாக இருந்தால் அதை குறித்து நீங்கள் ஜெபிக்கும்படியாக உங்களுக்கு புத்தி கூறுகின்றோம்.

தேவனின் இராஜ்ஜியத்தை குறித்த புதிய ஆர்வங்கள் உங்களை உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருக்க செய்கிறது. இங்கே சில கடமைகள் நீங்கள் புது பயன் அடையும்படியாகவும் உங்கள் வாழ்க்கை அர்த்தம் உள்ளதாய் இருக்கவும் கொடுக்கப்பட்டுள்ளன.

## சபை ஆராதனையில் பங்கெடுத்தல்

தேவனின் குடும்பம் என்பது ஒழுங்கு படுத்தப்பட்ட சபைகளாகும். ஒவ்வொரு பகுதியிலிருக்கும் தேவனுடைய பிள்ளைகளும் வழக்கமாக ஒன்றுகூடி தேவனை ஆராதித்து ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய நிலைமையில் உதவிச்செய்து,

தேவனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலே உற்சாகத் துடன் செய்கின்றனர்.

இப்படிப்பட்ட சபை கூடுதல் யாருடைய வீட்டிலாவது அல்லது இந்த உபயோகத்திற்காக பிரதிஷ்டை செய்யப் பட்ட கட்டிடங்களில் நடக்கலாம். உன்னால் இயன்றவரை இப்படி நடக்கும் ஆராதனைகளுக்கு அடிக்கடி செல்வதோடு மட்டுமல்லாமல் உனது நண்பர்களேயும் அழைத்துச் சென்று சுவிசேஷத்தை கேட்கும்படிச் செய்யலாம். இப்படி செய்வ தால் கிறிஸ்துவுக்குள்ளான உன் உடன் சகோதரர் சகோதரி களுடன் ஐக்கியம் கொண்டு சந்தோஷிப்பதோடு தேவ பிர சன்னத்தையும் உணருவாய்.

ஒழுங்காய் சபைக்கு செல்வதின் மூலமாக தேவனின் சேவைக்கென்றும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கென்றும் சபையில் ஓர் அங்கத்தினனாக விரும்புவாய். சபையின் ஒவ் வொரு நிகழ்ச்சிகளிலும் பங்குப்பெற்று அதன் சிலாக்கியங் களேயும் ஆசீர்வாதங்களேயும் குறித்து சந்தோஷப்படு. இப் பாடங்கள் நீ ஒரு சபையின் நல்ல அங்கத்தினனாக இருக்க உதவி செய்யும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

7. தேவனுடைய வேலேயை அதிக உற்சாகமாய் செய் யவும் தேவபிள்ளேகளின் ஐக்கியத்தினால் உண்டா கும் சந்தோஷத்தையும் தேவனின் ஆசீர்வாதத்தை யும் பெற விரும்பினால்

   a) சபை ஸ்தாபனத்திற்கு வெளியேயிரு

   b) சபை ஆராதனேகளில் பங்குபெறு, ஆனால் சபை யில் அங்கத்தினராகாதே

c) ஓர் நல்ல சபையின் அங்கத்தினராயிருந்தும் சபையின் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறு

விடை 7c) ஓர் நல்ல சபையின் அங்கத்தினராயிருந்து சபையின் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்குபெறு

உன் சபையின் போதகரோ, அல்லது தேவப் பிள்ளைகளோ(விசுவாசிகள்) உன்னை தங்கள்அறியாமையினுல் குற்றமாய் பேசினுல் உனக்கு நேரிடுவது என்ன? ஓர் குடும்பத்தில், பிள்ளையொருவன் தனது சகோதரரை அவமதித்தால் அவமதிக்கப்பட்ட பிள்ளை வழக்கமாய் வீட்டை விட்டு வெளியேறுது. சில வேளைகளில் சபையில் இவ்வாறு நேரும்போது சில தேவபிள்ளைகள் : "அவன் எனக்கு விரோதமாய் பேசிவிட்டான்" ஆகையால் இனி நான் சபைக்குச் செல்வதில்லை, என்று வீட்டிலிருந்து கொண்டே நான் தேவனை ஆராதிக்கிறேன்." என்றுல் ஜாக்கிரதையாயிரு! இப்படிப்பட்ட செய்கைகளினுல் உன்னை பெலவீனப் படுத்தி, சபையை விட்டு வேறுபிரித்து, தேவனை விட்டு வழி விலகப்பண்ணுவதற்கு பிசாசின் நேர்த்தியான தந்திரங்களில் இதுவும் ஒன்று.

உனது தகப்பன் தனது வீட்டில், தனது பிள்ளைகள் அனைவரும் ஒன்று கூடவேண்டும் என்று எதிர்பார்ப்பதை நினைவில் கொள். சபைக்கட்டிடம் மிகவும் எளிய நிலையிலோ அல்லது அங்கு செய்யப்படும் ஒவ்வொன்றும் நீ ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இராதது போல் இருக்கலாம். ஆனுல் அங்குதான் உனது தகப்பனின் மேஜையில் உன் ஆவிக்குரிய ஆகாரம் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்.

"சபை கூடி வருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லக்கடவோம்." எபிரேயர் 10:25

## நீங்கள் செய்ய வேண்டியது

8. உங்களது சபைப்போதகர் உங்களே பாதிக்கக்கூடிய நிலேயில் ஏதாகிலும் கூறிவிட்டால்

....a) சபைக்குச் செல்வதை நிறுத்திவிட வேண்டும்

....b) வேறொருப்போதகரை நாடிச்செல்லவேண்டும்

....c) அவரை மன்னித்து, தொடர்ந்து சபை ஆரா தனேகளுக்குச் செல்லவேண்டும்

9. எபிரேயர் 10:25ஐ மனப்பாடம் செய்யவும்

விடை : 8c) அவரை மன்னித்து, தொடர்ந்து சபை ஆராதனேகளுக்குச் செல்லவேண்டும்

## வேத வாசிப்பு

வேத வாசிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் பார்த்து விட்டோம். உனது சொந்தக் குடும்பத்தில் உள்ள வர்களுடன் சேர்ந்து தினமும் வேதத்தை வாசிக்கவும் ஜெபம் செய்யவும் முடிகின்றதா ? அதனே நாம் குடும்ப பலிபீடம் அல்லது குடும்ப ஜெபம் என்று அழைக்கின்றோம். இது மெய்யான ஆசீர்வாதத்தை உன் குடும்பத்தில் கொண்டு வரும். தேவனுடைய வார்த்தை அந்தந்த நாளில் உன்னே பெலப்படுத்தி உன்னே வழி நடத்தும். உன் குடும்பத்தில் குடும்ப ஜெபத்தின்போது குடும்ப அங்கத்தினரின் தேவைகள் பிரச்சனேகள் இவைகளுக்காய் சேர்ந்து ஜெபிக்கலாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

10. ''குடும்ப ஜெபம்'' அல்லது ''குடும்ப பலிபீடம்'' என்பதன் பொருள்

....a) குடும்பங்கள் மாத்திரம் பங்குபெறும் ஓர் சபை

....b) குடும்ப அங்கத்தினர்கள் ஒன்று கூடி வீட்டில் வேதம் வாசித்து ஜெபிப்பது

விடை : *10*b) குடும்ப அங்கத்தினர்கள் ஒன்று கூடி வீட்டில், வேதம் வாசித்து ஜெபிப்பது

## ஜெபம் : எப்பொழுது ஜெபிப்பது

ஒவ்வொரு தேவப்பிள்ளையும், மிக முக்கியமாய் செய்ய வேண்டியவைகளில் ஒன்று ஜெபம். நீ ஜெபித்து அதற்கு தேவன் பதிலளிக்கும்போது நீ தேவனுடன் இணைந்து வேலை செய்து கொண்டிருக்கின்றாய். ஆகையால் ஜெபிப்பதற்கான நேரத்தை எடுத்துக்கொள்.

* காலையில் எழுந்து ஒரு புதிய நாளை துவங்கும்போது அந்நாளை தேவனுடன் துவங்கி, அந்நாளின் பாடுகளை மேற்கொள்ள தேவைப்படும் சரீரப் பிரகாரமான நல்நடத்தைக்குரிய, ஆவிக்குரிய, தேவப்பெலனை பெற்றுக்கொள்.

* உன் உணவிற்காக தேவனுக்கு நன்றி செலுத்து

* குடும்ப ஜெபத்தை தினமும் அமைத்துக்கொள்.

* தேவன், எனது வீடு எல்லாருக்கும், ஜெபவீடாயிருக்கிறது என்று கூறியிக்கிறபடி சபை ஆராதனையில் ஜெபம் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் ஜெடம் செய்யவும்.

* எல்லா நேரங்களிலும் உன் இருதயத்தை உயர்த்தி, உனக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆசிர்வாதங்களுக்காக நன்றி செலுத்தி உனது தேவைகளுக்காக அவரை நோக்கி ஜெபி. இந்தவகையில், உனது பரம தகப்பனோடு எப்பொழுதும் வார்த்தைகளை கொண்டு பேசவேண்டும் என்பது அவசியமில்லை. அவர் உன் நினைவுகளை அறிந்திருக்கிறார்.

• நீ படுக்கைக்குச் செல்லுமுன், பகற்காலம் முழுவதும் உன்னைக்காத்த தேவனுக்கு நன்றி செலுத்தவும். பகற்காலத்தில் அவருக்கு விரோதமாய், தப்பிதங்கள் செய்திருப்பின் அவைகளுக்காய் மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு இரவில் உன்னை அவரது கரத்தில் ஒப்படைப்பாயாக.

## நீங்கள் செய்ய வேண்டியது

*11.* நீங்கள் ஜெபிக்க வேண்டியது

....a) சபையில் மட்டும்

....b) எந்த நேரத்திலும்

விடை: *11*b) எந்த நேரத்திலும்

## ஜெபம் : எப்படி ஜெபிப்பது

நீ ஒரு வேளை இவ்வாறு சொல்லலாம் ''எனக்கு ஜெபிப்பது எப்படியென்று தெரியாது.'' இது கடினமான ஒன்றல்ல. ஓர் நண்பருடன் பேசுவது போல தேவனுடன் உரையாட, பரிசுத்தாவியானவர், உனக்கு உதவி செய்வார்.

தேவன் உனக்கு செய்த எல்லாவற்றையும் நினைத்து அவருடைய ஆசீர்வாதங்களுக்காய் அவருக்கு நன்றி செலுத்தவும். உனது தேவைகளுக்காகவும், நீ நேசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள். உனது நண்பர்கள், உறவினர்களின் இரட்சிப்புக்காய் வேண்டிகொள். உனது போதகருக்காய், சபைக்காய், உனது கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளுக்காய் உலகெங்கிலும் செய்யப்பட்டு வருகின்ற சுவிசேஷ வேலைக்காய் வேண்டிக்கொள். புதிதாய் சபைக்கு வரும் தேவப்பிள்ளைகளுக்காகவும் அவர்களது பிரச்சனைகளுக்காகவும் ஜெபி, உனது தேசத்திற்காய் ஜெபி.

ஜெபிக்க ஆரம்பி. வெகு விரைவில் நன்கு ஜெபிக்கக்கற்றுக் கொள்ளுவாய்.

இயேசு ஓர் மாதிரி ஜெபத்தை கற்று தந்துள்ளார். விரும்புவாயானல் அதை மனப்பாடம் செய்து உன் ஜெப நேரத்தில் உபயோகப் படுத்தலாம்.

"மாதிரி ஜெபம்"

"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உமது நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராஜ்யம் வருவதாக; உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல இப் பூமியிலும் செய்யப்படுவதாக. எங்களுக்கு தேவையான இந்த நாளின் ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். நாங்கள் எங்கள் கடனாளிகளுக்கு மன்னிக்கிறது போல எங்கள் பாவக் கடன்களை எங்களுக்கு மன்னியும், எங்களை சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணுமல், தீமை யினின்று விடுவியும், இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென். மத்தேயு 6:9-13

## நீங்கள் செய்ய வேண்டியது

12. மாதிரி ஜெபத்தை மனப்பாடம் செய்யவும்.

### சாட்சி பகருதல்

இதன் பொருள், தேவன் உனக்கு செய்த நன்மைகளை மற்றவர்களுக்கு கூறுதல் ஆகும். இதை நீ வீட்டிலோ, வீதியிலோ, சபை ஆராதனையிலோ, அல்லது கடிதங்களிலோ செய்ய முடியும். மற்றவர்கள் கிறிஸ்துவைப் பற்றி உனக்கு

சொன்னதுபோல, நீயும் உனது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அவரைக்குறித்து அறிவிக்க வேண்டும். அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியாய் அவர்களுக்காக ஜெபம் பண்ணுவாயாக.

இயேசு கிறிஸ்துவே இரட்சகர் என்றும், அவர்மேல் நீ கொண்டிருக்கும் விசுவாசத்தை மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படியாக அவரைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று வேதம் வற்புறுத்துகிறது. இயேசு சொன்னார்: "நீங்கள் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்." உனக்கு தைரியமில்லாதிருந்தால் தேவனிடம் வேண்டிக்கொள். அவர் உனக்கு அதைத்தருவார். உன்னை போன்ற ஆயிரக்கணக்கானோர் பயமுடைவர்களாய் காணப்பட்டனர். ஆனால் தங்கள் பயத்தை மேற்கொண்டு பெரிதான ஆசீர்வாதங்களையும், புது பெலனையும் கண்டடைந்து அவரைக் குறித்து சாட்சி பகர்ந்தனர். இயேசு சொன்னார்.

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்."

மத்தேயு *10:32*

"......இந்த சந்ததியில் என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும், எவன் வெட்கப்படுவானோ, அவனை குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடு கூட வரும்போது வெட்கப்படுவார்."

மாற்கு *8:38*

## நீங்கள் செய்ய வேண்டியது

*13.* தேவன் தமது பிள்ளைகள்

a) தங்களுக்கு அவர் செய்தவைகளைக் குறித்து மௌனமாய் இருக்கவேண்டுமென விரும்புகின்றார்.

b) தங்களுக்கு அவர் செய்ததைக் குறித்து மற்றவர்களுக்கு கூறவேண்டுமென்று விரும்புகின்றார்.

விடை : 13b) தங்களுக்கு அவர் செய்ததைக்குறித்து மற்றவர்களுக்கு கூறவேண்டுமென்று விரும்புகின்றார்.

## தேவனுக்கென்று பாடுதல்

வீட்டிலோ, சபையிலோ நீங்கள் பாடும் பாடல் உங்களையும், மற்றவர்களையும் ஊக்குவித்து, தைரியப்படுத்தி ஆசீர்வாதத்திற்குள் நடத்தும். உங்களது குரல் பாடுவதற்கேற்றதாய் இருக்கவேண்டும், என்ற அவசியமில்லை. உங்கள் இருதயத்திலிருந்து, பாட்டினால் தேவனை மகிமைப்படுத்தினால் அதுவே போதுமானது.

"......சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடுங்கள்." கொலோசெயர் 3:16

## நீங்கள் செய்ய வேண்டியது

14. பாடுவதற்கு மிகவும் முக்கியமாக வேண்டுவது

....a) நன்கு பாடக்கூடிய குரல்

...b) சபையில் பாடுதல்

....c) இருதயத்திலிருந்து தேவனை மகிமைப்படுத்துதலாய் இருந்தல்

விடை : 14c) இருதயத்திலிருந்து தேவனை மகிமைப்படுத்துதலாய் இருத்தல்

## சுவிஷேம் பிரசங்கித்தல்

இதுவே சபையின் மிகவும் முக்கியமானதாகும். சிலர், முழுநேரமும் இவ்வேலைக்கென்று அழைக்கப்படுகின்றனர். தேவன் அவர்களை, போதகர்களாகவோ, சுவிசேஷகர்களாகவோ பணியாற்றுவதற்கென்று அழைக்கிறார்.

## கொடுத்தல்

சுவிசேஷம் பிரசங்கித்தல் தேவகுடும்பத்தின் முழு பொறுப்பாக இருக்கிறபடியால் பிதாவானவராகிய தேவன் தமது பிள்ளைகளின் வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை கொடுத்து அதன் செலவுகளை நிறைவேற்ற கோருகிறார். இதை நாம் தசமபாகம் என அழைக்கிறோம். இப்பணம், ஆராதனை நடக்கும் அறை வாடகைக்காகவோ, சபைக்கட்டிடம் கட்டுவதற்காகவோ, முழுநேர ஊழியரின் சம்பளத்திற்காகவோ, மின்சாரம், தண்ணீர், சபைப்பராமரிப்பு இவற்றிற்காகவோ, பயன்படுத்தப்படும். நமது காணிக்கைகளும் கூட, வானொலி ஒலிபரப்பு, சுவிசேஷ நூல்கள், அஞ்சல் வழி வேத பாடம், மிஷினரி ஊழியம் இவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

### நீங்கள் செய்ய வேண்டியது

15. தசமபாகம் கொடுத்தல் என்றால்

....a) வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை தேவனுக்கென்று கொடுப்பது

....b) உனது சொத்துகளில் பத்தில் ஒரு பகுதி

—c) நான்காவது பகுதியை தேவனுக்கென கொடுப்பது

விடை : 15a) வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை தேவனுக்கென்று கொடுப்பது



உங்கள் தசமபாகம், காணிக்கைகள், உங்கள் ஆராதனையின் ஒரு பகுதியாயிருக்கிறது. அவைகள் தேவன் அளித்துள்ள ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்துதல் ஆகும். மட்டுமல்ல, இவைகள், உலகிற்கு செய்யும் சுவிசேஷ வேலையில் நீயும் ஓர் அங்கத்தினராயிருக்கச் செய்கிறது.

தேவன் உனக்கு வேலைச் செய்ய பெலன் அளிக்கிறபடியால், அவ்வேலைச் செய்யும், பத்து மணிக்குள் ஒரு மணிக்குரிய ஊதியத்தை நீ தேவனுக்கு கொடுக்கிறாய். அந்த ஒரு மணி நேரம் சம்பாதிப்பது சுவிசேஷ பணிச் செய்ய உபயோகப்படுத்தப்படுகிறது. ஆகையால் உனது தசமபாகம் மூலம் சுவிசேம் பிரசங்கிக்கிறாய் என்பதை அறிந்து கொள்.

நீ கொடுப்பது உனக்கு மூன்று விதமான ஆசீர்வாதங்களை அளிக்கின்றது.

* ஆவிக்குரிய ஆசீர்வாதம்
* திருப்தி : தேவனுடைய குடும்பத்தில் உங்களின் கடமையை சரியாய் செய்வதால் நம்பக் கூடியவன் என்னும் மகிழ்ச்சி அடைவாய்
* ஆசீர்வாதப்பெருக்கம் : நீ கொடுப்பதில் தேவனை தோற்கடிக்க முடியாது. தசமபாகம் கொடுப்பவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். ஆயிரக்கணக்கான தேவப்பிள்ளைகள், தாங்களடைந்த ஆசீர்வாதங்களை சொல்லக்கூடும்.

"...தசமபாகங்களையெல்லாம் பண்டக சாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின பலகணிகளைத்திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசிர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள்.

மல்கியா 3:10

"....உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்." II கொரிந்தியர் 9:7

## நீங்கள் செய்ய வேண்டியது

16. தேவன் ஆசிர்வதிப்பேன் என வாக்குபண்ணியுள்ளது

....a) தங்களால் இயன்றவரை சேர்த்து வைப்பவர்களை

....b) தசமபாகம் கொடுப்பவர்களை

17. மல்கியா 3:10ஐ, மனப்பாடம் செய்யவும்

விடை : 16b) தசமபாகம் கொடுப்பவர்களை

## உன்னால் இயன்ற வழிகளில் உதவி செய்தல்

தேவனுக்கென்று நீ எந்த வேலையைச் செய்தாலும், அவை நீ ஆவிக்குரிய வளர்ச்சியடைய துணைபுரிகின்றன. நீ ஆலயத்தை சுத்தம் செய்வதாயிருந்தாலும், அல்லது உன் வீட்டண்டை கூட்டம் நடத்தினாலும், அல்லது உனது வீட்டிலேயே ஓய்வு நாள் பாடசாலை நடத்தினாலும், மேற்கூறிய ஆசிர்வாதங்களை அடைய உதவி செய்கின்றன. நீ தேவனுக்கென்று இன்னும் எதைச் செய்ய கூடும் என உன் போதகரிடம் கேட்டு விசாரிக்கவும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

18. ஒரு தேவப் பிள்ளை

....a) சபைப் போதகருக்கு எந்தெந்த வகைகளில் உதவி செய்ய இயலுமோ அப்பொதெல்லாம் அதற்காய் அற்பணிக்கவேண்டும்

...b) சபைப்போதகர் தன் தேவைகளை கூறி உதவி செய்யக்கோரும்வரைக் காத்திருக்கவேண்டும்

விடை : 18a) சபைப்போதகருக்கு எந்தெந்த வகையில் உதவிசெய்ய இயலுமோ அப்பொழுதெல்லாம் தன்னை அதற்காய் அற்பணிக்கவேண்டும்

## சபைக் குழுக்களில் பங்கெடுத்தல்

சபையில் பல குழுக்கள் உள்ளன. வேதாகம பாடசாலை எல்லோருக்கும் உரியது. அக்குழுவில் நீ உண்மையுள்ள அங்கத்தினராய் பங்குவகித்து ஒழுங்கு செய்யப்பட்ட வேத பாடங்களை கற்றுக்கொள்ளலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நழுவவிடக்கூடாது. முதிய ஆண்கள், பெண்கள் வாலிப சகோதர சகோதரிகள், சிறுவர்களுக்குரிய குழுக்கள் சபையில் உண்டு. இக்குழுக்கள் தேவனை ஆராதித்து, அவற்றுக்கென ஒரு சில திட்டங்களை மேற்கொள்ளும். இக்குழுக்கள் ஒன்றில் நீ சேர்ந்து கொள். உனக்கு வரவேற்பு அளித்து அக்குழுவில் சேர்ந்ததினால் மகிழ்ச்சி கொள்வாய். இக்குழுக்கள் உனக்கு போதித்து, திட்டமிடுகிறவைகளை அடைந்து, உதவி தேவைப்படுவோருக்கு உதவியளித்து முன் செல்ல பிரயாசப்படும். ஒரு நபரால் சிறிதளவே செய்ய இயன்றாலும் தேவன் இக்குழுக்கள் மூலம், இவ்வுலகிற்கு தமது சித்தத்தையும் நிறைவேற்றுகிறார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

19, நீங்கள் உங்கள் சபைக்குழுவில் எதாகிலும் ஒன்றின் அங்கத்தினராய் இருக்கிறீர்களா ?......................இல்லையென்றால், அங்கத்தினராயிருக்க விரும்புகின்றீர்களா? ..............................எந்தச் குழுவில் ?..................

## அதிகமான நடவடிக்கைகள்

மற்ற மக்களைப் போன்று அதிக நேரங்களை இறைப் பணியில் செலவிட இயலவில்லையென்று வருந்த வேண்டாம். எல்லாவற்றையும் அறியும் தேவன் நீ எவற்றை செய்ய முடியுமோ அவற்றிற்கு உதவியளிக்கின்றார்.

உனது புதிய ஜீவியத்தின் நடவடிக்கைகளைக் குறித்து சந்தோஷப்படுவாய். மற்றவர்களை நித்திய தண்டனையினின்று நித்திய வாழ்விற்கு நடத்தும் உனது செயல் உன்னை திருப்தியாக்கும். நீ தேவனுக்கென்றுச் செய்யும் அனைத்திற்கும் மறு உலகத்தில் தக்க பலன் அவர் உனக்கு அளிப்பார்.

பாடம் 6

# உங்களது புதியரளரிய



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

*நியமங்களை அமைப்பது யார் ?*
*நியமங்களை எங்கு கண்டுகொள்ளகூடும் ?*
*நியமங்களை எப்படி சந்திக்க கூடும் ?*
*வெற்றிக்கான நியமங்கள்*

## நியமங்களை அமைப்பது யார் ?

ஒரு வீட்டில் பெற்றோர்கள் நியமங்களை அமைக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகள் எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமென்று அறியச் செய்கின்றனர். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு எதை செய்ய வேண்டும் எதை செய்யக் கூடாது என்று சொல்லுகிறார். பிள்ளைகள் இவ்வித நியமங்களை கற்றுக்கொண்டு அதன்படி தங்கள் வாழ்க்கையை அமைக்கின்றனர். அவர்கள் சட்ட திட்டங்களை மீறும்போது தகப்பன் அவர்களை சரி செய்கிறார். பிள்ளைகள் பிடிவாத குணம் உள்ளவர்களாய் கீழ்படிய மறுக்கும்போது அவர்களை சிட்சிக்கிறார். ஆயினும் அவர்கள் குடும்பத்தில் அங்கத்தினராகவே இருக்கின்றனர். ஆனால் அவர்களது கீழ்படியாமையே பிரச்சனைகளையும் துன்பங்களையும் கொண்டுவருகிறது.

பரலோக தகப்பனும் தமது பிள்ளைகள் செய்ய வேண்டியவை செய்ய கூடாதவை என நியமங்களை அமைத்துள்ளார். சில வேளைகளில் அவரும் கூட தமது பிள்ளைகள் நன்முறையில், கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்க சிட்சிக்க வேண்டியவராய் கணப்படுகிறார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. ஓர் கட்டுபாடுள்ள வீட்டில் நியமங்களை அமைப்பது யார்?

....a) பிள்ளைகள்
....b) அயலகத்தார்
....c) பெற்றோர்கள்

2. தேவ பிள்ளைகளாகிய நாம் நடக்க வேண்டிய விதி முறைகளை சொல்ல உரிமையுடையவர் யார் ?

....a) நமது பரலோக தகப்பன்
....b) நமது கலாச்சாரம்
....c) நமக்கு நாமே

விடைகள் : 1c) பெற்றோர்கள் 2a) நமது பரலோக தகப்பன்

## நியமங்களை எங்கு கண்டுக்கொள்ளக்கூடும் ?

ஒரு தேவப்பிள்ளை வாழவேண்டிய நியமங்களை தேவன் வேதத்தில் அமைத்துள்ளார். அவைகள் வேதம் முழுவதிலும் விசேஷமாக புதிய ஏற்பாட்டிலும் காணலாம். நமது பிள்ளைகள் எவ்வாறு வாழவேண்டும் என தேவன் விரும்புகிறார் என்பதில் சந்தேகமே இல்லாமலிருக்க தேவன் இயேசுவை வழி காட்டியாக அனுப்பினார். அவரே உனது பூரணமுன்மாதிரியும் ஜீவியத்திற்கு வழியாகவும் இருக்கிறார். மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் மலை பிரசங்கம் என அழைக்கப்படும் தமது உயரிய போதனையில் வாழவேண்டிய நியமங்களை அளித்தார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

3. நல் வாழ்விற்கு பூரண முன்மாதிரியை அளித்தது யார் ?

...a) போதகர்

...b) இயேசு கிறிஸ்து

...c) மற்ற தேவ பிள்ளைகள்

4 மலை பிரசங்கம் காணப்படுவது

...a) மத்தேயு 5,6,7,-ல்

...b) மாற்கு 5,6,7-ல்

...c) யோவான் 5,6,7-ல்

5. இயேசு மலை பிரசங்கத்தில்

...a) மலைகளை பெயர்க்கதக்க விசுவாசத்தை குறித்து பேசினர்

...b) எருசலேமை சுற்றியுள்ள குன்றுகளை குறித்து சாம்பாஷித்தார்.

...c) வாழ்க்கைக்குரிய நியமங்களை போதித்தார்.

விடைகள் : 3b) இயேசு கிறிஸ்து 4a) மத்தேயு 5,6,7 5c) வாழ்க்கைக்குரிய நியமங்களை போதித்தார்.

இயேசு கிறிஸ்து முதலாவதாக எளிமையுள்ளவர்களுக்கு சமாதான பிரியருக்கு, இருதய சுத்தமுள்ளோருக்குரிய விசேஷ ஆசீர்வாதங்களையும் தேவனுக்கு தங்கள் ஜீவியத்தில் முதலிடம் கொடுத்து அவருக்காக பாடுகளை சகிப்பவர்களுக்கான ஆசீர்வாதத்தை குறித்தும் கூறுகிறார். சத்துருக்களுக்காக ஜெபம் பண்ணவும் நாம் எதிர்த்து நின்றவர்களிடத்தில் மன்னிப்பு கேட்கவும் தீமை செய்தவனுக்கு நன்மைசெய்யும் படியாகவும் இயேசு நமக்கு போதிக்கிறார். அவருடைய

போதனைகளைபோன்றபோதனை இதுவரை ஒருவரும் கொடுத்ததில்லை.

மற்றவர்களை எப்படி நடத்த வேண்டும் என்கிற அடிப்படை சட்டத்தை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார். அதனை நாம் பொன் கட்டளை என அழைக்கிறோம்.

> "மனுஷர் உங்களுக்கு எவைகளைசெய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்." மத்தேயு 7:12

நாம் பெருமையாகவோ, சுயநலம் உடையவர்களாகவோ சண்டை போடுகிறவர்களாகவோ, குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாகவோ இருக்கலாகாது.

நாம் சட்டவிரோதமான ஆசைகளுக்கும் தீமையான எண்ணங்களுக்கும் நமது சிந்தனையில் இடம் கொடுக்க கூடாது.

நமது முதலாவது வாஞ்சை தேவனை பிரியப்படுத்துகிறதாகவும் நம்மை குறித்து அவர் விரும்புகிறதை செய்கிறதாகவும் இருக்கவேண்டும். நாம் உலகிற்குரிய செல்வங்கள் நமது நோக்கமாக கொண்டு தேவனை சேவிக்க இயலாது. ஆனால் நாம் அவருக்கு முதலிடம் கொடுப்போமென்றால், நமது தேவைகள் அனைத்தையும் அவர் சந்திப்பார். மட்டுமின்றி நாம் அவருக்காக எதை செய்தாலும் அதற்குரிய நித்திய பிரதிபலனை பரலோகத்தில் வைத்திருக்கிறார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

6. அடிப்படை சட்டமாகிய பொன் கட்டளை என்று அழைக்கபடுவது :

 ...a) பயனுள்ளவைகளுக்காக தங்கத்தை உபயோகிப்பதை

...b) மற்றவர்கள் உன்னை நடத்துவதுப்போல அவர்களை நீயும் நடத்துதலை

...c) மற்றவர்கள் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிருயோ அப்படியே நீயும் மற்றவர்களை நடத்துதலை

7. மத்தேயு 6:19,21ல் இயேசு நமது பொக்கிஷங்களை குறித்து சொன்னது :

...a) பரலோகில் சேர்த்து வைக்க வேண்டும்

...b) பூமியில் சேர்த்து வைக்க வேண்டும்

விடைகள் : 6c) மற்றவர்கள் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று எதிர் பார்க்கிருயோ அப்படியே நீயும் மற்றவர்களை நடத்துதலை 7a) பரலோகில் சேர்த்து வைக்கவேண்டும்

## நியமங்களை எங்கனம் சந்திக்கக் கூடும்

தேவனின் உதவியின்றி மேற்கூறிய சட்டதிட்டங்களை ஒருவராலும் கடைபிடிக்க இயலாது என்று இயேசு அறிந்திருந்தார். ஆகையால் இயேசு தமது சீஷர்களுக்கு உதவி கோரி பரலோக தகப்பனை நோக்கி வேண்டிகொள்ளுமாறு கற்பித்தார். அவர் அவர்களுக்கு ஒரு மாதிரி ஜெபத்தை மத்தேயு 6:9லிருந்து 13வரை சொல்லி கொடுத்தார். அதை நாம் மாதிரி ஜெபம் என்று அழைக்கிறோம். மட்டுமல்ல அதை நம்முடைய ஜெபங்களில் அடிக்கடி சொல்லுகிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் பரலோக பிதா உங்களுடன் இருந்து உங்களுக்கு உதவிச்செய்யும்படியாக தமது பரிசுத்தாவியானவரை அனுப்பியிருக்கிறார். இதை குறித்து அடுத்தப்பாடத்தில் அதிகமாக கற்றுக் கொள்வீர்கள். தேவன் எதிர்ப்பார்க்கும் எல்லாவற்றின்படியேயும்

நடக்க இயலவில்லையே என்று வருந்தாதே, அவர்படிபடியாக உனக்கு உதவிச்செய்வார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

8. இயேசு கிறிஸ்து கொடுத்தான மாதிரி ஜெபம்

...a) பரிசுத்தவான்களை நோக்கி ஜெபிப்பது

...b) முற்பிதாக்களை நோக்கி ஜெபிப்பது

...c) தேவனிடம் நேரடியாக ஜெபிப்பது

9. மாதிரி ஜெபம்

...a) இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த ஜெபமாகும்

...b) மலை பிரசங்கம் அடங்கிய வேதபகுதியில் காணப்படும் ஓர் மாதிரி ஜெபமாகும்

...c) இயேசு கிறிஸ்து கெத்செமனெயில் ஜெபித்த ஜெபமாகும்

10. மத்தேயு 7ம் அதிகாரத்தை வாசிக்கவும்

விடை: 8c) தேவனிடம் நெரடியாக ஜெபிப்பது 9b) மலை பிரசங்கம் அடங்கிய வேத பகுதியில் காணப்படும் ஓர் மாதிரி ஜெபமாகும்.

## வெற்றிகரமான நியமங்கள்

இயேசு தமது போதனைகளைக் கொண்டு நாம் வெற்றிகரமான ஜீவியம் செய்ய முடியும் என்பதை நாம் அறிந்துக் கொள்ளச் செய்கிறார். நமது ஜீவியம் ஓர் கட்டிடம் போன்றது. நமது சிந்தனைகள் வார்த்தைகள், செய்கைகள் போன்ற இவைகள் கட்டிடத்திற்கு செங்கல் போன்றவை. அவருடைய போதனையாகிய அஸ்திபாரத்தின் மேல் இவைகளை வைத்து கட்டுவோமென்றால் சோதனையிலும், வாழ்க்கையில் புயல் வரும் நேரத்திலும் நாம் நிலை நிற்ககூடும்.

தங்கள் சுய விருப்பத்தின் படி, இயேசு கொடுத்த நியமங்களை பின்பற்றுமல் நடப்பவர்கள் எவர்களோ அவர்கள் அஸ்திபாரம் இல்லாமல் மணலின் மேல் கட்டின பெலவீன வீட்டைப்போன்று தோல்வியை காண்பார்கள். இப்படிப் பட்டவர்கள் விழுந்துப் போவார்கள்.

நீ ஒரு வெற்றிகரமான தேவ பிள்ளையாய் இருக்க விரும்பினுல் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களின் மேல் உன் ஜீவியத்தை கட்டி அவருடைய நியமங்களை பின்பற்று பரிசுத்தாவியானவர் உனக்கு உதவிச்செய்வார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

11. ஒருவன் இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு கீழ்படிந்து அவைகளை தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அடிப்படையாய் கொள்வான் என்ருல்,அவன்:

....a) கற்பாறையின் மேல் வீட்டைக்கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

....b) மணலின் மேல் வீட்டைக்கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

விடை : 11b) கற்பாறையின் மேல் வீட்டைக்கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

—o—

பாடம் 7

# நமக்கு துணை செய்பவர் ஒருவர் உண்டு



## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது

பரிசுத்தாவியானவரே நமக்கு துணைசெய்பவர்
ஆவியின் கனிகள்
ஆவிக்கேற்றபடி நடத்தல்
உன்னில் உள்ள பரிசுத்தாவியின் வல்லமை
ஆவியின் வரங்கள்

## பரிசுத்தாவியானவரே நமக்கு துணை செய்பவர்

இப்பொழுது நீங்கள் சொல்லக்கூடும்: "எல்லாவற்றையும் நோக்கும்போது எல்லாம் மிகவும் சிக்கலாயிருக்கிறது என்றும் நான் ஓர் தேவப்பிள்ளையாய் வாழமுடியுமோ, முடியாதோ நானறியேன், என் நினைவில் கூட வைத்துக் கொள்ள முடியாத அநேக காரியங்கள் உள்ளனவே."

அதைரியப்படாதே ! நீ பார்ப்பதைபோன்று, அவ்வளவு கடினமானதன்று, ஏனெனில் பரிசுத்தாவியானவர் உனக்கு துணைபுரிபவராய் இருக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கண்டிப்புடன் பிறப்பிக்கப்பட்டுள்ள சட்டங்களை கைக் கொண்டு வாழ்கின்ற வாழ்க்கையல்ல அல்லது நல்லவரா யிருக்கும்படி, போராடி வாழும் வாழ்க்கையுமல்ல, அது தேவன் உனக்காய் என்ன செய்துள்ளாரோ அதை ஏற்றுக் கொண்டு பரிசுத்தாவியானவர் உன்னுடன் தங்கி, அவர் உன்னை தமது சித்தப்படி நடத்துவதே !

## நீங்கள் செய்ய வேண்டியது

1. எல்லா நேரங்களிலும் உங்களுடனிருக்கும்படி தேவன் உங்களுக்கு அனுப்பியிருக்கும் துணையாளர் யார் ?

    ...a) சபைக் குரு

    ...b) சபை போதகர்

    ...c) பரிசுத்தாவியானவர்

2. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது

    ...a) கொடுக்கப்பட்டக் கட்டளைக்கு கீழ்ப்படிந்து வாழ்தல்

    ...b) நல்லவராகும்படி தொடர்ந்து போராடும் போராட்டமாகும்.

    ...c) இயேசுவைப் போல் மாறபிரயாசப்படுவது

    ...d) பரிசுத்தாவியானவர் உங்களில் வசித்து அவர் சித்தத்தை உங்கள் மூலம் நடப்பிப்பதே !

விடைகள் ; 1c) பரிசுத்தாவியானவர் 2d) பரிசுத்தாவி யானவர் உங்களில் வசித்து அவர் சித்தத்தை உங்கள் மூலம் நடப்பிப்பதே !



பரிசுத்தாவியானவர் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்கக்கூடும். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் இருந்த நாட்களில் அவரால் ஒரே இடத்தில் மட்டுமே குறிப்பிட்ட நேரத்தில் இருக்க முடிந்தது. அவர் பரலோகிற்கு மீண்டும் சென்றபோதோ, எல்லாத் தேவப் பிள்ளைகளுடனிருந்து, அவர்களை நடத்தவும் அவர்களது பிரச்சனைகளில் அவர்களுக்கு உதவி செய்யவும், பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார்.

''நான் பிதாவைவேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவிக்குரிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத்தந்தருளுவார், அவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.''

யோவான் ***14:16,26***

## நீங்கள் செய்ய வேண்டியது

*3.* பரிசுத்தாவியானவர் வந்தது

...a) எல்லா தேவப் பிள்ளைகளுடனும், எல்லா நேரங்களிலும் இருக்கும்படியாக

...b) ஒரு சில தேவப்பிள்ளைகளுடன் மட்டும் இருக்கும்படியாக

விடை : 3a) எல்லா தேவப்பிள்ளைகளுடனும், எல்லா நேரங்களிலும் இருக்கும்படியாக

## ஆவியின் கனிகள்

பரிசுத்தாவியானவரின் பிரசன்னம் உங்களுடனிருப்பதின் விளைவாய் உங்கள் வாழ்வில் உண்டாகும் நற்பயனே ''ஆவியின் கனிகள்'' என்றழைக்கப்படுகிறது. அவர் நல்ல காரியங்களை செய்யும்படியான வாஞ்சைகளைத் தந்து, அவைகளை செய்து நிறைவேற்ற பெலனையும் அருளுகின்றார். இங்ஙனம் அவர் உதவிச்செய்ய நீ அனுமதிக்கையில் தேவப்பிள்ளைக்குரிய நற்குணங்களை அற்புதவிதமாய் உன்னில் உருவாக்குகிறார். உனது நற்சுபாவம், பேச்சு, செய்கை இவைகள் அனைத்தும் சுவையுள்ள கனிகளைப்போல் உள்ளது. உன்னைச் சூழ உள்ள உனது குடும்பத்தினரும், உனது நண்பர்களும் உன்னுடன் இருந்து சந்தோஷிப்பது மட்டுமல்லாமல், உனது பரலோகத்தகப்பனையும் அது பிரியப்படுத்தும்.

''ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.'' கலாத்தியர் 5:22,23

''நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்.'' யோவான் 15:8

## நீங்கள் செய்ய வேண்டியது

4. ஆவியின் கனிகள் குறிப்பிடுவது

...a) ஆவிக்குரிய முகாமில் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை

...b) நமது வாழ்க்கையில் பரிசுத்தாவியானவர் உருவாக்கும் நற்குணங்களை

5. கலாத்தியர் 5:22,23ஐ மனப்பாடம் செய்யவும்

விடை ; 4b நமது வாழ்க்கையில் பரிசுத்தாவியானவர் உருவாக்கும் நற்குணங்களை

## ஆவிக்கேற்றபடி நடத்தல்

நமது சொந்த விருப்பத்தின்படியே நடக்க விரும்புவது நமது இயல்பு. இதுவே மனுக்குலத்தின் இயல்பாகவும் இருக்கிறது. நாம் செய்ய வேண்டியது எது என அறிந்திருந்தும் நமது சித்தப்படியே செய்ய விரும்புபவர்களாயிருக்கின்றோம். இதனாலேயே, நாம் பரிசுத்தாவியானவருக்கு செவிக்கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் தேவ சித்தத்தை மேற்கொள்ளும்படி நம்மை வற்புறுத்தி, வழியையும் காட்டுகின்றார்.

''ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள் அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.''

கலாத்தியர் 5:16

## நீங்கள் செய்ய வேண்டியது

6. கலாத்தியர் 5:16ல் ''மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்பதன் பொருள் :

...a) உனக்கு அவசியமானதைப் பெறாமலிருப்பதை

...b) ஏமாற்றமுள்ள வாழ்க்கை நடத்துவதை

...c) உங்கள் சொந்த சித்தத்தைச் செய்ய விரும்பும் இயற்கை சுபாவத்தின்மேல் வெற்றிக் காண்பதை

விடை : 6c) உங்கள் சொந்த சித்தத்தைச் செய்ய விரும்பும் இயற்கை சுபாவத்தின் மேல் வெற்றிகாண்பதை

தேவனுடைய ஆவியானவர் உன்னை வழி நடத்தி பெலப்படுத்துவாரேயல்லாமல், உன்னை பரலோகிற்கு தூக்கிசெல்ல மாட்டார். நீ உனது சொந்த கால்களினுல் நடக்கவேண்டும் பரிசுத்தாவியானவர் உன்னை நடத்த, நீ அவருடன் ஒத்துழைக்க வேண்டும். இதனையே வேதம் சில வேளைகளில் ஆவிக்கேற்றபடி நடத்தல் என்று கூறுகிறது. நீ ஏற்கனவே வேதத்தை வாசித்து அதன்படி நடக்கிறபடியால், ஆவிக்கேற்றபடி நடக்க ஆரம்பித்து விட்டாய்.

## நீங்கள் செய்ய வேண்டியது

7. ஆவிக்கேற்றபடி நடத்தல் என்ருல்

...a) தன்னை மறந்த மனநிலையில் எப்பொழுதும் தரித்திருப்பது

...b) உன் அநுதின வாழ்வில் பரிசுத்தாவியானவரின் வழி நடத்தலுக்கு கீழ்படிதல்

விடை : 7b) உன் அநுதின வாழ்வில் பரிசுத்தாவியானவரின் வழி நடத்தலுக்கு கீழ்படிதல்

## உன்னிலுள்ள பரிசுத்தாவியின் வல்லமை

தாம் பிதாவுக்காக செய்த செயல்களை போன்று தம்மை பின் பற்றுவோரும் செய்ய வேண்டுமாயின் தங்களது சுய பெலத்தால் இயலாது என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆகையால் பூமியின் கடைசி பரியந்தம், தனக்கு சாட்சிகளாயிருக்க பரிசுத்தாவியாகிய தேவப்பெலனை (வல்லமையை)

காத்திருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் கூறினர்.

"...யோவான் ஜலத்தினலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தாவியினலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால்...பிதாவின் (கடவுளின்) வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்கள். பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." அப்போஸ்தலர் 1:4,5,8

யோவான் ஸ்நானகன் இயேசுவைக் குறித்து சொன்னது:

"அவர் உங்களுக்குப் பரிசுத்தாவியினலும், அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்." லூக்கா 3:26

## நீங்கள் செய்ய வேண்டியது

8. அப்போஸ்தலர் 1:4,5,8ஐ மூன்று முறை வாசிக்கவும்

9. யோவான் இயேசுவைக் குறித்து சொன்னது; அவர்

...a) மனந்திரும்புதலுக்கென்று ஜலத்தினல் ஞானஸ்நானம் கொடுப்பார்

...b) பரிசுத்தாவியினலும், அக்கினியினலும் ஞானஸ்நானம் கொடுப்பார்

விடை : 9b) பரிசுத்தாவியினலும், அக்கினியினலும் ஞானஸ்நானம் கொடுப்பார்.

பெந்தெகொஸ்தே நாளில் இவ்வாக்குத்தத்தம் எங்கணும் நிறைவேறிற்று என்றும், இந்நிகழ்ச்சிக்குப்பின் நடந்த அற்புத விளைவுகள் என்ன என்பதைப் பற்றியுள்ள அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

''அவர்களெல்லாரும் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார், வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். எல்லோரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து இதோ பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா ?...... நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே என்றார்கள்.

அப்போஸ்தலர் 2:4,5,7,11

இந்த பரிசுத்தாவிக்குள்ளாய் ஞானஸ்நானம் பெறுதல் அல்லது பரிசுத்தாவியினால் நிரப்பப்படுவது என்பதை ''பெந்தெகொஸ்தே அனுபவம்'' என்றும் அழைக்கிறோம். ஏனெனில் இவ்வனுபவங்கள் முதலில் பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததாய் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீங்கள் செய்ய வேண்டியது

10. பரிசுத்தாவிக்குள்ளாய் ஞானஸ்நானம் பெறுவது என்பது

...a) கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாய் ஞானஸ்நானம் பெறுவது

…b) முழுகி ஞானஸ்நானம் பெறுவது

…c) ஓர் பெந்தெகொஸ்தே அனுபவம்

விடை : 10 c) ஓர் பெந்தெகொஸ்தே அனுபவம்

நமக்கு பெலனளிப்பவர் பரிசுத்தாவியானவர் என்று இயேசு வாக்குத்தத்தம் அளித்துள்ளார். இப்பெலன் இரண்டு காரணங்களுக்காய் அளிக்கப்பட்டது

* மற்றவர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவிக்க.

* மிகவும் வல்லமையுடன் ஜெபிக்க

ஓர் தேவப்பிள்ளை, பரிசுத்தாவியின் வல்லமையினால், சாட்சி பகிர்ந்து, ஜெபிக்கும்போது அற்புதகரமான நிலைமையில் அநேக ஆத்துமாக்கள் தேவனிடம் திரும்புகின்றனர்.

''…பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று; திரளான ஜனக்கூட்டத்தைக்கண்டு பேசத்துவங்கினான்….அவனது வார்த்தைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்''

அப்போஸ்தலர் 2:14,41

''…பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தை தைரியமாய் சொன்னார்கள்.'' அப்போஸ்தலர் 4:31

## நீங்கள் செய்ய வேண்டியது

11. பரிசுத்தாவிக்குள் பெறும் ஞாஸ்நானத்தில் தேவப்பிள்ளைகள் அடையும் வல்லமை முக்கியமாய்;

...a) இயேசுவை குறித்து சாட்சி பகரவும், வல்லமையாய் ஜெபிக்கவுமே

...b) ஆவிக்குரிய நிலையில் மற்றவர்களை வற்புறுத்த

...c) அற்புதங்களைச் செய்ய

விடை : 11a) இயேசுவைக் குறித்து சாட்சிபகரவும், வல்லமையாய் ஜெபிக்கவுமே

இந்நாட்களில் வாழும் தேவப்பிள்ளைகளுக்கு இவ்வல்லமை உரியது: இருபதாம் நூற்றூண்டின் துவக்கத்திலே உலகெங்கிலும் உள்ள அநேக ஆயிரக்கணக்கான ஜனங்களும் அநேக சபைப்பிரிவுகளும், இப்படிப்பட்ட பெந்தெகொஸ்தே அனுபவங்களால் ஆட்கொள்ளப்பட்டனர்.

"...நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும், பாவமன்னிப்புக்கென்று, இயேசுவின் நாமத்தினலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தாவியின வரத்தைப்பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனுகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது:"

அப்போஸ்தலர் 2:38,39

## நீங்கள் செய்ய வேண்டியது

12. உனது வாழ்க்கையில் பரிசுத்தாவின் வல்லமையை பெற்றுகொள்ள வாஞ்சிக்கின்ருயா ?..................
ஆத்துமாவில் தேவனின் அக்கினி எரிந்து, அதனல் இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்க உண்டாகும் வாஞ்சையை பெற விரும்புகிருயா ?......................

அதிக வல்லமையாய் ஜெபிக்க வாஞ்சிக்கின்ருயா? ............இந்த அற்புதகரமான பெந்தெகொஸ்தே அனுபவம் உனக்கும் உரியது. பரிசுத்தாவியினுல் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தேவனிடம் வேண்டிக்கொள்.

## ஆவியின் வரங்கள்

கிறிஸ்துவானவர் தமது சபை ஆவிக்குரிய வல்லமையினுல் நிறைந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறபடியால் பரிசுத்தாவியானவர் தமது விசேஷவரங்களை சபையில் உள்ள தேவப்பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கிருர். இம்முறையில் அவர், தமது மகத்தான சேவையில் தேவப்பிள்ளைகள் ஈடுபடவும், சபையில் வளர்ச்சி உண்டாகவும் செய்கிருர்.

''வரங்களில் வித்தியாசம் உண்டு. ஆவியானவர் ஒருவரே; ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டுள்ளது; இவைகளை எல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிருர். *1 கொரிந்தியர் 12:4,7,11*

## நீங்கள் செய்ய வேண்டியது

*13.* பரிசுத்தாவியின் வரங்கள் :

...a) முதல் நூற்ருண்டு சபையிலிருந்த அப்போஸ்தலருக்கு மட்டுமே உரியது

...b) பிரசிங்கிமார்களுக்கு மட்டும் உரியது

...c) இன்றைக்கும் சபையில் உள்ள அங்கத்தினருக்குரியது.

14. பெந்தெகொஸ்தே எழுப்புதல் உலகமெங்கும் உண்டாக தேவனிடம் வேண்டிக்கொள்.

15. உனது சபையில், பரிசுத்தாவியானவர் வரங்களைப் பகிர்ந்தளிக்கும்படி வேண்டிக்கொள்

விடை : 13c) இன்றைக்கும் சபையில் உள்ள அங்கத்தினருக்குரியது.

பாடம் 8

# உங்கள் ஜீவியம் ஓர் விளக்காய் இருக்கிறது



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

உலகின் ஒளி

உங்கள் விளக்கு

நேர்மையாய் இருத்தல்

தேவப்பிள்ளையைப் போன்று பேசுதல்

மற்றவர்களுக்கு உதவி செய்தல்

ஞானமாய் நடந்து கொள்ளல்

சுத்தமாயிருத்தல்

அடக்கமாயிருத்தல்

நேர்மையான வேலை

குடும்பத்தை சரியான முறையில் நடத்துதல்

இதுவரை உங்கள் புதிய ஜீவியம் எப்படிப்பட்டது என்றும் அதை எப்படி வளரச்செய்வது என்றும் பார்த்தோம்' இப்பாடத்தில் உன்னை சூழ உள்ளவர்கள் மத்தியில் உன் ஜீவியம் எப்படிப்பட்டதாயிருக்கிறதென்று சிந்திப்போம்.

## உலகின் ஒளி

பாவம், பிழைகள், தேவனை குறித்த அறியாமை போன்றவைகளை வேதம், இருளுக்கொப்பாக கூறுகின்றது. கிறிஸ்துவற்ற ஜீவியம் செய்யும் ஒவ்வொருவரும் இருளிலே திரிந்து, இடிந்து போனவர்களாகவும், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டவர்களாகவும், பரலோகை கண்டுகொள்ள திராணியற்றவர்களுமாயிருக்கின்றனர்.

தேவன் தமது மிகுந்த இரக்கத்தினால் தமது குமாரனாகிய இயேசுவை இவ்வுலகிற்கு ஒளியாய் அனுப்பித்தந்தார்.

"இயேசு ஜனங்களை நோக்கி நான் உலகிற்கு ஒளியாயிருக்கின்றேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்,"
யோவான் 8:12

## நீங்கள் செய்ய வேண்டியது

1. யோவான் 8:12ஐ மனப்பாடம் செய்யவும்

## உங்கள் விளக்கு

உங்கள் ஜீவியம் ஓர் மெழுகுவர்த்தி, விளக்கு அல்லது வெளிச்சம் தரும் மின்விளக்குப் போன்றது. உன்னில் உள்ள இயேசுவின் பிரசன்னம், ஓர் மெழுகுவர்த்தியை எரியச் செய்யும் தீச்சுடர் போலவும், மின்விளக்கைப் பிரகாசிக்கச் செய்யும் மின்சக்தி போலவும் உள்ளது.

"கர்த்தர் தந்த தீபம் உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்." நீதிமொழிகள் 20:27

நீங்கள் தேவனின் விளக்காய், அவரின் தீபமாய்

இருக்கிறீர்கள். இயேசுவின் நன்மையும், உண்மையும் உங்கள் எல்லா செய்கைகள் மூலமாயும் பிரகாசிக்கக்கடவது.

''நீங்கள் உலகிற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்............... இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.'' மத்தேயு 5:14,16

## நீங்கள் செய்ய வேண்டியது

2. நீங்கள் மற்றவர்களுக்கு ஓர் வெளிச்சமாய் இருக்கின்றீர்கள், ஏனெனில்.

...a) நீங்கள் எப்பொழுதும் மிகவும் நல்லவர்களாயிருப்பதால்

...b) நீங்கள் புத்திக்கூர்மையானவர்களாய் இருப்பதால்

...c) இயேசுவின் பிரசன்னம், நன்மைகள், உண்மை இவைகள் உங்களில் பிரகாசிப்பதால்

3. நீதிமொழிகள் 20:27ஐ மனப்பாடம் செய்யவும்

4. மத்தேயு 5:14,16ஐ மனப்பாடம் செய்யவும்

விடை : 2c) இயேசுவின் பிரசன்னம், நன்மைகள், உண்மை இவைகள் உங்களில் பிரகாசிப்பதால்

தேவன் உன்னை இருளுள்ள இடத்தில் ஒளியாய் வைத்திருப்பதால் உன்னைச் சூழ உள்ளவர்களுக்கு, நீ பரலோகிற்கும், இரட்சகரண்டைக்கும் வழிநடத்தும் வழி காட்டியாயிருக்கவேண்டும். நீ சொல்லும் தேவ வல்லமை உண்மைதானோ என்று அறியும் படியாக அநேகர் உன்னை கவனித்துக்

கொண்டிருக்கின்றனர். உனது வாழ்க்கை, சுவிசேஷத்திற்கு மனிதனை முற்றிலும் மாற்றக்கூடிய வல்லமை உண்டு என்று கண்பிக்கிறதாயிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள். நீ உன் வார்த்தைகளை விட, உன் செய்கையே அவருக்கு சாட்சியாயிருக்கும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

5. இயேசுவின் போதனையின்படி ஜீவிப்பது

...a) சத்திய சுவிசேஷத்திற்கு நேராய் மற்றவர்களை ஆதாயப்படுத்த ஓர் வல்லமையுள்ள சாட்சியாயிருக்கிறது

...b) மிகவும் முக்கியமானது அல்ல, ஏனெனில், பிரசங்கத்தில் அவர்கள் இயேசுவண்டை வழி நடத்தலாம்

6. இயேசுவை நீங்கள் பின்பற்றும்படியாக யாருடைய வாழ்க்கையாவது உங்களை தூண்டினதுண்டா ?

7. நீ தேவனுக்கென்று பிரகாசிக்கும் தீபமாயிருக்கும்படி வாஞ்சிக்கின்றாயா ?

8. தேவனுடைய விளக்காகிய நீ, காரிருள் நிறைந்த எவ்விடத்திலும் சென்று பிரகாசிக்கும்படியாக தேவன் உன்னை வழி நடத்த நீ விரும்புகின்றாயா ?

9. ஒவ்வொரு நாளும், நீ மற்றவர்களுக்கு பரலோகம் செல்லும் வழியை உன் ஜீவியத்தின் மூலம் காட்டும்படியாக தேவனிடம் வேண்டிக்கொள்.

விடை : 5a) சத்திய சுவிஷேத்திற்கு நேராய் மற்றவர்களை ஆதாயப்படுத்த ஓர் வல்லமையுள்ள சாட்சியாய் இருக்கிறது.

சத்திய சுவிசேஷத்திற்கு நேராய் மற்றவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படியாக, ஓர் தேவப்பிள்ளையின் வாழ்க்கையிலிருந்து வீசும் ஒளிக் கிரணங்களைக் குறித்துப் பார்ப்போம்.

## நேர்மையாய் இருத்தல்

தவருது உங்கள் வரிப்பணத்தை செலுத்துவது ஓர் நற்சாட்சி. ஓர் தேவப்பிள்ளை தனது எல்லா அலுவல்களிலும் நேர்மையாய் இருத்தல் அவசியம். என்ன கடன் பட்டிருந்தாலும் தவருது நேர்மையான முறையில் அதை திருப்பிக் கொடுப்பது அவசியம். தன்னுல் சரிசெய்ய முடியாத நிலையில் பணம் உதவிகளுக்கு வாக்கு கொடுக்கலாகாது. தனது வாக்கைக் காப்பாற்றவேண்டும்.

''ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள், எவனுக்கு வரியைசெலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வை செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்கு பயப்படவேண்டியதோ அவனுக்குபயப்படுங்கள்; எவனை கனம்பண்ணவேண்டியதோ அவனை கனம் பண்ணுங்கள். ரோமர் **13:7**

''ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள் ரோமர் **12:17**

## நீங்கள் செய்ய வேண்டியது

**10.** கொடுக்கப்படாத கடன்கள்

....**a)** நமது சாட்சியைப் பெலவீனபடுத்தும்

....b) நமது மனந்திரும்புதலுக்கு முன்னுள்ளவைக ளாயிருப்பின் அவைகளை மறந்துவிடலாம்

விடை : 10a) நமது சாட்சியைப் பலவீனப்படுத்தும்

## தேவபிள்ளையைப் போன்று பேசுதல்

நீ சபித்துக் கொண்டும், சத்தியம் பண்ணிக்கொண்டும், அசுத்த கதைகளை கூறிக்கொண்டும் திரிந்தால் தேவனின் இரட்சிக்கும் வல்லமைமைக்குறித்து ஜனங்கள் என்ன நினைப்பார்கள். வாக்குவாதம் செய்துக்கொண்டும் வீண் பேச்சுகளை பேசிக்கொண்டும் மற்றவர்களைக்குறித்து குறைக் கூறிக்கொண்டும் உன்னைக் குறித்து தற்பெருமையாய் எண்ணிக்கொண்டும் பொய்ச்சொல்லிக்கொண்டும் கடின மாய் நடந்துக்கொண்டும் கெட்டவர்த்தைகளை பேசிக்கொண் டும் இருப்பாய் என்றால் உனது வெளிச்சம் தேவனுக்காய் பிரகாசிக்க கூடுமோ ? மாறுக, மனமாற்றம் அடைந்தவர் களின் மாற்றமடைந்த பேச்சுகளினால் அநேகர் சுவிசேஷத் தின் வல்லமையை கண்டுள்ளனர்.

நாவை அடக்குதல் அனைவருக்கும் கடினமான காரியங்களில் ஒன்றாகும். வாயினால் நீ பேசும் வார்த்தைகள் மட்டுமன்றி அவைகள் புறப்படும் முறையேமற்றவர்களை கிறிஸ்துவண்டை இழுக்கவும் செய்யும், கிறிஸ்துவுக்கு விரோதமாய் எழுப்பவும் செய்யும்.

"உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக் கும்."
யாக்கோபு *1:26*

## நீங்கள் செய்ய வேண்டியது

*11.* நீ உன்னயே கேட்டுக்கொள்: "நான் பேசும்

முறை ஜனங்கள் தேவனுடைய அன்பை உணர செய்கிறதா? அல்லது நான் ஜனங்களுக்கு முன் பாக எதிர்த்து நிற்கிறேனு? நான் இப்பொழுது பேசுவதுப்போல இயேசு என் அருகில் இருக்கும் போது பேசுவேனு?

12. நீ ஒரு தேவ பிள்ளைப்போன்று பேச அநுதினமும் உதவி செய்யும்படி இயேசுவிடம் வேண்டிக்கொள்.

## மற்றவர்களுக்கு உதவி செய்தல்

நாம் பிறரை நம்மைப் போல் நேசிப்போம் என்ருல் அவர்களுக்கு உதவி தேவைப்படும் நேரங்களில் எந்த வழிகளிலாவது அவர்களுக்கு அந்த உதவியைச் செய்து முடிப்போம்.

"திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதற்கும் உலகத்தால் கறைப்படாதப்படிக்கு தன்னைக்காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன் மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. யாக்கோபு 1:27

## நீங்கள் செய்ய வேண்டியது

13. உனது சபை, தேவையின் மத்தியிலிருக்கும் விதவைகளுக்கோ, திக்கற்றவர்களுக்கோ, திட்டமான வழியில் உதவி செய்து வருகிறதா? ...................... இப்பணியில் நீயும் பங்குப்பெற்று இருக்கிருயா?

14. உன்னை சூழ உள்ள ஜனங்கள் பிரச்சனைகளிலும் துன்பங்களிலும் வருந்துகின்றதை சிந்தித்துப்பார். நீ அவர்களுக்கு உதவிச்செய்யும் பொருட்டு ஏதாவது வழிகள் உண்டா ? நீ அவர்களைக் குறித்து அக்கறை கொண்டிருக்கிறாய் என்பதை அவர்களுக்கு காட்டக்கூடுமா? உன் உதவி தேவைப்படுவோருக்கு நீ ஓர் உற்ற நண்பனாய் இருக்க எப்படி முடியும் எனக்காட்டும்படி தேவனிடம் வேண்டிக்கொள்.

## ஞானமாய் நடந்துகொள்ளல்

''பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.'' 1 தெசலோனிக்கேயர் *5:22*

அறிவற்ற நடத்தைகள் தேவனுக்காக உனக்குள்ள செல்வாக்கை முற்றிலும் அழித்துவிடும். மற்றவர்கள் உன் கிரியைகளை குறித்து என்ன சொல்லுகிறார்கள் ? புத்தியாய் நடந்துக்கொள். நீ செய்யும் எல்லாவற்றிலும் ஓர் நல்ல மாதிரியாய் இருந்து உனது விளக்கு தேவனுக்காக பிரகாசிக்கட்டும்.

''உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடம் கொடாதிருங்கள்.'' ரோமர் *14:16*

''உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும் அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.'' 1 தீமோத்தேயு *4:12*

## நீங்கள் செய்ய வேண்டியது

15. 1 தீமோத்தேயு *4:12*ல் பவுல் தீமோத்தேயுவிடம்

விசுவாசிகளுக்கு மாதிரியாயிருக்கும்படி சொன்ன வைகள்

....a) உபசரித்தலில், நிதானமாய் இருத்தலில், பேச்சில், வேலை செய்தலில்

....b) பரிசுத்த வாழ்க்கையில், அன்பில், சுவிசேஷம் அறிவித்தலில், சந்தோஷமாயிருத்தலில்

....c) வார்த்தையில், நடக்கையில், அன்பில், விசுவாசத்தில், கற்பில்

விடை : 15c) வார்தையில், நடக்கையில், அன்பில், விசுவாசத்தில் கற்பில்

## சுத்தமாய் இருத்தல்

ஒரு தேவப்பிள்ளை தனது உடைகளையும் வீட்டையும் தன்னையும் சுத்தமாய் வைப்பதில் மற்றவர்களுக்கு ஓர் மாதிரியாய் இருக்கவேண்டும். ஆனால் சுத்தமுடையவர்களாயிருத்தல் என்றால் மேற்கூறப்பட்டவைகளை விட அதிக பொருளுடையதாயிருக்கிறது. உங்கள் சரீரம் பரிசுத்தாவியானவர் வாசம் பண்ணும் ஆலயமாயிருக்கிறது. ஆகையால் உள்ளும் புறம்பும் சுத்தமாய் இருப்பது அவசியம். உங்கள் சரீரம் அசுத்தமாகவோ பெலவீனமாகவே அல்லது ஒழுக்க கேடான நடக்கைகளினால் வியாதிஉண்டுப்பண்ணிக் கொள்ளவோ கூடாது. உங்கள் சரீரத்தை பெலன் உள்ளதாகவும் ஆரோக்கியம் உள்ளதாகவும் காத்துக்கொள்ளுங்கள் ஏன் என்றால் நீங்கள் தேவனுக்காக பணியாற்ற வேண்டும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

16. (இரண்டினை தெரிந்தெடுக்கவும்) சுத்தமாயிருப்பது

....a) ஏழைகளுக்கு அவசியமற்றது

....b) ஒருவரின் ஆரோக்கியத்தை பாதுக்காக்கும்

...c) கொடுக்கும் சாட்சி பயனுள்ளதாக்கும்

விடை : 16b) ஒருவரின் ஆரோக்கியத்தை பாதுக்காக்கும் c) கொடுக்கும் சாட்சி பயனுள்ளதாக்கும்

புகைப்பிடித்தல் புற்றுநோயை வருவிக்கும் என்பது யாவரும் அறிந்த உண்மையே. அநேகர் தங்கள் உயிரை இழந்தும் இருக்கின்றனர். மதுபானம் அருந்தலும் போதை வஸ்துக்களை உபயோகிப்பதும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் ஆயிரக்கணக்கானோரை அழிக்கிறது. மேலும் உடனடியாகவோ நிதானமாகவோ தற்கொலைச் செய்து கொள்ள கூடாது. ஏன் என்றால் இவைகள் தேவனின் ஆலயமாகிய சரீரத்தை அழிப்பதாகும்.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்: தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது" 1 கொரிந்தியர் 3:16,17

## நீங்கள் செய்ய வேண்டியது

17. குடிப்பழக்கம், போதை பொருட்களை உபயோகித்தல், புகையிலை போடுதல் மதுபான வகைகள் இவைகளுக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். ஏன் என்றால்

....a) தியபழக்கங்களை கடைப்பிடிப்பதற்கு அதிக பணம் சிலவாகும்

....b) பரிசுத்தாவியானவரின் ஆலயமாய் இருக்கிற சரீரத்திற்கு அது கேடு விளைவிக்கும்.

விடை : 17b) பரிசுத்தாவியானவரின் ஆலயமாய் இருக்கிற சரீரத்திற்கு அது கேடு விளைவிக்கும்.

மதுபானம் அருந்துவதை வேதம் தடைச்செய்கிறது.

''துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிக்கொள்ளாமல் ஆவியினால் நிறைந்திருங்கள்''

எபேசியர் 5;18

''அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்திரிப்பதில்லை என்று அறியீர்களா ? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிகாரரும், ஆண்புணர்சசிகாரரும், திருடரும், பொருளாசைக்காரரும் வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாய் இருந்தீர்கள்! ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலும் நமது தேவனுடைய ஆவியினாலுமம கழுவப்பட்டீர்கள். பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.

1 கொரிந்தியர் 6:9,11

மேற்கூறிய பிரச்சனைகளில் எவையாகிலும் உன்னிடம் இருக்குமென்றால் அதைக்குறித்து உன் சபை போதகரிடம் பேசு. அவையினின்று முழு வெற்றியடைய அவரிடமும் சபையாரிடமும் ஜெபம் செய்ய கேட்டுக் கொள். உனது மனந்திரும்பிய வாழ்க்கைக் காணும் மற்றவர்கள் தங்கள் பாவ வழியை விட்டு திரும்புவதற்கு உன் வாழ்க்கை ஏதுவாகும்.



## நீங்கள் செய்ய வேண்டியது

18. ஒரு தேவப்பிள்ளை தனது கெட்ட பழக்கவழக்கத்திலிருந்து விடுப்பட இயலாத சூழ் நிலையில் செய்ய வேண்டியது

....a) சபைக்கு செல்வதை விட்டுவிடல்

....b) விடமுடியாத பாவங்களை இரகசிமாக செய்தல்

... c) போதகரிடமோ மற்றவர்களிடமோ ஜெபிக்க வேண்டிக்கொள்ளுதல்

விடை : 18c) போதகரிடமோ, மற்றவர்களிடமோ ஜெபிக்கவேண்டிக்கொள்ளுதல்

## அடக்கமாயிருத்தல்

நமது பேச்சுகளில் செய்கைகளில் நமது தோற்றத்தில் நாம் அடக்கமாய் இருத்தல் அவசியம். அடக்கமாய் இருத்தல் என்பது பெருமைக்கும் ஆடம்பரமாய் இருத்தலுக்கும் எதிர் மாறுய் இருப்பது. நாம் மற்றவர்களை விட சிறந்தவர்கள் என்னும் எண்ணமும், நம்மால் இயலாதகாரியங்களை மற்றவர்கள் செய்யும்போது அவர்களை குறைகூறும் தன்மையும் நம்மிடத்தில் இருக்குமேயானுல், அவர்களை தேவனுக்கென்று ஆதாயப்படுத்தி கொள்வதற்கு பதிலாக அவர்களை துரத்திவிடுகிறோம்.

நாம் யார் என்பதிலோ, எவைகளை உடையவர்களாயிருக்கிறோமென்றோ எவைகளை செய்கிறோமென்றோ சற்றேனும் பெருமைகொள்ள நமக்கு உரிமை இல்லை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். தேவன் நமக்காக செய்தவைகள் அல்லது தந்தவைகள் பெற்றுக்கொள்ள நாம் பாத்திரவான்களல்ல. அவருடைய இரக்கம் கிருபை நம்மேல் இல்லாவிடில் உலகம் என்றுமே கண்டிராத கொடியபாவிகளாய் நமது ஜீவியம் இருந்திருக்கும்.

ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத பெருமை நிறைந்த ஒருவன் எல்லோரும் தன்னை அறிந்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான். அவன் ஜனங்களின் கவனத்தை இழுக்க உயர்ந்த ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, கொண்டு தனது மேலான அறிவையும் தனது திறமைகளையும் பறைசாற்றிக்கொண்டு திரிவான்: அநாகரிகமான ஆடைகளை அணிந்துக்கொண்டு ஜனங்கள் எப்பொழுதும் தன்னை கவனிக்கவேண்டும் என்று கலாச்சராத்திற்கு முரண்பாடான காரியங்களில் ஈடுப்படுவான். பெருமையுள்ள ஒருவன் தனது ஆவிக்குரிய அநுபவத்தையும் தனது பிரதிஷ்டைகளையும் குறித்து பெருமைபடக்கூடும். ஆனால் அடக்கமுள்ளவன் அப்படிப்பட்டவன் அல்ல. அவன் மற்றவர்கள் கவனத்தை தன்மீது செலுத்தும்படி முயலமாட்டான்.

ஓர் அடக்கமுள்ள தேவப்பிள்ளை அநாகரிகங்களையும் ஆபாசங்களையும் எல்லைக்கப்புறமான ஆடம்பரங்களையும் தவிர்த்து தன் வாழ்க்கை நடத்துவான்.

வேதத்தில் அநேக வேத பகுதிகள் முக்கியமாக பெண்கள் அடக்கமாயிருக்கவும் வீண்காரியங்களை வெறுக்கவும் வேண்டுமென காண்கிறோம். பெண்கள் தாங்கள் அழகாய் இருக்க வேண்டுவது இயல்பு. தேவன் உண்மையாகவே அழகுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

"சாந்த குணமுள்ளவர்களை இரட்சிப்பினல் அலங்கரிப்பார்.,' சங்கீதம் 149:4

என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். தேவன், நமது அழகு உள்ளான நிலையிலிருந்துவரவேண்டும் என்று விரும்புகிறார். அழகுவாய்ந்த நற்குணங்கள் மலர்ச்சியும் சந்தோஷமும் நிறைந்த முகத்தில் பிரகாசிக்கும் சாந்தகுணமும் அமைதியான ஆவியுமே அழகிற்கு சிறந்த வழி என்று அவர் நமக்கு சொல்லியுள்ளார்.

"அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" 1 பேதுரு 3:4

## நீங்கள் செய்ய வேண்டியது

19. அடக்கம்

....a) ஓர் கிறிஸ்தவ நற்குணம்

....b) கீழ்தரமான எண்ணங்களுக்கு ஓர் அடையாளமாகும்

... c) வீணானவைகளில் ஒன்று

விடை : 19a) ஓர் கிறிஸ்தவ நற்குணம்

## நேர்மையான வேலை

நாம் நமது சம்பாத்தியத்தை நேர்மையான முறையில் பெறவேண்டும். சூதாட்டம், பரிசு சீட்டு, பயணம் கட்டுதல் வேறு எந்த பந்தயங்களிலும் நாம் பணம் சம்பாதிக்க முயற்சிக்க கூடாது. மற்றவர்களை பாதிக்கும் எந்த ஒரு

பொருளையும் நாம் விற்பனைச்செய்யவோ உற்பத்திச் செய்யவோ கூடாது.

பண ஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது''
1 தீமோத்தேயு 6:16



நாம் சோம்பேறிகளாய் இராமல் நல்ல வேலைகாரர்களாக இருக்கும்படி தேவன் விரும்புகிறார். தேவப்பிள்ளைகளின் முறுமுறுப்பில்லாத ஊழியத்தினிமித்தம், அநேகர் சுவிசேஷத்தின் வல்லமையினால் சந்திக்கப்பட்டு இருக்கின்றனர்.

''ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடாதிருக்கக் கடவன்.''

2 தெசலோனிக்கேயர் 3:10

'புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்கு கட்டளையிட்டப்படியே, அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்''

1 தெசலோனிக்கேயர் 4:11,12

## நீங்கள் செய்ய வேண்டியது

20. வேதம்போதிக்கின்றபடி, ஒருவனுக்கு வேலைசெய்ய மனமில்லையென்றால்:

...a) அவன் எஜமானுய் மாறவேண்டும்

...b) அவன் சாப்பிடாதிருக்கக்கடவன்

21. நல்ல சார்ந்திருக்கக் கூடிய வேலை

...a) உன் சாட்சியின் ஜீவியத்திற்கு தடையாய் இருக்கும்.

...b) உன் விளக்கை பிரகாசிக்கச்செய்யும் நல்ல வழி.

...c) முக்கியத்துவமற்றது

விடைகள் : 20a) அவன் சாப்பிடாதிருக்கக்கடவன் 21b) உனது விளக்கை பிரகாசிக்கச் செய்யும் வழி

## குடும்பத்தை சரியான முறையில் நடத்தல்

இன்று அநேகர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதின் காரணம் யாதெனில், தேவப்பிள்ளைகள் என்று சொல்லி கொள்பவர்களின் குடும்பங்களில் நடைபெறும் வாக்குவாதங்களும் சண்டைகளுமே. ஆனல் மறு பக்கத்தில் ஒரு சிறிதளவு மட்டும் சுவிசேஷத்திற்கு வாஞ்சையாயிருந்த அநேகர், சில தேவ பிள்ளைகளின் குடும்பங்களில் காணப்படும் பொறுமை, அன்பு, கிறிஸ்துவில் காணப்படும் சந்தோஷம் இவைகளால் இழுக்கப்பட்டுள்ளனர்.

### நீங்கள் செய்ய வேண்டியது

22. உன் விளக்கை பிரகாசிக்கச் செய்யும் வழிகளை திரும்பி பார்த்து அவை ஒவ்வொன்றிலும் தேவன் உனக்கு உதவிச்செய்ய வேண்டிக்கொள்.

பாடம் 9

# சந்தோஷமுள்ள ஒரு குடும்பத்தை பெற்றிருப்பது எங்கனம்



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

உனது குடும்ப இரட்சிப்புக்காய் ஜெபி, செயல்படு

உன் வீட்டில் ஓர் நல்ல தேவப்பிள்ளையாயிரு

உன் தவறுகளுக்கு மன்னிப்பு கேள்

உற்சாகமாயிரு

திருமணத்தை புனிதமாய் கருது

தேவபிள்ளையை மணந்துக்கொள்

நல்ல பெற்றோராயிருங்கள்

தேவனை நேசிக்க உன் பிள்ளைகளுக்குக் கற்று கொடு

உன் குடும்பத்தை நேசி

இவ்வுலகில் ஓர் மெய் கிறிஸ்தவக் குடும்பத்தைப் பெற்றிருப்பது மற்றெல்லாவற்றையும் விட ஓர் மிகச் சிறந்த பாக்கியமாகும். இக்குடும்பத்தில் கிறிஸ்துவே தலையாயிருக்கிறார். அவரது பிரசன்னம் வீட்டில் சந்தோஷம், சமாதானம், அன்பு இவைகளால் நிரம்ப செய்கிறது. இக்கிறிஸ்தவக் குடும்பமே பாவப்புயலுக்கும், சூழ உள்ள துன்பங்களுக்கும் ஒதுங்கும் அடைக்கலமாகும். தேவன் தமது

வேதத்தில் கூறியபடி உன் குடும்பவாழ்வை அமைப்பாய் எனில் உனது குடும்பம் பரலோகத்தின் ஒரு பாகமாகவே அமையும்.

1. உங்கள் குடும்பம் ''பூலோகத்திலேயே பரலோகத்தின் ஒரு பாகமாக'' அமைய

...a) போதுமான பணம் தேவை

...b[ போதுமான நண்பர்கள் தேவை

...c) தேவனின் போதனைகளைப் பின்பற்றவேண்டும்

## நீங்கள் செய்ய வேண்டியது

விடை : 1c) தேவனின் போதனைகளைப் பின் பற்ற வேண்டும்.

## உனது குடும்ப இரட்சிப்பிற்காய் ஜெபி. செயல்படு

இதுதான் தேவசித்தம் என அறிந்து விசுவாசத்துடன் ஜெபிக்கவும். உடனடியாய் உன் குடும்பம் இரட்சிப்படையாவிடில் அதைரியமடைய வேண்டாம். தேவன் ஜெபத்திற்கு பதில் அளிப்பார் என்று அறிந்து தொடர்ந்து ஜெபிக்கவும்.

''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்''

அப்போஸ்தலர் 16:31

## நீங்கள் செய்ய வேண்டியது

2. உன் குடும்பத்தினர் உடனடியாக இரட்சிப்படையவில்லையெனில்

...a) அவர்களுக்காய் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிரு

...b) ஜெபிப்பதை நிறுத்திவிடு

...c) தேவன் ஒருபோதும் அவர்களை இரட்சிக்க மாட்டாரென்று எண்ணிக்கொள்

3. உடனடியாய் இரட்சிப்படைய காத்திருக்கும் உன் குடும்பத்திற்காய் இப்பொழுது ஜெபி. மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் அவர்களுக்காய் ஜெபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்.

விடை : 2a) அவர்களுக்காய் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிரு

## உன் வீட்டில் ஓர் நல்ல தேவப் பிள்ளையாயிரு

ஓர் நல்ல தேவப்பிள்ளைபோன்று சபையில் நடிப்பது எளிது; ஆனால் உனது வீட்டில் நீ எப்படிப்பட்ட தேவப்பிள்ளையாய் இருக்கின்றாய் ?

நீ நேசிக்கிறவனாய் இருக்கின்றாயா ? அல்லது சுயநலமுள்ளவனாயிருக்கின்றாயா ? நீ கட்டளை கொடுத்துக்கொண்டிருக்கிறாயா ? அல்லது மற்றவர்களின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கின்றாயா ? உனது பெற்றோர்களை மதித்து அவர்களுக்கு கீழ்படிகின்றாயா அல்லது உனது சுய இஷ்டம் போல் நடந்து கீழ்படியாமலிருக்கின்றாயா ?

நீ உன் கடமையை செய்து உதவியாயிருக்கின்றாயா ? அல்லது சொம்பேறியாய் இருக்கின்றாயா ? குறை கூறாமலும் குற்றப்படுத்தாமலும் சந்தோஷத்துடனே மற்றவர்களுடன் ஒத்துழைக்கின்றாயா ? வெகுவிரைவிலே அதைரியமடைகின்றவனாய் காணப்படுகின்றாயா ? அல்லது எல்லாமே மாறாக நடந்தாலும் தைரியமாய், உற்சாகமாய் இருக்கின்றாயா?


உன்னோடு கூட மற்றவர்கள் இருப்பதற்கு சம்மதிக்கிறார்களா ?

## நீங்கள் செய்ய வேண்டியது

4. ஓர் மகிழ்ச்சி நிறைந்த குடும்பத்தை வாஞ்சிப்பாயென்றால், தாழ்மையுடன் உனது தோல்விகளை தேவனிடம்தெரியப்படுத்தி அவற்றைமேற்கொள்ள உதவிக்காய் ஜெபி. நீ உனது பகுதியை செய்ய முன்வரும்போது தேவன் உனக்கு உதவிசெய்வார்.

## உன் தவறுகளுக்கு மன்னிப்பு கேள்

நாம் தவறு செய்தவர்களிடம் மன்னிப்பு கேட்குமாறு இயேசு போதிக்கின்றார். இதை நாம் செய்யத் தவறுவோமெனில், நாம் தேவனுடன் கொள்ளும் ஐக்கியத்திற்குரிய வழியில் இவைகள் தடையாய் நிற்கும்.



நான் உன்னை கடினமாய் பேசி விட்டேன்; என்னை மன்னியும் என வாயினால் சொல்வது இலேசான ஒன்றாகும். ஆனால் கடினமான உணர்ச்சிகளிலிருந்து விடுபடுவது, குடும்பத்தில் சந்தோஷத்தை காப்பதற்கு பெரிதும் பயனளிப்பவைகளாகும். உன்னில் ஏதாகிலும் தவறான செய்கைகள் உண்டா ? நீ நேசிக்க கூடியவர்களிடம் அவற்றை தெரிவித்து உனக்காய் ஜெபிக்கக் கேட்டுக்கொள். இதுவே வெற்றிக்கு நீ எடுத்து வைக்கும் முதற்படியாகும்.

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்." யாக்கோபு 5:16

## நீங்கள் செய்ய வேண்டியது

5. உன் குடும்பம் மகிழ்ச்சி மிக்கதாயிருக்க நீ செய்ய வேண்டியது.

...a) உன் குடும்பத்தினரில் யாருடனாவது அன்பற்ற நிலையில் நடந்துகொண்டிருப்பாயெனில் அவரிடம் மன்னிப்பு கேள்

...b) உன்னிடம் மன்னிப்பு கோரும்படி மற்றவர்களை துரிதபடுத்து.

...c) எல்லாருக்கும் முன்பாக உன்னைப் பெரியவனாக்கி உனக்கு பயப்படச்செய்

6. யாக்கோபு 5:16ஐ மனப்பாடம் செய்யவும்

விடை : 5a) உன் குடும்பத்தினரில் யாருடனாவது அன்பற்ற நிலையில் நடந்துகொண்டிருப்பாயெனில் அவரிடம் மன்னிப்பு கேள்

## உற்சாகமாயிரு

எல்லாம் இருளாய் தோன்றும்போதும் உன் ஜெபத்தை தேவன் கேட்ட படியால், விசுவாசத்தோடு அவருக்கு நன்றி செலுத்து.

"கர்த்தருக்குள் மகிழ்ச்சியாருப்பதே உங்களுடைய பெலன்" நெகேமியா 8:10

உனது முற்கோபக் குணத்தை அடக்கிக் கொள்ள ஏற்படும் கடினமான நேரங்களைக் குறித்தும், உனது வாழ்வில் நீ ஏற்றுக் கொள்ளக் கூடாத வேறு எந்த குணமிருந்தாலும் அவைகளைக் குறித்து நீ அதைரியமடையாதே! அவைகளை மேற்கொள்ள நீ எடுக்கும் பிரயாசம், நீ தேவனை நேசித்து அவருக்கு சாட்சியாயிருக்கப் பிரயாசப்படுவதைக் காட்டுகிறது. நீ ஆவிக்குரிய ரீதியில் வளர அவர் உனக்கு துணை செய்கிறார். உனது வளர்ச்சி மிகவும் மந்தமாயிருக்கிறதா? நீ உன்னையே நோக்கிப் பார்த்துக்கொண்டு இருப்பதைவிட, தேவனை அதிகம் நோக்கிப்பார்ப்பாயெனில், நீ அதிசயிக்க கூடிய நிலையில் அவர் உனது குடும்ப பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பார். தேவன் உன்னை நேசிக்கும் அன்பு தகப்பன். அவர் உன்னைக்குறித்து கரிசனை உள்ளவாரயிருக்கிறார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

7. நெகேமியா 8:10ஐ மனப்பாடம் செய்யவும்

## திருமணத்தை புனிதமாய் கருது

சில சமயங்களில் அநேக இளம்தம்பதிகள் திருமணமில்லாமலே ஒருமித்து வாழ்கின்றனர். ஒருவன் தேவபிள்ளையாய் மாறும்போது அவன் சட்டப்பூர்வமான திருமணத்தை விரும்பவேண்டும். இவ்விதமாய் செய்வதின் மூலம் சமுதாயத்தில் நற்சாட்சியுடனிருக்க முடியும். மட்டுமல்ல, தேசத்தின் சட்டத்திற்கும். தன் குடும்பத்திற்கும் நற்பேறு விளைவிப்பவனாயிருப்பான். கிறிஸ்துவையும் கனப்படுத்துகிறவனாயிருப்பான். உன் சபைப் போதகரை அணுகு. எல்லாவகையிலும் உதவி செய்ய அவர் உனக்கு அநுகூலமாயிருப்பார்.

திருமணத்திற்கு புறம்பே, உடலுறவு சம்பந்தமான காரியங்கள் வேதத்தில் மிகவும் கண்டிக்கப்பட்டுள்ளது. தேவன் மெய் அன்புக்கு விரோதமாய் பழகும் அசுத்தப்பழக்கங்களை இளம் தம்பதிகள் திருமணத்திற்கு முன் செய்யக் கூடாது என்று கண்டிக்கிறார்.

ஓர் தேவப்பிள்ளையின் குடும்பத்தில் காணப்படும் மிகப் பெரிதான ஆசிர்வாதம் யாதெனில் புருஷனும், மனைவியும் ஒருவருக்கொருவர் தங்கள் சிந்தனையிலும், வார்த்தைகளிலும், செய்கையிலும் உண்மையுள்ளவர்களாய் இருப்பதால், ஒருவரையொருவர் நம்புகின்றார். அவர்கள் ஒருமித்து தேவனை சேவிப்பதால், குடும்பங்களை தகர்த்து பிரிவினை உண்டாக்கும் வஞ்சகம், சந்தேகம், பொறாமை உண்மையில்லாமலிருத்தல் போன்றவைகளுக்கு விலகி, மகிழ்ச்சியாய் வாழ்கின்றனர்.

*"விவாகம் (திருமணம்) யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது"* எபிரேயர் 13:4

"எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரர் என்று பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்கும் புத்தி சொல்லுகிறேன் ரோமர் 12:17; 1 பேதுரு 2:12

## நீங்கள் செய்ய வேண்டியது

8. நற்சாட்சியுடையவனாயும், குடும்பத்தில் தேவாசீர்வாதங்களினால் சந்தோஷிக்கவும் நீ செய்யவேண்டியவை:

....a) சட்டப்படி திருமணம் செய்துகொண்டு புருஷன் மனைவியாய் இணைந்து வாழ வேண்டும்.

....b) உங்கள் இனிய உள்ளங்களுடன் திருமணத்திற்கு முன் இணைந்து வாழ்ந்து ஒருவருக்கொருவர் பொருத்தமாயிருக்கிறீர்களா என்று நிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டும்

...c) தனித்திரு

9. உங்கள் திருமணத்தில் தேவனின் ஆசீர்வாதம் தங்கவும் அவர் அன்பு உங்களிருவரின் அன்பைப் பெலப்படுத்தவும் ஜெபி. வார்த்தையிலும், சிந்தனையிலும் செய்கையிலும் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்கவும் ஒருவர் பேரில் ஒருவர் நம்பிக்கையுடன் இருக்கவும் உதவி செய்யுமாறு தேவனிடம் வேண்டிக்கொள்.

விடை : 8a) சட்டப்படி திருமணம் செய்துகொண்டு புருஷன், மனைவியாய் இணைந்து வாழவேண்டும்.

## தேவப்பிள்ளையை மணந்து கொள்

ஒருவேளை நீ ஏற்கனவே தேவப்பிள்ளை அல்லாதவரை திருமணம் செய்திருந்தால் உன் மனைவி, அல்லது கணவர் இரட்சிக்கப்பட ஜெபிக்க வேண்டியதுதான் உனது கடமை. உனது தீபம் தேவனுக்கென்று பிரகாசிக்க வேண்டுமாயின் நீ உண்மையுள்ள கணவனாகவோ அல்லது மனைவியாகவோ திகழவேண்டும். ஆனால் நீ இன்னும் தனிப்பட்டவனாயிருந்து திருமணம் செய்வதாயிருப்பின், ஓர் தேவப்பிள்ளையை திருமணம் செய்துகொள். இதுவே நீ மெய் ஐக்கியத்துடனும், சமாதானத்துடனும் இணைந்து வாழ ஒரேவழி.

'நீ வேற்று மதத்தினரை திருமணம் செய்து கொள்வாயெனில் பிரச்சனைகளும், குழப்பமும் தான் காணப்படும்.

உங்கள் குழந்தைகளுக்கு, மதசம்பந்தமான பயிற்சி அளிப்ப தைக்குறித்தும் உங்களில் வேற்றுமை காணப்படும். அவர்களை நீ எப்படி தேவனை சேவிக்கும்படி வளர்க்க முடியும் ?

நீ இயேசுவை உன் வாழ்க்கையின் நாயகனுக ஏற்று கொண்டு, உனது மனைவியோ அல்லது புருஷனோ இயேசுவை ஏற்று கொள்ள மனமற்றிருப்பின், நீங்கள் ஒருவருக்கொருவர் எதிர்மாறான திசையில் செல்வதை காணலாம். நீ இரண்டுவிதமான காரியங்களுக்கிடையில் உடைந்த நிலையில் காணப்படுவாய். (எல்லாக் காரியங்களிலும் கிறிஸ்துவை பிரியப்படுத்த வாஞ்சையாயிருப்பதும், மற்றபடி உனது வாழ்க்கை துணையை திருப்திசெய்ய வாஞ்சிப்பதும்).

ஓர் தேவப்பிள்ளையென்னும் நிலையில் நாம் தேவனை பிரியப்படுத்தவிரும்புவோம். சபை ஆராதனைகளில் பங்கு பெறுவதன் மூலமும், மற்ற தேவப்பிள்ளைகளின் ஐக்கியத்தை வாஞ்சிப்பதன் மூலமும் சபைக்கடுத்த அலுவல்களில் ஈடுபட்டு தேவன் விரும்புகின்றபடி அவருக்கு பிரயோஜனமுள்ளவனுயிருக்கவும் நான் வாஞ்சிப்போம். குடும்பத்தில் யாவரும் இணைந்து தேவனை துதித்து அவரை சேவிப்பதற்குரிய குடும்ப ஜெபம் வீட்டில் இருப்பதையும் நாம் விரும்புவோம்.

அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக, நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது ? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது ?

11 கொரிந்தியர் 6:14

## நீங்கள் செய்ய வேண்டியது

10. ஓர் தேவப்பிள்ளை இரட்சிப்படையாத ஒருவரை திருமணம் செய்து கொள்வது

....a) அவர்களை ஆதாயப்படுத்த மிகச் சிறந்தவழி

....b) ஒருவரையொருவர் நேசிப்பர் என்றால் எல்லாம் சரியே

....c) தேவனின் கட்டளையை மீறுவதாகும்

விடை : 10c) தேவனின் கட்டளையை மீறுவதாகும்

## நல்ல பெற்றோராயிருங்கள்

குழந்தைகளைக் குறித்து அக்கறை செலுத்துவதில் பெற்றோர்கள் தேவனுக்கு கடமைப்பட்டவராயிருக்கின்றனர். தகப்பன் வீட்டிற்கு தலைவர் என்ற நிலையில், குடும்பத்தின் ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான தேவைகளைச் சந்திக்கவேண்டும். தாயும் கூட, பிள்ளைகளிடம் அன்பு செலுத்தி, அவர்கள் தேவைகளை பராமரிக்கவேண்டும். சபையின் நடவடிக்கைகள் அவர்களை குடும்ப பொறுப்புகளிலிருந்து அவர்களை விடுதலையாக்குவதில்லை.

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாய் இருப்பான்." 1 தீமோத்தேயு 5:8

## நீங்கள் செய்ய வேண்டியது

11. ஒரு தகப்பன் தன் குடும்பபொறுப்பை விட்டு மற்ற காரியங்களில் ஈடுபடுவது

...a) தேவனுக்காய் செய்யும் ஆழமான பிரதிஷ்டையைக் காட்டுகிறது

....b) தனது குடும்பத்தைக் குறித்து தேவன் அளித்துள்ள பொறுப்புகளில் தோல்வியடைவது ஆகும்.

விடை : 11b) தனது குடும்பத்தை குறித்து தேவன் அளித்துள்ள பொறுப்புகளில் தோல்வியடைவது ஆகும்.

## தேவனை நேசிக்க உன் பிள்ளைகளுக்கு கற்று கொடு

உன் பிள்ளைகள் சிறுவராயிருக்கும்போது அவர்கள் தேவனையும், அவருடைய வார்த்தைகளையும் நேசிக்கசெய்வாயாகில் அவர்கள் வயது நிரம்பிய காலத்தில் உங்களுக்கிடையே உண்டாகும் அநேக பிரச்சனைகளை தவிர்க்கமுடியும். குடும்பத்தை தேவனுடன் இணையும்படி ஒன்று சேர்த்து, ஒவ்வொரு நாளும் வேதம் வாசித்து, ஜெபிக்க வேண்டும். அதில் ஒவ்வொருவரும் பங்கு வகிக்கவேண்டும். ஒவ்வொருவர் பிரச்சனைகளுக்காகவும் அனைவரும் சேர்ந்து ஜெபிக்க வேண்டும். ஆசீர்வாதங்களுக்காய் எல்லோரும் ஒருமித்து நன்றி செலுத்தவேண்டும்.

"சபை ஆராதனைகளுக்கு ஒன்று சேர்ந்து செல்லவேண்டும் சிறுவயதிலே பிள்ளைகளை தேவனுக்கென அற்பணிக்க ஊக்கமளிக்கவேண்டும்."

நீங்கள் ஒருமித்து குடும்பமாய் தேவனை சேவிக்கும் பொழுது, உங்கள் குடும்ப உறவை தேவன் பெலப்படுத்துவார். மட்டுமல்லாமல் சேர்ந்து ஜெபிக்கும் குடும்பம் ஒருமித்து வாழும் குடும்பமாகும்.

"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும், அவர்களை வளர்ப்பீர்களாக." எபேசியர் 6:4

## நீங்கள் செய்ய வேண்டியது

12. கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் விடப்பட்ட வார்த்தைகளைப் பூர்த்தி செய்க :

''சேர்ந்து.................... குடும்பம்........................ வாழும் குடும்பமாகும்''

13. நீங்கள் பெற்றோர்களாயிருப்பின் உங்கள் பிள்ளைகளுக்காய் இப்பொழுதே ஜெபியுங்கள். தேவன் அவர்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக்கொள்ளவும். மிகுந்த பொறுமையுடனும், புரிந்து கொள்ளுதலுடனும் ஜெபிக்கவும்.

விடை : 12 ஜெபிக்கும், ஒருமித்து

## உன் குடும்பத்தை நேசி

''தேவன் அன்பாயிருக்கிறார்'' உன் வாழ்க்கையில் எவ்வளவுக்கதிகமாய் உன்னுடன் வாசம்செய்கிறாரோ அவ்வளவுக்கதிகமாய் நீ உன் குடும்பத்தை நேசிக்க உன்னில் அன்புகாணப்படும். உன் குடும்பத்தில் அதிக அன்பு காட்டும் பொழுது, உன் குடும்பம் மிகவும் சந்தோஷமுள்ளதாயிருக்கும்.

## நீங்கள் செய்ய வேண்டியது

14. உன் குடும்பத்தில் ஒருவரையொருவர், அதிகமாக நேசிக்க வேண்டிக்கொள்.

பாடம் 10

# உங்கள் புதிய சுதந்திரம் (விடுதலை)



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

பாவத்திலிருந்து விடுதலை
பயத்திலிருந்து விடுதலை
தவறுகளிலிருந்து விடுதலை
மோசேயின் நியாய பிரமாணத்திலிருந்து விடுதலை
கவலைகளிலிருந்து விடுதலை
வியாதியிலிருந்து விடுதலை
வருங்காலத்தில் விடுதலை
உங்கள் விடுதலையைக் காத்துக்கொள்ளுதல்

அப்போஸ்தலனாகிய பவுல் "ஓர் தேவப்பிள்ளையின் மகிமையான விடுதலையைக்குறித்து" எழுதியுள்ளான். தேவனின் வழிகளில் அதிகமாய் நீ முன்னேறிச் செல்லும் போது அவரளிக்கும் அற்புத விடுதலைகளைக் குறித்து ஆனந்திக்கக்கூடும்.

## பாவத்திலிருந்து விடுதலை

இயேசு உன்னை குற்ற உணர்வு, தண்டனை, பாவ வல்லமை, பாவப்பிடி, இவைகளிலிருந்து விடுவிக்கும்படியாகவே மரித்தார்.



• குற்ற உணர்வு : நீ செய்த எல்லா குற்றங்களுக்காகவும் தண்டனையை அவர் தன் மேல் ஏற்றுக்கொண்டார்.

• தண்டனை : உனது பாவங்களுக்காய் நீ மரிக்க வேண்டிய இடத்தில் இயேசு மரித்து இருக்கிறார். நீ அவரை உன் இரட்சகராய் ஏற்றுக்கொள்ளும்போது உனக்கு விதிக்கப் பட்டிருக்கும் மரண தண்டனையினின்று விடுபடுவாய்.

• பாவ வல்லமை : இயேசு பிசாசை ஜெயித்து, பாவ வல்லமை உன்னை ஆட்கொள்ளாதபடி செய்தார்.

''இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக் கப்பட்டு, இருக்கிறீர்கள் மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறான். அப்படியே நீங்க ளும் உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண் ணிக்கொள்ளுங்கள். ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப் பில்லை. ரோமர் 6:22,7,11; 8:1

## நீங்கள் செய்ய வேண்டியது

1. நீங்கள் குற்ற உணர்வு, தண்டனை, பாவ வல்லமை இவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பது

... a) இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டிருப்பதால்

.. b) உனது பாவங்களுக்காக பாவ நிவர்த்திசெய்வதால்

...c) இன்றைக்கு முதல் நல்லவனுயிருப்பேன் என்று தீர்மானித்து இருப்பதனுல்

**விடை :** 1a) இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டிருப்பதால்

• பாவ சோதனே : சிலர் தேவனே ஏற்றுக்கொண்ட மாத்திரத்தில் தங்கள் கெட்டபழக்க வழக்கங்களிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். மற்றவர்கள் சில வாரங்களுக்கு தங்கள் கெட்டபழக்கவழக்கங்களான புகையிலே உடயோகித்தல், மதுவகைகளே உபயோகித்தல், போன்றவற்ருேடு போராடிக் கொண்டிருப்பர் என்றபோதிலும், தொடர்ந்து தேவனே விசுவாசித்து ஜெபித்துக் கொண்டிருப்பார்களென்ருல், தேவன் அவர்களுக்கு அவற்றின் மீது ஜெயத்தை அளிப்டார்.

''குமாரன் உங்களே விடுதலேயாக்கினுல், மெய்யாகவே விடுதலேயாவீர்கள்.'' யோவான் 8:36

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களே விட்டு ஓடிப்போவான்'' யாக்கோபு 4:7

கெட்டப்பழக்க வழக்கங்களே விடமுடியாமல் போராடிக் கொண்டிருப்பாயென்ருல், போராட்டத்தை நிறுத்தி விடாதபடி தொடர்ந்து போராடு. பிசாசு உன்னே சோதிக்கையில் விசுவாசத்திஞல் கிறிஸ்து தரும் வெற்றியை உனது உரிமையாக்கிக்கொள். சீக்கிரத்தில் சேகதலேகளின்மேல் நீ பெறப் போகும் வெற்றிக்காய் தேவனுக்கு துதி செலுத்தத் தொடங்கு. உன் சபைப்போதகர் இக்காரியங்களில் உனக்கு உதவியாயிருந்து உன்னுடன் ஜெபிப்பார்.

நீ இன்னும் போராட வேண்டிய பல வகையான சோதனைகள் உண்டு. ஆனால் நீ பரலோகில் பிரவேசிக்கும்போது பாவ வாஞ்சையேயில்லாமல் முற்றிலும் விடுவிக்கப்பட்டிருப்பாய்.

## நீங்கள் செய்ய வேண்டியது

2. யோவான் 8:36ம், யாக்கோபு 4:7ம் மனப்பாடம் செய்க.

3. வேதம் சொல்கிறது : பிசாசுக்கு

....a) எதிர்த்து நின்றால் அவன் உன்னை தோற்கடித்து விடுவான்

....b) எதிர்த்து நின்றால் ஓடிப்போவான்

....c) உனது எதிர்ப்பு சற்றும் கவலை உண்டாக்காது

விடை : 3b) எதிர்த்து நின்றால் ஓடிப்போவான்

• பாவத்தின் விளைவும், அதன் பிரசன்னமும்: நாம் இப்பொழுது பாவத்தையும் அதன் விளைவுகளாகிய, துன்பம், வருத்தம், மரணம் இவற்றை பார்க்கிறோம். ஓர் மகிமையான நாளில் நாம் நமது நித்திய வீட்டிற்குச் சென்று பாவத்தையும் அதன் விளைவையும் முற்றிலும் மறந்து மகிழ்ந்திருப்போம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

4. (மூன்றினைத் தெரித்தெடு) விடுதலையில் எந்தபகுதியை கிறிஸ்துவுக்குள் இப்பொழுது நாம் அடைந்து இருக்கிறோம்?

....a) சோதனைகளிலிருந்து விடுதலை

....b) பாவத்தைக் குறித்த குற்ற உணர்விலிருந்து விடுதலை

....c) பாவத்தின் எல்லா விளைவுகளிலிருந்து விடுதலை

... d) பாவ வல்லமையிலிருந்து விடுதலை

....e) பாவப் பிரசன்னத்திலிருந்து விடுதலை

....f) பாவத் தண்டனையிலிருந்து விடுதலை

*விடைகள்:* b) பாவத்தைக் குறித்து குற்ற உணர்விலிருந்து விடுதலை d) பாவ வல்லமையிலிருந்து விடுதலை f) பாவத்தண்டனையிலிருந்து விடுதலை

## பயத்திலிருந்து விடுதலை

மற்றவர்கள் உனக்கு என்ன செய்வார்களோ என்ற பயத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளாய். உனது வாழ்க்கை பாதுகாப்பாகிய தேவனில் கிறிஸ்துவுடன் மறைந்திருக்கிறது. நீ கிறிஸ்துவினிமித்தம் துன்பப்பட்டு, ஒருவேளை மரிக்கவும் நேரலாம். ஆனால் தேவன் எப்பொழுதும் உன்னுடனே இருக்கிறார். அவர் அனுமதியில்லாமல் ஒன்றும் உனக்கு நேரிடாது.

"தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? ரோமர் *8:31*

நீ பில்லிசூனிய பயத்திலிருந்தும், திருஷ்டி, துர் அதிர்ஷ்டம் இவைகளின் பயத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறாய். ஜீவிக்கும் இரட்சகராகிய இயேசு உன்னோடிருப்பதால் அவர் உன்னைப் பாதுகாப்பார். ஆகையால், தாயத்துக்களோ, மந்திரவாதங்களோ, காப்புக்களோ, பிள்ளைகளுக்கு கழுத்திலோ, கையிலோ கட்டும் தாயத்துக்களோ குலதெய்வத்தின் உருவப்படங்களோ, உலோகங்களால் அல்லது மண்ணால் செய்யப்பட்ட உருவங்களோ உன்னைப்பாதுகாக்க உனக்கு அவசியமில்லை. இக்காரியங்களை நீ செய்வதை அவர் காணும்போது அவர் மிகவும் துக்கமடைகிறார்.

''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக்கை விடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியம்கொண்டு: கர்த்தர் (தேவன்) எனக்குச் சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.''

*எபிரேயர் 13:5,6*

''உலகத்திலிருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர்.'' *1 யோவான் 4:4*

## நீங்கள் செய்ய வேண்டியது

5. பயத்திலிருந்து விடுபட்டு வாழ நேர்மையான வழி

...a) உறுதியான மந்திரக்கட்டு செய்

...b) பில்லிசூனியக்காரனிடம் செல்

...c) ஓர் உருவப்படத்திற்கு தீபமேற்று

...d) தேவனில் நம்பிக்கை வை

விடை : 5d) தேவனில் நம்பிக்கை வை

## தவறுகளிலிருந்து விடுதலை

கோடிக்கணக்காக மக்களை சாத்தானானவன் தவறான மார்க்கங்கள் மூலம் வழிவிலக செய்திருக்கிறான். பரலோகத்திற்கு செல்ல அவன் தவறான கொள்கைகளை அவர்களுக்கு அளித்துக் கொண்டு இருக்கிறான். ஜனங்களை, சூரியன், சந்திரன், பாறைகள், நதிகள், மரங்கள் இவைகளை வணங்கும்படிச் செய்து வெளிப்பாடுகள் சொப்பனங்கள் இவைகள் மூலம் உண்மையைக் கண்டுக் கொள்ளும்படி தவறாய் வழி நடத்துகிறான். அவர்களை மரித்தவர்களிடம் குறிக்கேட்க செய்கிறான். தங்கத்தினாலும், வெள்ளியினாலும், மரத்தினாலும் கல்லினாலும் மற்றப்பொருட்களினாலும், செய்த உருவங்களுக்கு முன் தீபாராதனை செய்யும்படி தூண்டுகிறான்.

ஜனங்களை அவைகளுக்கு பலியிடவும் அவைகளிடம் பொருத்தனைச் செய்துக் கொள்ளவும் அவைகளை நமஸ்கரித்து வேண்டிக்கொள்ளவும் செய்கிறான்.

தேவனின் வார்த்தை (வேதம்) மனித சிந்தனையினால் உருவானதல்ல. அது நமக்கு பரலோகிற்குச் செல்லும் மெய் வழியை காட்டுவது ஆகும். நீ தேவனின் வார்த்தையை வாசிக்கும்பொழுது சத்தியத்தை அறிந்து அதன் மூலம் தவறுகளிலிருந்து உன்னை விடுவித்துக் கொள்ளுவாய்.

''சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' யோவான் 8:32

## நீங்கள் செய்ய வேண்டியது

6. நாம் தவறுகளிலிருந்து விடுதலையடைய :

...a) நமது சொப்பனங்களில் வெளிப்பாடுகள் பெற வேண்டும்

...b) பரலோகத்தைக் குறித்து மற்ற ஜனங்களின் ஆலோசனைப் பெற வேண்டும்

...c) வேதத்தில் உள்ள மெய் சத்தியத்தை அறிந்துக்கொள்ள வேண்டும்

விடை : 6c) வேதத்தில் உள்ள மெய்சத்தியத்தை அறிந்துக்கொள்ள வேண்டும்

தொடர்ந்து நாம் பார்க்க போகும் வேதப்பகுதியில் உருவ வழிப்பாட்டைக்குறித்தும் அசுத்தாவிகளை வணங்குதலை குறித்தும் தேவன் திட்டமாய் வெறுக்கிறதை காணக்கூடும். நமது அறியாமையின் காலத்தில் செய்த பொருத்தனைகளை விட தேவனுக்கு நம் வாழ்க்கையில் இடம் கொடுத்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதே

முக்கியமாகும். இந்த தேவனுடைய கற்பனே உன்னே உரு வங்களுக்கும் ஆவிகளுக்கும் பொய் தேவர்களுக்கும் நீ செய்த பொருத்தனேகளிலிருந்தும் விடுதலேயாக்கும்.

''என்னேயன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயி ருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியி லும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவை களுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண் டாம்; நீ அவைகளே நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.'' யாத்திராகமம் 20:3-5

''தன் மகனேயாவது, தன் மகளேயாவது தீக்கடக்க பண்ணுகிறவனும் குறிச்சொல்லுகிறவனும், நாள்ப் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக் காரனும், மந்திரவாதியும்; சன்னதக்காரனும், மாய வித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கி றவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப் படிப்பட்டவைகளே செய்கிற எவனும் கர்த்தருக்கு அரு வருப்பானவன்.'' உபாகமம் 18:10-12

நீ ஒன்ருன மெய் தேவனுக்கு உரியவனுயிருக்கிறபடி யால், ஆவிகளேயோ, பொய் தேவர்களேயோ சேவிக்க தேவையில்லே. அசுத்த ஆவிகளின் வல்லமையிலிருந்தும் அவைகள் உனக்கு ஏதாவது செய்ய கூடும் என்ற பயத்தி லிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிருய். உன்னே வேதனேப் படுத்த நினேக்கும் அசுத்தாவிகளின் வல்லமையை விட உன் னில் வசிக்கும் தேவனின் பரிசுத்தாவியானவர் வல்லமை உடையவராய் காணப்படுகிருர்.

### நீங்கள் செய்ய வேண்டியது

7. (இரண்டினை தெரிந்தெடு) வேதம் நம்மை விடுவிப்பது

...a) விக்கிரக ஆராதனையிலிருந்து

...b) நேரடியாக தேவனிடம் ஜெபிப்பதிலிருந்து

...c) ஓய்வு நாளை ஆசரித்தலிலிருந்து

...d) மனம் திரும்புதலும் விசுவாசத்திலிருந்தும்

...e) ஆவிகளை தொழுதுக் கொள்ளுதலிலிருந்து

விடைகள் : 7a) விக்கிரக ஆராதனையிலிருந்து e) ஆவிகளை தொழுக்கொள்ளுதலிலிருந்து

## மோசேயின் பிரமாணங்களிலிருந்து விடுதலை

வெகு காலத்திற்கு முன்பு தேவன் எபிரேயர்களோடு ஒரு உடன் படிக்கைச் செய்துக்கொண்டார். எகிப்திலிருந்து வழிநடத்தின மோசே இந்த உடன்படிக்கையையும் அதைச் சார்ந்த சட்டதிட்டங்களையும் பெற்றுக்கொண்டான். இப்படி அவன் பெற்றுக் கொண்ட பிரமாணங்களில், பலிகள், பரிசுத்த நாட்கள், ஆராதனை முறைமை, உணவு வகைகளைக் குறித்த ஒழுங்கு போன்றவை இடம் பெற்றிருந்தன.

இப்படிப்பட்ட மத சடங்காச்சாரங்கள் யாவும் இயேசு கிறிஸ்துவையும் அவர் அளிக்கும் இரட்சிப்பைக் குறித்தும் அகதோற்றம் உடையவைகளாக இருந்தன, இயேசுவே பரிபூரண பலியாய் அவர்களுடைய பாவங்களிலிருந்து விடுவிக்கிறவராய் இருப்பார். அவரை இரட்சகராய் ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு ஒரு புதிய உடன் படிக்கையை ஏற்படுத்தி எல்லா நியாயபிரமாணங்களையும் நிறைவேற்றி

எபிரேயர்களுக்கும் மற்றவர்களுக்கும் இரட்சிப்பை ஏற்படுத்தினர். மோசேயின் நாட்களிலிருந்து இயேசு கிறிஸ்துவின் நாட்கள்வரை எபிரேயர்கள் மோசேயின் பிரமாணங்களுக்கு கட்டுப்பட்டு இருந்தனர். இயேசு கிறிஸ்துவுக்கு பிறகு அவருடைய புதிய உடன்படிக்கையாகிய புதிய ஏற்பாட்டிற்கு நாம் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கிறோம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

8. (மூன்றினை தெரிந்தெடு) தேவப் பிள்ளைகளுக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் மகிமையான விடுதலை

...a) அசுத்தாவியின் பயத்திலிருந்து விடுதலை

...b) தவறான மதங்களிலிருந்து விடுதலை

...c) நமது பிரஜைக்குரிய கடமைகளிலிருந்து விடுதலை

...d) மோசேயின் பிரமாணங்களிலிருந்து விடுதலை

விடைகள் : 8a) அசுத்தாவியின் பயத்திலிருந்து விடுதலை b) தவறான மதங்களிலிருந்து விடுதலை d) மோசேயின் பிரமாணங்களிலிருந்து விடுதலை

மோசேயின் பிரமாணப்படி சிலர் வாரத்தின் ஏழாவது நாளை (சனிக்கிழமை) ஆசரிக்க வேண்டும் என்று குழப்பமுற்று இருக்கின்றனர். இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து வாரத்தின் முதல் நாளில் எழுந்தப் படியினால் அவர் உயிர்த்தெழுதலை நினைவுக் கூரும்படி கிறிஸ்தவர்கள் (தேவப்பிள்ளைகள்) வாரத்தின் முதல் நர்ளாகிய ஞாயிற்றுக்கிழமையை பரிசுத்தப்படுத்தி அந்த நாளில் ஆராதிக்கின்றனர். நம்முடைய அலுவல்களிலிருந்து வாரத்தின் ஒரு நாளை விடுமுறை நாளாக்கிக்கொண்டு அந்நாளில் தேவாலயத்திற்கு

அவரை ஆராதிக்கும் படியாக கடந்து செல்கிறோம். இதனை கடமைக்காகவோ கட்டாயத்திற்காகவோ நாம் செய்யாமல் அவரை நேசிக்கிறபடியினால் அப்படிச் செய்கிறோம்.

*"கர்த்தருடைய நாளில் நான் ஆவிக்குள்ளானேன்."*

வெளிப்படுத்தல் *1:10*

"ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது பண்டிகை நாளையும் மாதபிறப்பையும் ஓய்வு நாட்களைக்குறித்தாவது, ஒருவனும் உங்களை குற்றப் படுத்தாதிருப்பானாக." கொலோசெயர் **2:16**

## நீங்கள் செய்ய வேண்டியது

9. ஓர் தேவப்பிள்ளைக்கு வேதம்போதிப்பது

...a) எந்த வகையான ஆகாரத்தையும் புசிக்கலாம்

...b) அவர்கள் மோசேயின் பிரமாணத்திற்கு கட்டப்பட்டிருக்கின்றனர்

விடை : 9a) எந்த வகையான ஆகாரத்தையும் புசிக்கலாம்

## கவலைகளிலிருந்து விடுதலை

உங்கள் பரம பிதா உங்களை நேசிப்பதாலும், உங்கள் மீது கரிசனையுள்ளவராயிருப்பதாலும், அவரில் நம்பிக்கையாய் இரு.

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகள் எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்."

1 பேதுரு **5:7**

"என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம். என்னத்தைத உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்

இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறூர். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.'' மத்தேயு *6:31-33*

## நீங்கள் செய்ய வேண்டியது

*10.* 1 பேதுரு *5:7*ஐ மனப்பாடம் செய்க

*11.* நீ எதை குறித்தாவது கவலை படுகின்ருயா? அவற்றை ஜெபத்தால் அவருக்குத் தெரிவியுங்கள்

## வியாதியிலிருந்து விடுதலை

உனது உற்ற நண்பராகிய இயேசு, பெரிய வைத்தியராவார். அவர் உன்னை நேசித்து, நீ நல்ல ஆரோக்கியமுள்ளவனுயிருக்க விரும்புகின்ருர். அவர் பூமியில் சரீரத்திலிருந்த நாட்களில், ஜனங்களை நோய்களிலிருந்து விடுவித்தது போல், இன்னும் ஜனங்களின் வியாதிகளை, ஜெபத்திற்கு பதிலாக விடுதலையாக்குகிருர். நீ வியாதியாய் இருக்கும் போது உன் சபைப்போதகரோ மூப்பர்களோ வந்து ஜெபிக்க கேட்கலாம். அவர்கள் உன் தலை மீது கைவைத்து தேவன் உன்னை சுகப்படுத்தும்படியாக ஜெபிப்பார்கள். அல்லது உன் மேல் எண்ணெய் பூசி ஜெபிக்கக்கூடும். இப்படி ஜெபிப்பது, பரிசுத்தாவியின் வல்லமையை விசுவாசித்து சுகம் பெறுவதைக் காட்டுகிறது.

''...வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' மாற்கு *16:18*

''உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானுக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினுலே, அவனுக்கு எண்ணெய் பூசி

அவனுக்காய் ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாமுள்ள ஜெபம் பணியாளிகளை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவம் செய்தவனுனல் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

யாக்கோபு 5:14,15

## நீங்கள் செய்ய வேண்டியது

12. நீங்கள் சுகமடைய வேண்டுமா? உன் சபைப் போதகரை ஜெபிக்கும்படி கேட்டுக்கொள். கடிதத் தொடர்பு மூலம் கற்றுக் கொண்டிருப்பாயானல், பள்ளியின் முதல்வர்க்கு தெரியப்படுத்திஞல் அவர்கள் உனக்காய் ஜெபிப்பார்கள். உன் தேவைகளை பதிலுடன் இணைத்து அனுப்பவும்

## வருங்காலத்தில் விடுதலை

இப்பொழுது நீ பெற்றிருக்கும் விடுதலை, அற்புதமானது. எல்லாவற்றிலிருந்தும் விடுவிக்கும் இயேசு மறுபடியும் இப்பூமிக்கு வரும்பொழுது தேவப்பிள்ளைகளுக்கு அவர் அளிக்கும் மகிமையான விடுதலையைக்கண்டு கொள்வாய். உங்கள் பாவ சரீரத்தை பரிசுத்த பூரண சரீரமாய் மாற்றி உங்களது நித்தியவீடிருக்கும் பரலோகிற்கு உங்களை மகிழ்ச்சியுடன் அழைத்துச் செல்வார். மட்டுமல்ல கிறிஸ்து இயேசு இப்பூமியை பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் முற்றிலும் விடுவிப்பார்.

''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை; துக்கமுமில்லை. அலறுதலும் இல்லை, வருத்தமும் இல்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின.'' வெளிப்படுத்தல் 21:4

"சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தி னின்று, விடுதலையாக்கப்பட்டு, தேவனுடையப் பிள்ளைக் குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள் ளும்."
ரோமர் *8:20*

## நீங்கள் செய்ய வேண்டியது

*13.* வெளிப்படுத்தல் *21:4*ஐ நான்கு முறை வாசித்து, அதன் செய்தியைக்குறித்து தேவனுக்கு நன்றி செலுத்தவும்.

## உங்கள் விடுதலையைக் காத்துக்கொள்ளுதல்

இயேசு மறுபடியும் வந்து, நம்மை தமது நித்திய வீட் டிற்கு அழைத்துச் செல்லுமுன்னர், நமக்கு இன்னும் சாத் தானுக்கு விரோதமான போராட்டம் தொடர்ந்து கொண் டேயிருக்கும். நமக்கு சோதனைகளும், துன்பங்களும் இருந்து கொண்டேயிருக்கும். ஆயினும் நமது விடுதலையை விட்டு விடாதிருப்போமாக.

"நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக் குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" கலாத்தியர் *5:1*

உங்கள் புதிய ஜீவியமும், உங்கள் விடுதலையும் இயேசு கிறிஸ்துவிலிருக்கிறது என்பதை ஒருபோதும் மறந்து விடா தீர்கள். அவைகள் இயேசுவின் பிரசன்னத்திலும், அவர் வல்லமையிலும் உன்னில் சார்ந்து இருக்கின்றன. நீ நல்ல வனுயிருக்க பிரயாசப்படும் உன் பிரயாசத்திஞல் அல்ல. கிறிஸ்தவ வாழ்க்கை (தேவப்பிள்ளையின் வாழ்க்கை) என்பது ஒரு சில சட்டதிட்டங்களை கைக்கொண்டு வாழ்வதல்ல. மகிமையின் நம்பிக்கையாகிய கிறிஸ்து உங்களில் இருப்பதே.

கிறிஸ்துவுக்குள் ஓர் அற்புத புதிய ஜீவியத்தை நீ கண்டுகொண்டிருப்பதால்—நித்திய வாழ்வை மகிமையான

விடுதலையுடன் அநுபவிப்பாய். இவைகள் எல்லாவற்றையும் உன்னில் பத்திரப்படுத்தி வருங்காலங்களிலும், யுகங்களிலும், யுகாயுகமாய் நித்திய பேரின்பத்தையும், மகிழ்ச்சியையும் கண்டடைவாய்.

''இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறன், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.'' 2 கொரிந்தியர் 5:17

''கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறர். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடையக் குமாரனைப் பற்றும் விசுவாசத்தினலே பிழைத்திருக்கிறேன்.'' கலாத்தியர் 2:20

## நீங்கள் செய்ய வேண்டியது

14. உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை

...a) தவருது கடை பிடிக்கும் சட்டங்களைச் சார்ந்தது

...b) கிறிஸ்துவின் பிரசன்னம் எப்பொழுதும் உன்னுடன் இருப்பதைப் பொறுத்தது

...c) நீ நல்லவனுயிருக்க எவ்வளவு கஷ்டப்படுகிருய் என்பதைப் பொறுத்தது

விடை : 14b) கிறிஸ்துவின் பிரசன்னம் எப்பொழுதும் உன்னுடனிருப்பதைப் பொறுத்தது

இப்பொழுது நீங்கள் வெற்றிகரமாய் 6-10 பாடங்களை முடித்து, உங்கள் விடைத்தாளை பூர்த்திசெய்ய ஆயத்தமாய் இருக்கின்றீர்கள். உங்கள் பதில் விண்ணப்பங்களை உங்கள் ஆசிரியருக்கு அனுப்பிவைக்கவும்.

# பாராட்டுக்கள்

இப்புத்தகத்தில் உள்ள பாடப்பகுதியை இப்பொழுது நீங்கள் முடித்திருக்கிறீர்கள். இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்திருக்கும் என்று நம்புகின்றோம். இரண்டாவது பாகமாகிய வினாத்தாளை பூர்த்தி செய்து உங்கள் ஆசிரியருக்கு அனுப்பவேண்டும் என்பதை நினைவில்கொள். உங்களது பூர்த்தி செய்யப்பட்ட வினாத்தாள் திருப்திகரமாயிருப்பின், உடனே திருத்தி அடுத்த பாடத்தினை அனுப்பிவைப்போம்.

# புதிய ஜீவியம்

## இறுதி வினாத்தாள்

குறிப்புகள் :

* இக்கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் புத்தகத்திலுள்ள எல்லா கேள்விகளுக்கும் விடையளித்திருக்க வேண்டும்.

* சரியான விடைகளுக்கு மட்டும் அடியில் கோடுபோட்டு இக்கேள்வித்தாளை மட்டும் எங்களுக்கு அனுப்பவும். புத்தகம் அனுப்பவேண்டாம்.

1. இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்று கொண்டவுடனே நீங்கள் (1) தேவபிள்ளையாய் (2) நல்லவராய் (3) பரிசுத்த சீஷனாய் மாறுகிறீர்கள்

2. இயேசுவில் உள்ள புது வாழ்க்கையில் நீங்கள் பெற்றுகொள்ளுவது (1) வாழ்க்கையில் ஓர் புதிய நோக்கம் (2) வியாதியிலிருந்து விடுதலை (3) உலக செல்வாக்கு

3. நாம் மற்றவர்களை மன்னிக்க மறுக்கும்போது (1) தேவன் நம்மை எப்படியாகிலும் மன்னிப்பார் (2) நம் தவறுகளை தேவனும் மன்னியார் (3) மற்றவர்கள் நம்மையும் மன்னிக்க மாட்டார்கள்

4. யோவான் 10:10 கற்பிப்பது யாதெனில் (1) இரட்சிக்கப்பட நல்ல வாழ்க்கை நடத்த வேண்டும் (2) தேவ பிள்ளைக்கு தவறே ஏற்படுவதில்லை (3) நாம் இயேசுவின் பராமரிப்பில் பாதுகாக்க படுகிறோம்

5. பழைய ஏற்பாடு எழுதபட்டது (1) இயேசுவின் பிறப்பிற்கு பிறகு (2) இயேசு இப்பூமியிலிருக்கையில் (3) இயேசுவின் பிறப்பிற்கு முன்.

6. ஆவிக்குரிய வளர்ச்சியில் முன்னேற (1) உடலுக்குரிய பயிற்சி நன்றாய் செய் (2) தேவனில் அமர்ந்திரு (3) தேவனுக்கென்று கடினமாய் உழை.

இப்பாடம் எவ்விதம் உங்களுக்கு பயனளித்தது என்பதை சுருக்கமாய் எழுதவும்.

பதிவு எண்..................

தேதி..............................

உங்கள் பெயர்..................................................................

விலாசம்..................................................................

..................................................................

..................................................................

..................................................................

7. தேவ சத்தத்தை கேட்க கூடிய மூன்று விதங்களாவன: (1) ஜோசியம் பார்த்தல், மற்ற நண்பர்கள், ஜெபம் (2) தியானம், கைரேகை பார்த்தல், பத்திரிக்கை (3) ஜெபம், வேத வாசிப்பு, மற்ற சிஷர்கள்

8. ஒரு தேவனுடைய பிள்ளை ஜெபிக்க வேண்டியது (1) சபையில் மட்டும் (2) காலையில் மட்டும் (3) எந்தநேரமும்

9. மனுஷர் முன்பாக இயேசுவை குறித்து அறிக்கை பண்ணுகிறவனை அவர் (1) ஆசீர்வதித்து நல்ல பெலனை அருளுவார் (2) பிதாவின் முன் அவனை குறித்தும் அங்கனமே செய்வார் (3) நாம் சாட்சி பகரும் அனைவரையும் இரட்சிப்பார்.

10. தசமபாகத்தை சரியாய்கொடுக்கும் ஓர் தேவப்பிள்ளையை தேவன் (1) ஆசீர்வதிக்கிறார் (2) அவருக்கு நமது பணம் வேண்டாததால் கவனிக்கவே மாட்டார் (3) கவனிப்பார், ஏனெனில் நாம் அவருக்குக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

11. தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுப்பவர்களை தேவன் (1) நேசிப்பார் (2) தள்ளி விடுவார் (3) தண்டிப்பார்.

12. ஓர் தேவப்பிள்ளை வாழவேண்டிய முறைகள் காணப்படுவது (1) புதிய ஏற்பாட்டில் மட்டும் (2) பழைய ஏற்பாட்டில் மட்டும் (3) முழு வேதாகமத்திலும்.

13. மத்தேயு 5:11-12 வசனங்களில் இயேசு, பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருப்பது எவ்வாறெனில் (1)தேவப்பிள்ளையாய் மாறினதின் காரணத்தால் நீங்கள் நிந்திக்கப்படுவதால் (2) கோபப் படாமல் இருப்பதால் (3) பத்துக்கட்டளைகளை கைக்கொள்ளுவதால்.

14. பரலோக இராச்சியத்தை குறித்து சிந்தனையுடையவர்களுக்கு இயேசு வாக்கு பண்ணியிருப்பது (1) இப்பூமியில் ஏழைகளாய் இருத்தல் (2) உலகபிரகாரமான செல்வம் (3) உலக பிரகாரமான தேவைகளும் சந்திக்கப்படும்.

15. நாம் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதை குறித்து இயேசு போதித்தது (1) அதை போன்றே நாமும் தேவனால் நியாயத்தீர்க்கப்படுவோம் (2) அதன் மூலம் நாம் மற்றவர்களுக்கு உதவிச் செய்கிறோம் (3) நாம் எதை செய்ய வேண்டும் என கற்று கொள்ளுவோம்

16. ஒரு புத்தியுள்ள மனிதன் கற்பாறையின் மேல் வீடுகட்டுவானெனில் அந்த பாறை உவமிக்கப்பட்டிருப்பது (1) உதாரத்துவம் (2) நற்கிரியைகள் (3) கீழ்படிதல்

17. ஒரு தேவ பிள்ளையின் வாழ்க்கையில் பாசுத்த ஆவியானவர் உருவாக்கும் சில கனிகளாவன (1) சுயம், தீய நடக்கை, பொறுமை (2) அன்பு, சமாதானம், தாழ்மை (3) அற்புதங்கள், பலவித பாஷைகள், அற்புத விடுதலைகள்

18. ஒரு தேவபிள்ளையின் பேச்சு (2) தன் சாட்சிக்கு உகந்ததாய் இருக்கவேண்டும் (2) தன் சாட்சியோடு இணைவில்லாததால் எவ்விதமிருப்பினும் தன் வாழ்க்கையை பாதிப்பதில்லை.

19. எபேசியர் 6:4 பெற்றோர்களுக்கு கற்பிப்பது யாதெனில் (1) பிள்ளைகள் நடக்கைக்குரிய பொறுப்புக்களை சபைக்கு விட்டு விட வேண்டும் (2) பள்ளிக்கு விட்டு விட வேண்டும் (3) கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்க வேண்டும்.

20. நாம் பயப்பட வேண்டிய தேவையில்லை, ஏனெனில், (1) கைவிடுவதில்லை என தேவன் வாக்கு பண்ணியுள்ளார் (2) எப்படியாயினும் பயப்படவேண்டிய தேவையில்லை (3) எதையும் மேற்கொள்ள நாம் பெலனுடையவர்களாயிருக்கிறோம்.

- இக்கேள்வித்தாளை மட்டும் பிரித்தெடுத்து உறையினுள் வைத்து சரியான தபால் தலை ஒட்டி எங்களுக்கு அனுப்பவும்.

Tomi I

L1110TL90